தென்பகுதி
இரயில்வேமென் யூனியன்
மகாநாட்டில்

கோவை

ஜி. டி. நாயுடு

ஆற்றிய சொற்பொழிவு

9—1953

: திருச்சிராப்பள்ளி

G.D.Naidu
Coimbatore

அன்புள்ள தலைவர் அவர்களே, தோழர்களே,

எந்த வழக்கங்களையும், முன்பின் பாராமல் நான் முழுதும் ஒரேயடியாக பின்பற்றுவதில்லை யானாலும், எனக்கு இங்கு பேச வாய்ப்பு அளித்த தற்கு வழக்கப்படி என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு காரியமும், காலமும், செய்கையும், சந்தர்ப்பங்களும் ஒன்றுக்கொன்று கலந்து நடப்பது இயல்பு. இந்த முறையில் என்னை இங்கு பேச அனுமதித்தது எந்தெந்த விஷயங்களை பேச எதிர்ப் பார்க்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. எதைப் பற்றிச் சொன்னால் இங்கு கேட்பவர்களுக்கு சந்தோ ஷமாயிருக்கும் என்பதும் தெரியாது. நானும் இம் மாதிரி சந்தர்ப்பங்களில் பேசப்போனதுமில்லை. நாலைந்து தடவை எலெக்ஷன் விஷயமாகவும், இரண் டொரு தடவைகளில் தமிழர் மகாநாடுகளிலும் பேசி யிருக்கின்றேன். ஆனால், பல தடவைகளில் நான் குறிப்பான விஷயங்களுக்காகக் கூட்டிய கூட்டங்களில் பல முக்கியமான தொழில் அபிவிருத்தியைப்பற்றி யும், இயந்திர சாதன உபயோகங்கள் விஷயமாகவும், கல்விபோதனை முறைகளைப்பற்றியும், சுகாதாரம், சமூக அபிவிருத்தி முதலியவைப்பற்றியும் பேசியிருக் கிறேன்.

ஒவ்வொரு சமயங்களில் எனது மனநிலை ஒவ் வொரு கட்சி சார்பில் சாய்ந்திருந்தாலும், எந்தக் கட்சியிலாவது மெம்பர், அல்லது எந்த ஸ்தானத் திலும் இருந்தது கிடையாது. எந்த கட்சியினுடைய போக்கையும் பார்த்து நான் அறிந்து கொள்ளு முன்பே, கம்யூனிசத்திலுள்ள சில தத்துவங்களும், காங்கிரசிலுள்ள சில தத்துவங்களும், நடைமுறையில்

எனது செய்கையில் பரவியிருந்தன, இன்னும் இருந்தும் வருகின்றன. எப்பொழுது, இம்மாதிரி சில முறைகளின் தொடர்பு இருந்ததோ அப்போது அந்தந்தக் கட்சிகளின்பேரில் ஒரு பிரியம் ஏற்படுவது சகஜமே.

ஆனால், அந்த கட்சிகளில் நெருங்கிப் பழகினபோது, அதாவது நான் ரஷியாவுக்குப் போய்வந்த பின்பு அந்தக் கட்சியின்மேலிருந்த மோகமும், அதே மாதிரி பம்பாய், கல்கத்தா, லக்னௌ முதலிய இடங்களில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக்கு போய்வந்த பின்பு தலைவர்களின் எண்ணங்களுக்கும், கொள்கைகளுக்கும் முழு மாறுபாடாக மற்ற இடங்களில் நடந்துவந்த காரியங்களைப் பார்த்ததில், அதன்பேரில் இருந்த நம்பிக்கையும் குறைந்துவிட்டது. இதன்றி, ஜஸ்டிஸ் பார்ட்டி, திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் முதலியவற்றின் பேரிலும், அவைகளிலிருந்த சில உயர்ந்த கொள்கைகளினால், அந்தக் கட்சிகளின் சார்பிலும் இருந்தேன்.

ஆனால், முன்பே சொன்னபடி, எந்த கட்சிகளிலும் மெம்பராகவோ, வேறுவிதமாகவோ, நெருங்கிய தொடர்புவைத்துக்கொண்டதில்லை. இருந்தாலும், இந்த ஒவ்வொரு கட்சியிலுமுள்ள மிகவுயர்ந்த நோக்கங்கள் சிலவற்றை நான் மிகவும் விரும்பி, உண்மையோடும், மரியாதையோடும் எனது அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்திருக்கின்றேன். இதனாலேயே, ஒவ்வொரு கட்சியிலிருப்பவர்களிலும் அநேகம்பேர் நெருங்கிய நண்பர்களாகவே இருக்கிறார்கள். அதே சமயத்தில், சில கட்சிகளில் சில கொள்கைகளை நான் வெறுப்பதால் அநேக விரோதிகளும் இருக்கின்றார்கள். அநேகமாக இதற்குக் காரணம் என் உண்மை நிலையை இவர்கள் அறியாமையே.

நான் கம்யூனிசக்கொள்கைகளில் சிலவற்றை காரியங்களில் நடத்திவந்தபோது என்னை கம்யூனீஸ்ட் என்று ஒருவரும் கூறவில்லை. ஆனால் மற்றும் சிலரோடு சேர்த்து சன்னியாசி நாய் என்று கூறி வந்தார்கள். சில காங்கிரஸ் முறைகளை நாள் தோறும் நடக்கும் பல செய்கைகளில் கடைப்பிடித்து வந்தபோது, ஈவு இரக்கமற்ற வஞ்சகன் என்று என்னைச் சொல்லிவந்தார்கள்.

புகையாகவும் மண்ணாகவும் வேறு உபயோகமில்லாமல்போகும் வஸ்துக்களையும் கஷ்டப்பட்டு அவ்விதம் போகாமல்செய்து சரியான உபயோகத்திற்கு கொண்டுவந்து மீதப்படுத்தியபொழுது, கரன்சி நோட்டு அடிப்பவன் என்று சொல்லிவந்தார்கள். எந்த வரியும் ஒரு ரூபாய்கூட பாக்கியில்லாமல் செலுத்தி வந்திருக்கும்போதும், களங்கமில்லாமல் மிக விளக்கமாக எந்தவித மாறுபாடும் செய்யமுடியாத வகையில் கணக்குகள் வைத்திருந்தபோது, பொய் கணக்கு எழுதுகிறவன் என்றும், வரிப்பணத்துக்கு டிமிக்கி கொடுக்கிறவன் என்றும், என்னென்னமோ கும்பகோணம் செய்கிறவன் என்றும் விளம்பரம் செய்தார்கள். இது தவிற, கடன்காரனாக இருந்தபோது லக்ஷாதிபதி, கோடீஸ்வரன் என்றும், பெரிய முதலாளி என்றும் சொன்னார்கள். தொழிலினால் சிறு சொத்து சேமித்து வைத்திருந்தபோது கடன்காரன் என்றும், இன்சால்வெண்டு என்றும் சொன்னார்கள். இன்றைக்கும் என்னை கம்யூனிஸ்டு என்று சிலரும், காங்கிரஸ் முதலாளி என்று சிலரும், திராவிடக் கழக நாஸ்திகன் என்று சிலரும் சொல்லுகிறார்கள். இங்கு வந்திருப்பவர்களில் அநேகர் என்னைப்பற்றி இம்மாதிரி அபிப்பிராயப்பட்டோ, அல்லது கேள்விப்பட்டோ இருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

ஒரு கூட்டத்தில் உபாத்தியாயர்களே கூடி இருக்கும் பக்ஷத்தில், எவ்வாறு மிக உபயோகமுள்ள கல்வியை அதிசீக்கிரத்தில், மந்தமாகவுள்ள இளைஞர்களுக்கும்கூட கற்பிக்கலாம் என்பதைச் சொல்லலாம். மாணவர்களே அந்த ஒரு கூட்டத்தில் இருக்கும் பக்ஷத்தில் எவ்வாறு உபாத்தியாயர்களுடைய சிறு உதவியினாலோ அல்லது இல்லாமலேயோ தனது தன்மைக்கேற்ற உபயோகமுள்ள கல்வியை மிக கஷ்டமின்றி அதிசீக்கிரத்தில் கற்றுக் கொள்ளலாம் என்பதைச் சொல்லலாம்.

அரசியல் வாதிகளே கூட்டத்திலிருக்கும் பக்ஷத்தில் எவ்வாறு அரசியலை நல்ல முறையில் நடத்தலாம், எவ்வாறு சேதங்களைத் தவிர்த்து, தேசத்தின் இரத்தம் ஒழுகிப்போவதைத் திருத்தலாம், எவ்வாறு குறைந்த வரிகளைக் கொண்டோ அல்லது நமது பெரியார் முன் ஒரு சமயம் சொன்னபடி, ஒருவித வரியும் இல்லாமலேயே அரசியலை நடத்தலாம், எவ்வாறு பொது ஜனங்களை மிக விரைவில் படித்த அறிவாளிகளாகச் செய்யலாம், ஆஸ்பத்திரிகளுக்காக விரையமாகும் பணச்செலவுகளை நிறுத்தி, ஆஸ்பத்திரிகளே இல்லாமல் எவ்வாறு பொதுஜனங்களை சுகஜீவிகளாக இருக்கச் செய்யலாம் என்பதைப்பற்றி அரசியல் வாதிகளுக்குச் சொல்லலாம்.

இனி, கோடீஸ்வரர்களோ, மற்ற நாட்டிலுள்ள முதலாளிகளோ இருக்கும் பக்ஷத்தில், எவ்வாறு தொழில்களை விருத்தி செய்யலாம், தொழிலாளர்களுக்கு எவ்விதம் உதவி செய்யலாம், எவ்வாறு தம்முடைய செல்வத்தையும், தேச செல்வத்தையும், தொழிலாளிகள் செல்வத்தையும், பொது ஜனங்கள் செல்வத்தையும் பெருக்கலாம், இன்னும் சொல்லப்

போனால் எவ்வாறு செல்வத்தை கொள்ளை அடிப்பது, எவ்வாறு தொழிலாளர்கள் என்கின்ற பூச்சிகள் அல்லது மிருகங்களை உறிஞ்சுவது என்பதைப்பற்றியுங்கூட சொல்லலாம். இதே மாதிரி தொழிலாளர்கள் மட்டும் இக் கூட்டத்தில் இருக்கும் பக்ஷத்தில் எவ்வாறு தொழிலாளர்கள் தங்கள் தொழில்களை சரிவர செய்யவேண்டும் என்பதையும், தங்கள் வாழ்க்கை நிலையை எப்படி வைத்திருக்கவேண்டும் என்பதையும், தங்கள் நன்மையையும், தேச நன்மையையும் எவ்விதம் விருத்தி செய்வதென்பதையும், அதோடு வேண்டுமானால் எவ்விதம் ஸ்ட்ரைக் செய்வது, எவ்விதம் சோம்பேறிகளாக இருந்துகொண்டே சம்பாதிப்பது என்பதையும்கூட சொல்லாம். இங்கு கூடியிருக்கின்ற தோழர்களில், இது தொழிற்சங்கக் கூட்டமாயிருப்பினும், மற்றவரும் வந்திருக்கிறீர்கள். இம் மாதிரி நிலையில், நான் எந்த ஒரு விஷயத்தைப் பற்றி இங்கு அகப்படும் குறைந்த நேரத்தில் எல்லோரும் அறியுமாறு விளக்கமாகச் சொல்ல முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை.

எந்த ஒரு விஷயத்தை முழுதும் விளக்கமாகச் சொல்லியபின், இதைக் கேட்பவர்களில் ஒரு சிலராவது நடைமுறையில் கொண்டுவரும் பக்ஷத்தில், அந்தச் சொற்பொழிவு மிகப் பயனுடையதென்று சொல்லலாம். மேலே சொன்ன பல விஷயங்களில் நான் எல்லாம் தெரிந்தவன் என்று சொல்ல வரவில்லை. ஆஸ்பத்திரி இல்லாமல் சுகமாயிருப்பது, வரியில்லாமல் அல்லது குறைந்த வரியில் அரசாங்கத்தை நடத்துவது, தொழில் கல்விக்கு அநேக வருஷங்கள் செலவிடுவதை சில வாரங்களில் அல்லது சில மாதங்களில் குறைந்த செலவில் அதிக

அறிவு அடையச்செய்வது என்று சொன்னால், உண்மையாகவே ஒவ்வொருவரும் அவ்விதம் சொல்பவர்களை இன்னும் முழுப்பைத்தியக்காரன் ஆகவில்லை என்றுதான் சொல்லுவார்கள். எனக்குத் தெரிந்தவரையில், என் அனுபவத்தில், நீங்கள் எவ்வாறு நினைத்தாலும் சரி, நான் செய்து பார்த்த சிறிய முயற்சிகள் மூலம் மேலே சொன்னவைகள் சாத்தியமானவை என்று உறுதியாக இன்றும் சொல்லுகிறேன்.

இன்றைக்கு 12 வருடங்களுக்கு முன்பு நான் அமெரிக்காவிலிருந்தபோது, ஒரு இங்கிலீஷ் சினிமாப் படத்தை தமிழ் படமாக எடுத்தபோது, அதன் முதல் பாகத்தில், ஆரம்பத்தில் நான் சொன்னதாவது: கண்ணுக்கு முன்னால் நடக்கும் காரியங்களை உலக முழுவதும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணத்திலும் நம் கண்ணுக்கு அப்பால் நடக்கின்றவற்றோடு ஒப்பிடும்போது, நம்கண்ணுக்கு முன்னால் நடந்தவை ஒரு அணுவிலும் ஒரு அணு அளவே ஆகும். அதே மாதிரி நான் மேற்சொன்ன விஷயங்களில் எனக்கு தெரிந்திருப்பது ஒரு அணுவிலும் ஒரு அணுவளவே ஆகும். ஆனால் மேகங்களிலிருந்து வரும் மழைத் துளிகள், நம்மேல் இங்கு விழுகின்ற ஒரு துளியைத் துடைத்தால் அது ஆவியாகப் போய்விடுகிறது. அதே மேகங்களிலிருந்து வருகின்ற பல துளிகள் சேர்ந்து உலக முழுவதும் ஒவ்வொரு ஜீவராசிக்கும் உணவையும் நீரையும் கொடுப்பதோடன்றி அளவிட முடியாத நாச வேலைகளையும்கூட செய்துவிட்டுப் போய்விடுகின்றது. அதுபோலவே, நான் எண்ணியதையும், செய்துவந்ததையும், நீங்களும் மற்றும் எல்லோரும் பார்த்து, சிந்தித்து, அதன்பின் சரியென்று தோன்றின், செய்ய முன் வருவீர்களானால்,

பலதுளி பெருவெள்ளமாவது மாதிரி நான் மேற் சொன்ன ஒவ்வொன்றையும் அல்லது முழுவதையும் சாதிக்கலாம் என்பதே என்னுடைய எண்ணம்.

இப்பொழுது இக்கூட்டம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட கூட்டமாகையால் தொழிலாளர் களுக்கு சில உகந்த எனது அனுபவங்களைச் சொல்ல விரும்புகின்றேன். பொதுக் கூட்டங்களில் பொதுவாக நீங்கள் தொழிலாளிகள் ஒழுக்கமாக இருங்கள், சந்தோஷமாக இருங்கள், நல்ல வழியில் நடவுங்கள், எல்லாம் கடவுள் செயல், அவன் காப்பாற்றுவான், ஸ்ட்ரைக் செய்யாதீர்கள், ஒருவர் மீது கோள் கூறாதீர்கள், என்று இம்மாதிரி பொது வாசகங்கள் அநேக நிமிஷம் அல்லது மணிக்கணக்கில் மிகப் பொதுப்படையாகச் சொல்லி சொற்பொழிவை தந்துவிட்டுப் போகலாம்.

ஆனால், ஒவ்வொரு கூட்டங்களிலும், ஒவ்வொரு தலைவர்களும் இம்மாதிரி பொதுப்படையாகச் சொற் பொழிவாற்றாதிருந்ததில்லை. இதே உபதேசங்கள் ஆத்திச்சூடி முதலிய சிறு நூல்களில்கூட இருக்கின் றன. ஆனால் ஒவ்வொரு வாக்கியமும், ஒவ்வொரு செய்யுளும் மறைமுகமாகவும் பொதுப்படையாகவும் இருப்பதை அநேகர் எல்லாவற்றையும் ஒருமித்து தெரிந்துகொள்ள முடிவதில்லை. தெரிந்து கொண்டாலும் அதிலுள்ளவையையும் ஞாபகத்தில் வைக்கவும் முடியாது. ஞாபகம் இருந்தாலும் பல சந்தர்ப்பங்களால் நடைமுறையில் கொண்டுவர முடியவில்லை. எவ்விதம் விரைவில் சொன்னாலும், எந்த காரியங்களையும் செய்யும்போது நடந்த விதங்களைச் சொல்வதாலோ நடப்பவற்றை சினிமாப் படமூலம் காட்டுவதாலும் மிகத்தெளிவாக அறிந்து

கொள்ளலாம். ஆதலின், தொழிலாளர்கள் சம்பந்தமாக எனது 30 ஆண்டு பழக்கத்தில் வந்தவற்றில் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன். இவற்றை விளக்கப் புகும்போது, அரசியல் விஷயங்களையும் பேசும்படி வந்துதான் தீருமென்று பயப்படுகிறேன்.

ஒவ்வொரு சமயங்களிலும், மாணவர்களே, அல்லது தொழிலாளர்களே, அல்லது பெண்களே அரசியலில் எந்தக் காரணத்தைக் கொண்டும் கலக்கக் கூடாது என்று வற்புறுத்தி வந்திருக்கிறேன். ஆனால், இன்று தொழிலாளர்களும், தொழில்களும், முதலாளிகளும், அரசியலும் இருக்கின்ற நிலையில், அரசியலைப்பற்றி சொல்லாமல் இருக்கமுடியாது. பொதுவாக, பெரிய பொதுக்கூட்டங்களில் ஏதாவது ஒரு கட்சி, மற்ற ஒரு கட்சிக்காரரைப்பற்றிய குற்றங் களை எடுத்துச் சொன்னாலோ அல்லது வேறு விதமாக தூற்றுவதாக இருந்தாலோ, அதைத்தான் ஜனங்கள் பொதுவாக ரசிக்கிறார்கள். கூட்டமும் அதிகம் கூடுகின்றது. பெருங்கூட்டத்தைப் பார்க்கும் போது பேசுபவர்களுக்கும் உணர்ச்சியேறிவிட்டால், மேன்மேலும் பேசிவிடுகிறார்கள். அல்லது பேசு பவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மை யோர் இருக்கும்போது தாங்கள் செய்த நற் காரியங் களையோ அல்லது தாங்கள் கனவில் கண்ட நற் காரி யங்களைப்பற்றியோ பேசும்போது அக்கட்சியைச் சார்ந்தவர்கள் மிகவும் ரசிக்கின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் எந்த கட்சியையும் சார்ந்த வர்கள் அல்ல என்று நினைக்கிறேன். ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்திருந்தாலும், இச்சமயத்தில், கட்சியை விட்டு பொது நிலையில் இருந்து கேட்பீர்கள் என்று நினைக்கின்றேன்.

நான் சொல்லப்போகும் விஷயங்களில் என் அனுபவத்தில் வந்ததை மட்டும் கூறுகின்றேன். வெறும் எண்ணங்களை அல்ல. அல்லது குறை களைச் சொல்ல வரவில்லை. அனுபவத்தில் நடந்தவற்றையும் அவற்றைக்கொண்டு அனுமானத் தில் வந்தவற்றையும் தான் சொல்லுகின்றேன். அநேக விஷயங்கள் நான் செய்தவற்றைப் பற்றியும் சரியாகவோ, முழுவதுமோ, சிற்றளவோ தெரிந்த வற்றை சொல்லுகின்றபடியால், என்னைப்பற்றி விளம்பரம் செய்து கொள்ளவோ, தற்புகழ்ச்சிக் காகவோ பேசுகிறேன் என்று நினைக்கலாம், ஒரு வருக்கொருவர் பேசிக்கொள்ளலாம். நானும் விளம் பரங்களுக்கும் தற்புகழ்ச்சிக்கும் அப்பாற்பட்டவ னல்ல. நான் மனதில் எண்ணி செய்து முடிக்க வேண்டும் என்று ஆராய்ந்த காரியங்களைக்கூட முதலாவதாக விளம்பரங்களோ, தற்புகழ்ச்சியோ செய்யவேண்டிய இடங்களில் செய்துதான் இருக் கின்றேன். அதனால் ஏற்பட்ட நல்லதும் கெட்டது மான பயனை அடைந்தும்தான் இருக்கின்றேன். காரியங்களில் வெற்றியும் அடைந்துமிருக்கின்றேன். ஆனால் அப்பொழுதும்கூட சுயநலத்துக்காக பொய் விஷயங்களை, இல்லாதவற்றை இருப்பதாகவோ, இருப்பவற்றை இல்லாததாகவோ சொல்லவில்லை. இன்று அம்மாதிரி நிலையில் ஏதாவது சம்பாதிக்கவோ அல்லது ஒரு காரியத்தை கைகூட வைக்கவோ வேண்டும் என்று நான் பேச முன்வரவில்லை. இன்னும் அநேகம் பேர் என்னை மில்லினீர், மல்டி மில்லினீர், லட்சாதிபதி, கோடீஸ்வரன் என்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நானாக சம்பாதித்தது என்னிடம் ஒன்றும் இல்லை என்ற நிலையிலிருந்துகொண்டு இங்கு பேசவந்திருக் கிறேன்.

இன்று நான் சொல்லப்போவதில் நேரிடையாக நான் சம்பந்தப்பட்டவை தவிர்த்து, நான் கேள்விப் பட்ட சில விஷயங்களையும்கூடச் சொல்லுகிறேன். ஆனால், நான் கேள்விப்பட்டவற்றைச் சொல்லும் போது அவற்றை நூற்றுக்குநூறு சரி என்று கூற முடியாது. இவற்றில் அரசியலல்லப்பற்றிய விவரங் களும், மற்றவர்களைப்பற்றிய செய்திகளும் இருக் கலாம். அரசியலிலோ, மற்றவர் விஷயங்களிலோ பாராட்டக்கூடியவை ஒன்றும் இல்லையென்று சொல்ல நான் முன்வரவில்லை. அவற்றைச் சொல்ல வேண்டுமானால், நம் அரசாங்கத்தார் ஆரம்பித்து வெற்றியடைந்திருக்கும் காரியங்களையும், மற்ற வர்கள் செய்து வெற்றியடைந்திருக்கும் காரியங் களைப்பற்றியும், மணிக்கணக்கில் சொன்னாலும் கூட, முடிவுபெறாது.

நம் தேசம் சுதந்திரம்பெற்ற பின்பு இவ்வளவு குறுகிய காலத்தில் மிகப்பிரமாதமாகச்செய்த காரி யங்கள் கணக்கில் அடங்காததுதான். நாம் ஒவ் வொருவரும் நம் வீட்டிலோ, நம் ஊரிலோ ஒரு சிறு தொழிலிலிருந்துகொண்டு அவரவர்கள் தத்தம் காரி யங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஒரு சிறு இடைஞ்சல்வரினும் அதுவே நமக்குப் பெரிய தாகத்தோன்றும். ஆனால், நம் அரசாங்கத்தார் மேற் கொண்டு செய்திருக்கும் மிகப் பெரிய அணைக்கட்டு வேலைகள், சுரங்கவேலைகள், ரயில்வே, ஏரோப் ளேன், மோட்டார், பஸ், கப்பல் போக்குவரத்துமுத லியவற்றில் அடைந்திருக்கும் பலன்களையும், கல்வி யின் முன்னேற்றத்திற்காக பெருக்கியிருக்கும் காரி யங்களும், விஞ்ஞானத்துக்காக பிரமாண்டமான சாதனங்கள் அமைத்திருப்பதும், விவசாய உணவுப் பெருக்கத்துக்காக மேற்கொண்ட அரிய வேலை

களும், வேலையின்மையைத் தடுப்பதற்காகச் செய் திருக்கும் தொழில் ஸ்தாபன பெருக்கத்தையும் நாம் நினைத்து ஒருக்காலும் சந்தோஷப்படுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

முதலில் நம் ஒவ்வொருவருக்கும் சாதாரணமாக சில சிறு கஷ்டங்கள், குறுக்கிடுகின்றன. அதாவது வேலையின்மையும், உணவு இல்லாமையும் முதலில் இடம் பெறுகிறது. அதன்பின்பு எதை எடுத்தாலும் எதிர்ப்பது என்ற ஒரே நோக்கத்தின்பேரில், அரசியல் மாற்றுக்கட்சிக்காரர்கள் நாட்டில் இருக்கும் கஷ்டங் களை மாத்திரம் பிரசார வாயிலாக எடுத்துக்கூறுவது, அதோடு, நல்லது ஏதாவது இருந்தாலும், அதையே கெடுதல் என்றும் பிரசாரம் செய்வது, உதாரணமாக கோடிக் கணக்கிலிருக்கும் மக்களில் ஏதாவது ஒருவர் அகஸ்மாத்தாக வைத்தியர் உதவியின்றி இறந்து போகும் பட்சத்தில் அதை "இந்த காங்கிரஸ் அரசாங் கத்தில் வைத்திய உதவியே கிடைக்காமல் இறந்து விட்டார்" என்று மும்முரமாக பிரசாரம் செய்வது, அல்லது எங்காவது ஒருவர் வேலையின்மையாலோ, வேலையிருந்தும் தான் பழகிய சோம்பேறித்தனத் தால் வேலை செய்யாததாலோ, வேலை செய்தும் பலன் கிடைக்காததாலோ, அல்லது வேலைசெய்யச் சக்தியில்லாததாலோ, பசியால் செத்துப்போனால் அதை எடுத்து பெரிய கொட்டை எழுத்துக்களில் பிரசுரம்செய்வதும், பிரசங்கமேடைகளில் பிரசாரம் செய்வதும், அனுதினமும் நடக்கிற காரியங்களாய் விட்டன.

அரசாங்கத்தாலோ, அரசியல் கட்சிக்காரர்க ளாலோ அல்லது தொழிலாளர்களின் இயக்கத் தூண்டு தலினாலோ, சில லட்சம் பேர்கள் ஸ்ட்ரைக் செய்யும்

போது, ஒரு பேப்பரில் 40 லட்சம் பேருக்கு உண வில்லையென்று கொட்டை எழுத்தில் பிரசுரம் செய் யப்படுகிறது. 15 ஆயிரம் பேர் பட்டம் பெற்றவர் களும், பல லட்சக் கணக்கில் படித்தவர்களும், இன் னும் பல லட்சம் பேர்கள் படியாதவர்களும் வேலை யில்லாமலிருக்கின்றனரென்று கொட்டையெழுத்தில் பிரசுரம் செய்யப்படுகிறது. ஆனால், நம் தேசத்தில் இருக்கும் 36 கோடி மக்களில் ஒரு பாதியாக உள்ள பெண்களில் 3-ல் 1 பாகம் சிறு வயதினரும், 3-ல் 1 பாகம் முதியோர்களுமாக 12 கோடி மக்களும், ஆண்களில் அதேமாதிரி 12 கோடி மக்களும், ஆக 24 கோடி மக்கள் இந்தியாவில் வேலையில்லாமலிருக் கிறார்கள் என்று கொட்டை எழுத்தில் பிரசுரமாகாம லிருப்பதைப்பற்றி நாம் மிக சந்தோஷப்படவேண் டியதாயிருக்கிறது.

சென்ற உலக மகா யுத்தத்துக்குப்பின், மற்ற தேசங்களை ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒரு சில தேசங்கள் தவிர, அநேக தேச மக்கள் மிகப் பரிதாபமான நிலையில் இன்றும் கஷ்டப்பட்டுக்கொண்டுதானிருக்கின்றனர். அவ்விதம் பார்க்கும்போது நம் தேசத்திலுள்ள கஷ்டம் மற்ற நாடுகள் படும் கஷ்டத்தில் ஒரு பாகம்கூட இருக்கா தென்று சொல்லலாம். ஆனால் ஜெர்மனி, ஜப்பான் முதலிய மிகச்சீரழிந்த நாடுகளும்கூட எவ்விதம் இவ்வளவு விரைவில் மற்ற நாடுகளைவிட மேம்பாடு அடைந்துவந்திருக்கிறது, ஏன் நம் நாடு அப்படி வரவில்லையென்று நீங்கள் கேட்கலாம்.

யுத்தத்துக்கு முன், அந்த நாட்டு ஜனங்கள் இருந்த நிலையில், நம் நாட்டு ஜனங்கள் இல்லை யென்று நாம் நினைத்துக்கொள்ள வேண்டும்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அர்த்தமற்றதும், மிகப் பழமையானதுமான பழக்க வழக்கங்களில் நாம் ஊன்றி இருந்து முன்னேற்றமடையாது வாழ்ந்து வந்திருப்பதால் நாம் இருந்த நிலைமையை சரியானபடி யோசித்துப் பாராமலும், பசியாலும், வியாதியாலும் ஏதாவது சில காரணங்களால் செத்திருந்தாலுங்கூட, கூடுமானவரை எவ்வளவு பேருக்கு பசிக்கு உணவும், வியாதிக்கு வைத்தியமும், உழைப்பாளிக்குத் தொழிலும், மாணவர்களுக்குக் கல்வியும் கிடைத்திருக்கின்றன என்பதை கொஞ்சம்கூட எண்ணாமல், குறைபாட்டை மட்டிலும் சொல்லிக் கொண்டிருப்பதில் என்ன பலன் கிடைத்துவிடப் போகின்றது?

நம் அனுபவத்தில் ஏதாவது ஒரு தொழில் ஸ்தாபனத்தை முதல்முதலாக நிருவும்போதும், அல்லது இருப்பதை சீர்திருத்தும்போதும், புதுவீடு கட்டும்போதும், இருக்கும் வீட்டை சீர்திருத்தி அமைக்கும்போதும், ஒருவர் தாமிருக்கும் இடத்திலிருந்து, தாம் நாள்தோறும் செய்யும் வேலையை விட்டு, வெளியூருக்கு ஏதாவது ஒரு அலுவலாகப் போகும்போதுகூட ஏதாவது பிசகுகளும், ஒரு சிறியதாகவோ, பெரியதாகவோ, நஷ்டமோ, வீண் விரயமோ ஆகும்படியான சந்தர்ப்பங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டாவது சகஜம். அதேமாதிரி குருட்டு நம்பிக்கையிலும், அடிமையிலும் அடிமையாகப் பல நூற்றாண்டுகளாகக்கிடந்த நம் தேசமக்களை விழிப்புறச்செய்யும் ஒரே வேலையில் ஈடுபட்டுப் பழகியிருந்த காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர்களும் இன்று அரசாங்கத்திலிருந்து ஆட்சி நடத்தும்போது அநேக தப்பிதங்களும், அநேக நஷ்டங்களும் உண்டாவது இயற்கைதான். அநேக வருடங்களாக தம்

சொந்த தேச அரசியலை நடத்திவந்திருக்கும் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு, அரசியல் அனுபவமேயில்லாத இந்த தலைவர்கள் நடத்தும் ஆட்சியைக் குறைகூறுவதில் அர்த்தமேயில்லை. எவ்வளவோ தப்பிதங்களும், எவ்வளவோ வீண்விரயங்களும், நஷ்டங்களும் ஆயிருந்தாலுங்கூட, இந்த குறுகிய காலத்தில் செய்துமுடித்திருக்கும் அநேக அரியபெரிய காரியங்களைப்பார்த்து நாம் மகிழவேண்டியதுதான். முதலில் செய்யவேண்டியதை பின்னும், பின்னால் செய்ய வேண்டியதை முதலிலும் செய்தார்கள் என்ற தப்பிதத்தை வேண்டுமானால் சொல்லாம். ஒரு குறிப்பிட்ட இடத்திலோ, ஒரு குறிப்பிட்ட தொழிலிலோ இருக்கத் தகுதியுள்ளவர்கள் வேறு தகுதியில்லாத இடத்திலோ, தொழிலிலோ வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தப்பிதத்தைச் சுமத்தலாம்.

அரசியலில் சம்பந்தப்பட்டவர்களில் ஏதோ ஒரு சிலர், அரசாங்கத்தார் செய்திருக்கும் பெரிய நற்காரியங்களை, நல்ல காரியம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லும் பக்ஷத்தில், அப்பேர்ப்பட்டவர்களை கட்சியிலிருந்து புரண்டுவிட்டார்கள் என்று புகார் செய்துவிடுகிறார்கள். இது மக்கள் இயல்பு.

ஒரு தடவை நம் தேசத்தலைவர்களில் ஒருவரான நமது ராமசாமிப் பெரியார், ராஜகோபாலாச்சாரியார் மந்திரியாக வந்த பின்பு செய்திருக்கும் சில நற்காரியங்களையும் புகழ்ந்து எழுதியபொழுது, அதைப்பற்றி என்னிடமே பலர், இவர் கட்சியிலிருந்து விலகிவிட்டதாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இதுவரை நான் பேசியவற்றைப் பார்த்து அரசாங்கத்தாரை புகழ்வதற்காக நான் வந்தேனென்றுகூட நீங்கள் நினைக்கலாம். உண்மையைச்

சொல்லவேண்டுமானால் அரசாங்கத்தார் செய்து வந்திருக்கின்ற நற்காரியங்களைப் புகழ்ந்தும், தகாத வற்றை வன்மையாக, பயமின்றி கண்டித்துப் பேசவே தான் இங்கு வந்திருக்கிறேன். ஆனால் இங்கு கிடைக்கும் சிறிய நேரத்தில், புகழ்வதும் இகழ்வது மாக இரண்டையும் சொல்லித் தீர்க்கமுடியாது. இதில் எது அவசியம், எது உடனடியாக வேண்டியது என்பதைக் கவனித்துப் பார்த்தால், சில அவசரமான விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை எடுத்துச் சொல்லி பரிசீலனை செய்து உடனே திருத்தாது போகும் பக்ஷத்தில் நம் அரசாங்கத்தார் இதுவரையில் செய்து வந்திருப்பதும், இனிமேல் செய்வதற்குத் திட்டமிட்டு செய்யவேண்டியிருப்பதையும் சூரியன் முன் பனிபோல் அழிந்துபோகக் கூடிய நிலைமையில் இருக்கின்றது. நான் சொல்பவை ஒன்றும் புதிதல்ல. அநேகம் பேர் இதைப்பற்றி அநேக இடங்களில் சொல்லியும், இடித்துக்கூறியும் வந்திருக்கின்றனர். நானும் கூட அநேக சந்தர்ப்பங்களில் சொல்லி வந்திருக்கிறேன். இங்கு இருப்பவர்களில் சிலர் பல தடவை கேட்டவர்களாயும் இருக்கலாம். சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளைபோல ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு சந்தர்ப்பத் திலும் சொல்லுவதற்கு எனக்கும் வெட்கமாக இருக்கிறது.

எதைப்பற்றிச் சொன்னாலும் எனக்கு பயம் ஒன்றும் கிடையாது. ஏதாவது உண்மையான குற்றங் குறைகளை விளக்கி எடுத்துச் சொன்னாலும் கூட, அரசாங்கத்தில் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள ஒவ்வொரு தலைவரும் சீறி விழுந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவ்விதம் இருந்தாலும்கூட இன்று இருக்கும் அவசர நிலையைப் பொருத்தும், அநேகம்

பொதுமக்கள் தொழிலாளர்களுடன் நடக்கின்றவை போன்ற விஷயங்கள் தெரியாதிருப்பதாலும், திருப் பித் திருப்பி நான் சொல்லுகிறேன் என்ற குற்றத் தைப் பற்றி கவலைப்படாமல் நீங்கள் கேட்கும்படி நான் மறுபடியும் சொல்லுகிறேன்.

அரசாங்கக் கட்சி சார்பிலுள்ள சிலர், சில விஷ யங்களையும், என்னிடமுள்ள சில ரிக்கார்டுகளையும் கூட சட்டசபையில் கேள்விகள் கேட்பதற்காகவும், அதன் மேல் நடவடிக்கை எடுப்பதற்காகவும், என் னைக் கேட்டார்கள். எந்தக் கட்சியிலும், சட்ட சபைகளிலும் எனக்கு ஒரு நம்பிக்கையுமில்லாததால் நான் ரிக்கார்டுகளைக் கொடுக்கவில்லை. ஆனால் நாளுக்கு நாள், நம் நிலைமை மோசமாய்ப் போய்க் கொண்டிருப்பதால், அவற்றில் சிலவற்றையாவது இங்கு அவசியம் சொல்லவேண்டுமென்று விரும்பு கிறேன்.

இன்று நம் நாட்டில் எழும்பியிருக்கும் மிகப் பெரிய பிரச்னை வேலையில்லாத் திண்டாட்டம் ஒன்றுதான். சில நிபுணர்களும், தலைவர்களும் சொல்லுகின்றபடி, இது உணவு உற்பத்தியால் ஏற்பட்ட குறையல்ல. வாழ்க்கைத் தரம் தாழ்ந்து போனதாலும் அல்ல. நம் வாழ்க்கைத் தரம், மற்ற தேசங்களைவிட, எவ்விதத்திலும் குறைந்ததல்ல. எளிய முறையில் பழக்கத்தில் வந்த நம் வாழ்க்கைத் தரம், மற்ற நாடுகளைவிட உயர்ந்தது என்பதை விஞ்ஞானரீதியிலோ அல்லது அனுபவரீதியிலோ கணக்குகள் மூலமாக நிரூபிக்கமுடியும். ஆனால் இங்கு அதற்கு நேரம் இல்லை. ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். சிலர் சொல்லுகிறபடி அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளில் வாழ்க்கைத் தரத்தைப் பற்றி அறிந்து அதன்படி நம்

நாட்டிலும் கொண்டுவரலாமென்றால் அதை ஒரு பைத்தியக்காரத்தனமென்றுதான் சொல்லவேண்டும். அவ்விதம் கொண்டுவரும் பட்சத்தில், அதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை எவ்விதத்திலும் தவிர்க்கமுடியாது. நமது பழக்கவழக்கங்களும் இயற்கை வளங்களும் மாறுபட்டிருப்பதை மறந்து திருத்தவும் முடியாது என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

இங்கு ஒருவருடைய வருட வருமானம் ரூ. 200 அல்லது 300 என்று ஒரு தொகையை வைத்துக் கொண்டு, இங்கிலாந்தில் 300 பவுன் — அதாவது பவுனுக்கு ரூ. 13¼ வீதம் கிட்டத்தட்ட ரூ. 4,000 வருமானம் என்றும், அமெரிக்காவில் 2,000 டாலர், அதாவது டாலர் ரூ. 5 வீதம் ரூ. 10,000 வருமானம் என்றும், எண்ணுக்கு எண் இங்கு வரும்படியில்லை யென்றும் சிக்கன ஆராய்ச்சி, பொருளாதார ஆராய்ச்சி நிபுணர்கள் தங்களுடைய நினைப்பளவில் வெளியிடுபவற்றை எடுத்துக்கொண்டு நாம் ஒவ்வொருவரும் குதிப்பதில் பயனில்லை. அதற்குப்பதில் நமது ஒரு ரூபாய்க்கு இங்கிலாந்தின் பவுன் இரண்டு, அமெரிக்கா டாலர் நான்கு என்று வைத்து நாம் சந்தோஷப் படலாம்.

இன்று நமக்கு வேண்டியது நம் நாட்டின் செல்வ வளர்ச்சி. ஒரு தேசத்தின் செல்வம் என்பது அங்குள்ளவர் இடைவிடாது செய்துவந்ததும், செய்கின்றதும், செய்யப்போவதுமான தொழில்களும் அதனால் ஏற்படும் நலன்களும் தான் செல்வம். இதற்கு வேண்டியது என்ன? விவசாயத்துக்கு நிலம், மற்றத் தொழிலுக்கு மூலப்பொருள், இவற்றைக் கொண்டு தொழில் செய்ய தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் இவைகள் தான் தேவை. இவைகளே தான் மூலதனம். ஸ்டர்லிங் அல்ல. டாலர் அல்ல.

ரூபாய் அல்ல. ஸ்டர்லிங்கும் டாலர்களும் நம்மை கீழ் நிலைக்குத்தான் கொண்டுபோய்விடும். அமெரிக்கா வுக்கும், இங்கிலாந்துக்கும், கனடாவுக்கும், ஆஸ்திரே லியாவுக்கும் டாலர்களும், பவுன்களும், எந்த தெய்வ லோகத்திலிருந்தும் வரவில்லை. அவர்களாகப் பாடு பட்டு, அவர்களது ஒற்றுமையினால், அவர்களுடைய பலத்தினால், அவர்கள் வளர்த்துவந்த அறிவினால், தங்களுடைய இயற்கை வளங்களை பயனுடையதாக உபயோகப்படுத்தியதால், அவர்களுக்கு டாலர்களும் பவுன்களும் கிடைத்திருக்கின்றன. இதை நாம் தெரிந்துகொண்டும், பார்த்துக்கொண்டும் நம்முடைய வேலையை, அதாவது நம்முடைய நாணயத்தை, 5-ல் 1-பங்கு அல்லது 10, 15-ல் ஒரு பங்குக்கு கீழ்தரமுள்ளதாகவே நாம் மதிக்கும்படி, இன்னும் இருக்கக் காரணம் என்ன ?

நம் தேசத்துக்கு எல்லாம் இருந்தும், சரியான திட்டங்கள் வகுத்து, அதன்படி நடக்காமல் ஒவ் வொன்றிலும் ஒவ்வொன்றும் பிரிந்து பிரிந்து நடப்ப தாலே, இன்று நாம் இந்த நிலையில் இருந்துவரு கிறோம். அரசாங்கத்தார் அநேக சத்காரியங்களை இதுவரை சாதித்திருந்தாலும் கூட, சர் சி. வி. ராமன் ஒரு தரம் சொல்லியதுபோல், முதலில் செய்வதை முதலிலும், பின்னால் செய்வதை பின்னாலும் செய்ய வேண்டியதை விட்டுவிட்டு, மாறுபாடாக நடந்து வருவதுதான் இந்நிலைமைக்குக் காரணம். நம் அர சாங்கம் இப்போது மிக இளவயசுக் குழந்தைப் பருவத்திலிருப்பது நாம் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியம். இப்போது நடத்தி வருவதும், நடந்து போன நிர்மாணங்களின் முடிவைக் காணும்போது, நம் அரசாங்கம் இளங்குழந்தை அரசாங்கமாக இருக் கிறதென்றே சொல்லவேண்டும்.

இப்பொழுதிருக்கும் அரசியல் கட்சிகளில் காங்கிரஸ்கட்சிதான் மிகப்பெரியது. அதற்கடுத்து கம்யூனிஸக்கட்சி விரிவடைந்துகொண்டிருக்கிறது. ஆனால், மற்ற நாடுகளிலுள்ள கம்யூனிஸத்தைப்போலன்றி இங்கு இவர்கள் அனுசரித்துவரும் விபரீதக்கொள்கைகளையும், விபரீதப் பிரசாரங்களையும் பார்த்து அதை விரும்புவதில்லை. அதே சமயத்தில் காங்கிரஸ் கட்சியினால் எதிர்பார்த்த பலன்கிடைக்காததாலும், காங்கிரஸ் கட்சியே, மற்றவர்களும் பொதுவாக வெறுக்கின்ற கட்சியாகிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு இப்பொழுது, சிமெண்ட் ரோடு போட்டுக்கொடுக்கின்ற மாதிரி செய்துவருகின்ற செயல்களால், காங்கிரஸ் கட்சியையும் வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். இப்பொழுதிருக்கும் அரசியல் சட்டம் காங்கிரஸ் கட்சியோ, மற்ற எந்தக் கட்சியோ எதைச் செய்வதற்கும் முட்டுகட்டையாகவே போய்விட்டது.

நம் நாட்டிலுள்ளவர்கள், எல்லோரும், படித்த அறிவாளிகளாய், எல்லோரும் தொழில் அனுபவம் பெற்றவர்களாய், எல்லோருக்கும் வீடு, உணவு வசதி கிடைத்துக்கொண்டு வரும் சமயத்தில், இப்பொழுதிருக்கும் அரசியல் சட்டம் தகுதியாகத்தான் இருக்கும். நம் நாடும், இந்தக் கட்சிகளும், இந்த அரசியல் சட்டம் போகும் போக்கில் இன்னும் அரை நூற்றாண்டு ஆனாலும் கூட, இந்தச் சட்டத்தை பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு நாம் வரமுடியாது.

இந்தச் சட்டம் நம் தேசத் தலைவர்கள் செய்ததுதான். நிபுணர்கள் செய்ததுதான். ஆனால் இந்தச் சட்டத்தின் ஆசிரியர்களில் தலைவரும் சட்ட நிபுணருமான டாக்டர் அம்பேத்காரும் கூட அதை தானே முன்வந்து கொளுத்தவேண்டும் என்று

சொல்லுகிறார். எவ்விதமோ சட்டம் அமைந்து விட்டது. அமைத்தபின் கஷ்டமோ, நஷ்டமோ, அது அமுலிலிருக்கும்போது, நாம் அதன்படி நடந்துதான் ஆகவேண்டும்.

தலைவர் ராமசாமிப் பெரியாரும், அறிஞர் அண்ணாதுரையும் இப்போதிருக்கும், சட்டத்தையும் அரசியல் கட்சியையும் எதிர்த்து பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தக் கட்சிகளின் அடிப்படை நோக்கங்கள் மிக உயர்ந்தவை. ஆனால், இப்போது அவசியம் இல்லாததுடன், பிராமணர், பிராமணரல்லாதவர், கடவுள் உண்டு, கடவுள் இல்லை, வடக்கத்தியான், தெற்கத்தியான் என்பவற்றை தம்தம் கட்சிப் பிரசாரத்தில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது இந்தக் காலத்தில் அவசியமில்லை யென்பது என் எண்ணம்.

20, 30 வருடங்களுக்கு முன்பு வைதீகக் கொள்கைகள் அல்லது, கடவுட் கொள்கைகள் மிதமிஞ்சி இருந்ததென்பது வாஸ்தவம்தான். அவற்றால் பல நூற்றாண்டுகளாக நம் நாடு முன்னேற்றமடையாமலிருந்ததும் வாஸ்தவம்தான். இப்போது அந்த மோகம் குறைந்துவிட்டது. 20, 30 வருடங்களுக்கு முன்பு, மதப்பற்று, கடவுட்பற்று, வைதீகப்பற்று முதலியவற்றில் ஆழ்ந்து பழகினவர்களில் இப்பொழுதிருக்கின்றவர்கள் மாத்திரம் பழைய நம்பிக்கையில் பற்றுதல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இளம் வயதில் இந்தப் பழக்கம் பழகியவர்களை, எத்தனை பெரியாரும், எத்தனை அண்ணாவும், அவர்களுடைய தோழர்களும் வந்து கதறினாலும்கூட மாற்ற முடியாது. ஆகையால், அவர்கள் பழக்கத்தை மாற்றுவதற்குப் பதில் அவர்கள் போக்கிலேயே விட்டுவிடு

வது உசிதம். இவர்கள் இதுவரை செய்துவந்த பிர சாரத்தினால் இம்மாதிரி பழைய வழக்கங்கள், ஜாதி வித்தியாசம், இன வித்தியாசம் என்ற பேதங்கள் மிக மிகச் சிலரைத் தவிர்த்து எல்லா இளைஞர்களி டத்தும் அடியோடு மறைந்துபோய்விட்டது. எங்கா வது ஒரு சிலரிடத்தில் ஏதாவது மூட பழக்கம் இருந்தால் இந்தக் காலத்தில் அந்தப் பழக்கத்தினால் ஒரு கெடுதியும் நடந்துவிடாது.

இனி, வடக்கத்தியான், தெற்கத்தியான் என்ற வித்தியாசத்தை எடுத்துக் கூறுகிறார்கள். இதை எடுக்கும்போது கிழக்கத்தியான் அதாவது மதராஸுக் காரன், மேற்கத்தியான் அதாவது மலையாளத்தான், தெற்கத்தியான் அதாவது தூத்துக்குடியான்என் கின்ற பிரச்னையையும் எடுத்துக்கொள்ளவேண்டி வருகிறது. அதன்பின் இப்போது காங்கிரஸ் கட்சி செய்துவருகின்ற இரண்டாவது குற்றமாகிய ஆந்திரப் பிரிவினையைப்போல் ஆந்திரம் நீங்கலாகிய மற்ற பாகத்தைத் தமிழகம் என்றும், கன்னடம் என்றும், மலையாளமென்றும், அதன்பின் நீலகிரியி லுள்ள தொதவர்கள், ராமநாதபுரத்து முக்குலத் தோர், ஆர்காடு ஆச்சாரியார், சித்தூர் ஐயர், கோயம் புத்தூர் கவுண்டர், மதுரை நாடார், காஞ்சிபுரம் முதலியார், காரைக்குடி செட்டியார் என்று பிரித்து, அதன்பின் ஒவ்வொரு குடும்பமும் பிரிந்து, தாய், தகப்பன், அண்ணன், தம்பி என்றும்கூட பிரிய வேண்டிய நிலை ஏற்படும். இப்பொழுதே மறைமுக மாக, அரசாங்கத்தின் சில கொள்கைகள் கால வித்தி யாசத்தால் இம்மாதிரி பிரிவினைகளுக்கு அடிகோலிக் கொண்டுவருகின்றன. அதைப்பற்றி பின்னால் சொல் லுகிறேன்.

இந்த வித்தியாசங்களைக்கொண்டு. காப்பிக் கடை மறியல்களோ, துணிக்கடை மறியல்களோ, கல்லக்குடி என்று பேர் மாற்றங்களையோ செய்யும் முறை எனக்குச் சரியானதாகத் தோன்றவில்லை. ஆனால், இதற்காக அரசியலார் அடக்குமுறைகளை கையாண்டதையும், அதில் கலந்திருந்தவர்களைச் சிறையில் வைத்திருப்பதையும் ஒருக்காலும் சரியென்று சொல்ல நான் முன்வரவில்லை. ராஜகோபாலாச்சாரியார் தலைவர்களை அழைத்து, ஒருமனத்தோடு பேசி ஏதாவதொரு சுமுகமான வழிக்குவந்திருக்கலாம். இவ்வளவு மனக்கசப்புகளும், தொந்திரவுகளும் ஏற்பட்டிருக்காது.

அறியாமையில் மூழ்கியிருக்கும் பெரும்பான்மையோர், பயத்தாலோ, அறியாமையாலோ, ஏமாற்றத்தாலோ, ஓட்டுக்கொடுத்து தங்கள் பிரதிநிதிகளாக அனுப்பியிருக்கிறவர்களால் இப்போது நாட்டுக்கு ஒன்றும் செய்யமுடியாது. அவர்களையும் நம் நாட்டு மக்கள்தானென்று தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்பினார்கள். ஆனால், இப்போதுதான் பொது மக்கள் தாங்கள் செய்த தவறுகளை உணர்ந்து கொண்டு வருகிறார்கள். இதோடு, பொதுமக்களுக்கு ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டி, தகுதியான பிரதிநிதிகளைத் தெரிந்து எடுக்கச் செய்தால், இந்த அரசியல் சட்டம் நமக்குப் பிடிக்கவில்லை என்றால் அதை அடியோடு அகற்றி, நாட்டின் முன்னேற்றத்துக்கு வேண்டிய சட்டங்களைச் செய்து நாம் முன்னேறலாம்.

வட நாட்டார் சிலபேர் துணிக்கடைகளோ, பணக்கடைகளோ, காப்பிக்கடைகளோ வைத்து லாபம் சம்பாதிப்பது வாஸ்தவம். ஆனால், அதில்

எவ்வளவு சம்பாத்தியம் கிடைக்கிறது, அதில் எவ்வளவு இங்கேயே செலவு செய்கிறார்கள், என்பதை மற்றவைகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இது ஒரு சிறு விஷயமாகும். சில அயலார்கள் எவ்விதத்திலோ, லைசென்சுகள் பெற்றும் இன்னும் பலவிதமான வழிகளை வகுத்தும் நம் நாட்டின் செல்வத்தை ஆயிரக்கணக்கில் அல்ல, லக்ஷக்கணக் கில் அல்ல, சில கோடிக்கணக்கில் அல்ல, பல கோடிக் கணக்கில் கொள்ளையடிக்கிறார்கள் என்பது உண்மை தான். அதேமாதிரி, இன்ஸ்யூரன்ஸ், பேங்க் முதலிய தொழில்கள் மூலமாக கொள்ளையடிக்காவிட்டாலும், அவர்களாக கொள்ளையடிப்பதற்கு பதில் நாமாக நம் சொத்தை அனுப்பிக்கொண்டு இருக்கிறோம்.

நாட்டு மக்களின் சம்பாத்தியத்திலிருந்து புள்ளி விபரப்படி 1951-ம் வருடத்தில் ரூபாய் எழுபது கோடியே எண்பத்திமூன்று லட்சத்து தொண்ணூற்றிஎட்டு ஆயிரம் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி களுக்கு வெளியே போயிருக்கிறது. தகுந்த பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கும் பட்சத்தில் ஒரேயடியாக இந்தத் தொகை முழுவதை யும் அரசாங்க உபயோகத்திற்கு கிடைக்கச் செய்திருக்கலாம். இன்னும் அநேக விதங்களில் நம் ரத்தம் வெளியேறுவதை தடுக்கலாம். இம்மாதிரி தடுக்கும்பட்சத்தில் நம் அரசாங்கம், பெரியார் முன்பு ஒரு தடவை சொன்னபடி, வரிகள் என்ற பெயரில் நம் மக்களுடைய தோலையே உறித்து அரசாங்கம் நடத்தவேண்டிய நிலைமை ஏற்படாது.

ஆகவே, அனுபவத்தில் முதிர்ந்த ராமசாமி பெரியாரும், இளைஞர்களை ஒன்று திரட்டிய அறிஞர் அண்ணாத்துரையும், தாங்கள் கொண்டிருக் கும் மிகச் சிறிய மாறுபாடுகளை அகற்றி, அரசியல்

கட்சிகளாலும், அரசாங்க சட்டங்களாலும் எந்தப் பயனையும் பெறமுடியாது என்பதை மக்களுக்கு அறிவுறுத்தி, தென்னாடு தனியாகவேண்டுமென்பதை மட்டிலும் வற்புறுத்தி வருவார்களேயானால், அதை விட நம் நாட்டுக்கு அவர்கள் செய்யும் பணி வேறு ஒன்றும் இருக்காது. இதற்கு நம் நாட்டு காங்கிரஸி லுள்ள ஒவ்வொருவரும்கூட இவர்களை ஆதரிப் பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

ஒருசமயம், சர் சி. பி. ராமசாமி அய்யர், சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சி. எஸ். ரத்தின சபாபதி முதலியார் ஆகிய அவர்கள் மூவரையும் 'கோபால் பாக்'கில் நடந்த ஒரு கூட்டத்தில் கேள்வி கேட்டேன்: "இப்பொழுது இருக்கும் அரசாங்கம் கம்யூனிஸ்டு கட்சி வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு, அவர்கள் செயல்கள், அந்தக் கம்யூனிஸக் கட்சி வலுவடைய வழிகோலிக்கொண்டிருக்கிறது. இந்நிலைமையில் உங்களைப் போன்ற நிபுணர்களும், தலைவர்களும், விலகியிருக்கும் பட்சத்தில் இன்னும் நிலைமை மோசமாகத்தான் போகும். உங்களைப் போன்றவர்கள் ஏன் ஏதாவது செய்யக்கூடாது? நீங்கள் முன்வராவிட்டால் நாங்கள் கம்யூனிஸக் கட்சி யிலோ அல்லது ஏதாவது ஒரு கட்சியிலோ சேர்ந்து விடுவோம்", என்று கேட்டேன். அவர்கள் அதற்குத் தகுந்த பதிலைச் சொன்னார்கள். ஆனால் அதைக் கூற இங்கு அவகாசமில்லை.

வடக்கிலிருந்து வந்தவர்கள் மட்டும் இங்கு கொள்ளையடிக்கவில்லை. நம் இடையிலேயேயிருந்து கொண்டு அநேகர் கொள்ளையடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதற்குக் காரணம் இப்போது வடக்கிலிருந்து வந்து இங்கு வியாபாரம் செய்பவர்கள்

அல்ல. அதே மாதிரி இங்கிருந்து வடக்கே போய் வியாபாரம் செய்பவர்களும் அல்ல. இப்போது அரசாங்கம் இருக்கின்ற இருப்பிடமும், பலவீனமும், அறியாமையும், சுயநலமிகளும்தான் காரணம். தலைமை அரசாங்கம் இந்தியாவின் ஒரு கோடியான வடக்கில் டில்லியில் இருக்கிறது. 100, 200 வருஷங்களுக்கு முன்பிருந்த தலைநகரம் கல்கத்தாவிலிருந்தது. இந்த இரண்டு நகரங்களுடன் போக்குவரத்து தொடர்பு காரணமாக பம்பாயும், கராச்சியும் சேர்ந்தது. தலைமை அதிகாரிகள் இந்த இரண்டு நகரங்களிலிருந்ததாலும், போக்குவரத்து தொடர்பு பம்பாயிலிருந்ததாலும், அந்த இடங்களுக்கு பக்கத்திலுள்ளவர்கள் அடிக்கடி அதிகாரிகளைப் போய்ப் பார்த்து நியாயமான வழிகளிலும், நியாயமில்லாத கெட்ட வழிகளிலும், தங்களுக்கு வேண்டிய லைசென்சு முதலிய மற்ற வசதிகளையும் பெற்று தங்கள் தொழில் வளத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். அப்படி செய்ததோடு டில்லியை கொஞ்சகாலமாகத் தங்கள் கைக்குள்ளும் வைத்துக்கொண்டார்கள். இவ்விதம் சில சுயநலப் புலிகளும், சில ஒழுங்குள்ளவர்களும், உடனுக்குடன் லைசென்சு, பர்மிட்டு பெற்று பல இடங்களில் வியாபாரமோ, தொழிற்சாலையோ துவக்கி விடுகிறார்கள். அஸ்ஸாமிலிருந்தோ, தூத்துக்குடியிலிருந்தோ, கொல்லத்திலிருந்தோ டில்லிக்குப்போய் லைசென்சு வாங்குவது அசாத்தியம். ஆகையால்தான், இந்த இடங்களில் தொழில் விருத்தியடையவில்லை. நமக்கும் இந்தமாதிரி தலைமை காரியாலயம் இங்கிருந்திருக்கும் பட்சத்தில் நம்முள்ளும் சிலர் அவர்களுக்கு மேலாக தொழில் செய்திருப்போம். யாரும் தத்தம் லாபத்துக்காகக் காரியங்கள் செய்வது இயற்கை. வழிகள் மோசமாகயிருந்தாலும் இருக்கலாம். ஆனால், இவைகள் எல்

லாம் சீக்கிரத்தில் திருந்தக்கூடும் என்ற நிலைமை இருப்பதால் இதைப்பற்றி இப்பொழுது விவரிக்கவேண்டிய தில்லை.

மிக நேர்மையுள்ள காங்கிரஸ் பழங்களாகிய நம் இந்தியத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத்தும், பிரதமர் நேருஜியும், ஆச்சாரிய கிருபளானியும் இன்னும் மற்ற அநேக தலைவர்களும் காங்கிரஸ் சீர்குலைந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். காங்கிரஸிலுள்ளவர்கள் அநேகர் கெட்டுப்போய்விட்டார்கள், அஸ்திவாரம் பலவீனப்பட்டுவிட்டது என்று அநேக இடங்களில் வற்புறுத்தி சொல்லுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? இந்நாட்டில் காங்கிரஸ்காரரைத் தவிர்த்து வேறு யாரும் சுதந்திரம் அடையவில்லை. வேறு யாருக்காவது சுதந்திரம் வேண்டுமானால் ஹைக்கோர்ட்டுக்கும், சுப்ரீம் கோர்ட்டுக்கும் போய்த் தான் சுதந்திரம் அடையவேண்டும். ஆனால் லஞ்சப் பேய்களும், கருப்புச்சந்தை அதிபர்களும், இன்னும் மற்ற மிடாவிழுங்கிகளும், எவ்விடத்திலும் எந்த நேரத்திலும் சுதந்திர நடனம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் காங்கிரஸ் செத்துப் போகும் என்று தெரிந்தேதான், கெட்டுப்போய் சாவதைவிட கொலை செய்து போடுவது நல்லது என்று நினைத்து காங்கிரஸையே தொலைத்து விடலாமென்று மகாத்மா காந்தி புத்திமதி கொடுத்தார். இதை யாரும் எடுத்துக்கொள்ளவில்லை.

இந்த நிலைமையிலிருந்துமாற என்ன பரிகாரம்? இந்தியா 4, 5 பாகமாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் சுயேச்சை பெறுமாயின் அரசாங்கத்திலுள்ள பெரிய தலைவர்களும் நிபுணர்களும், அரசியலில் சென்று நம் நாட்டை முன்னேற்றமடையச் செய்வார்கள்.

இதற்கு, இம்மாதிரி பிரிவதற்கு இப்பொழுது கட்சியில் இருப்பவர்கள் இணங்குவார்களா? பிரித்தால் மிகச் சிறிய நாடாய் விடும், பலம் குன்றிவிடும், பின்னும் அடிமையாய் விடுவோம், ஆகையால் சேர்ந்து வாழ வேண்டும், ஒத்துழைக்கவேண்டும் என்று வேதாந்தம் சொல்வார்கள். நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஸ்விட்ஜர்லாந்து முதலிய நாடுகள் மிகச் சிறியதா யிருந்தும் நடந்து வருகிறதில்லையா? அவ்விதம் பிரியாது சேர்ந்திருந்தும் இன்றைக்கு நம் நிலைமை என்ன? ஒரு நாடு மற்ற நாட்டை அடக்கவேண்டு மாயின், அல்லது கெடுக்க வேண்டுமாயின் அநேக படைகள், பிளேன்கள், டாங்குகள், கப்பல்கள் வேண்டும். அநேக துப்பாக்கிகளும், தோட்டாக் களும் வேண்டும்.

இன்றுள்ள நிலையில் நம் நாட்டை அடக்கவோ, கெடுக்கவோ இவையொன்றும் தேவையில்லை. ஒரு நொடியில் அமெரிக்காவும் இங்கிலாந்தும் தாங்கள் சப்ளை செய்யும் எண்ணெயை நிறுத்திவிட்டால் போதும். மறுநாள் கராச்சியிலிருந்து, டில்லி, கல் கத்தாமுதல் டெக்காவரை ஒரே பாகிஸ்தான் ஆகிவிட லாம். மற்ற பாகமெல்லாம் இங்கிலாந்துக்கோ, அமெ ரிக்காவுக்கோ நம் தேசத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி யிலுள்ள விபரீதக்கொள்கைக்கோ அடிமையாகிவிட லாம். இந்நிலையில்தான் நாம் இருக்கிறோம். இன்னும் பல கட்சிகளும், தலைவர்களும் ஒவ்வொரு கட்சி யின் உள்ளேயும் பல பிரிவுகளும், ஒன்றுக்கொன்று விரோதமாக வேலைசெய்துதான்வருகின்றன. காங் கிரஸ் கட்சியை எடுத்துக்கொண்டு பாருங்கள். நம் ராஜ்யத்தைப் பாருங்கள். அடுத்த திருவாங்கூர்-கொச்சி எப்படியிருக்கிறது? இன்னும் ராஜஸ்தான்,

பஞ்சாப்முதலிய ராஜ்யங்களில் எங்கே பார்த்தாலும் அடக்கமுடியாத பிளவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இன்று அளவெடுத்துப்பார்க்கும் பட்சத்தில் அதிர்ஷ்டவசமாக நம் ராஜ்யத்திலிருக்கும் அரசாங்கம் கூடுமானவரையில் நாணயமுள்ளது என்று சொல்லலாம். இதற்கடுத்து பம்பாயைச் சொல்லாம். ஆனால் பெருவாரியான லஞ்ச ஊழல்கள், பிளாக்மார்க்கெட் ஏமாற்றுதல், இவை எந்த இடத்தில் அதிகம் இருக்கிறது என்று கேட்டால் டில்லி, கல்கத்தா முதலிய இடங்களில்தான் முதன்மையாய் இருக்கின்றன என்று சொல்லலாம். மற்றவை இதற்கு அடுத்துதான்வரும். இவற்றை ஒழிக்கச் சரியான மருந்து மேற்சொன்னபடி 4, 5 பாகமாகப் பிரியும் பட்சத்தில் ஒவ்வொரு இடத்திலும் அங்குள்ள நிபுணர்கள் ஒவ்வொன்றையும் நடத்த முன் வருவார்கள். நடத்தவும் முடியும். அவ்விதம் பிரியக் கூடாது என்று உண்மையான எண்ணம் இருக்கும் பட்சத்தில், அமெரிக்கா, கானடா போன்று நம் நாட்டை பெரிய நாடாக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்தால், இந்தியாவின் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களும், மேன்மைதங்கிய முதலமைச்சர் நேருஜி அவர்களும் இப்பொழுதிருக்கும் போக்கில் நமது தேசம் என்னவாகும் என்பதை சரியாக யோசித்துப் பார்த்து தானாக, ஈஜிப்ட் தேசத்தில் சேனாதிபதி தேசத்தை எடுத்துக்கொள்ள முன்வந்ததைப் போன்று, இங்கும் அவ்விதம் நேருவதற்குமுன்பே அரசியல் சட்டத்தை 2, 3 வருடங்களுக்கு ஒத்தி வைத்துவிட்டு, ஆர்மி-கமாண்டர் ராஜேந்திர சிங்ஜியை இவர்களே அழைத்து அவர்களிடம் ஒப்படைத்து, அழுகிப்போயிருப்பவற்றை சீர்திருத்திய பின்பு

இவர்கள் வந்து அரசியல் சட்டத்தை வைத்துநடத்து வார்களேயானால், நாம் எதிர்காலத்தைப்பற்றி ஒரு வாறு நம்பிக்கையோடிருக்கலாம்.

இந்தக் காலத்தில் முற்றும்துறந்த முனிவர்களை யும்கூட பதவி என்கின்ற மோகம் விடுவதில்லை. அதுமாதிரி இவர்களுக்கும் இந்தப் பதவிமோகம் ஏதா வது பிடித்து இவர்களைத் துரத்தியடிக்கும்வரை அது விடுமா என்பது சந்தேகம். நம் ராஜ்ய அர சாங்கக் கட்சி மற்றவர்களைவிட நாணயமுடையது என்று சொன்னேன். மற்றவர்களைவிட ஊழல் குறைவு என்றும் சொல்லலாம். இங்கு சிலசமயங் களில் அளவுகடந்த ஊழல்கள் நடந்துவருகின்றன. இங்கும் யாராவது ஒருவர் ஒழுங்காகவும், தைரியத் தோடும், நேர்மையாகவும், விடாமுயற்சியோடும் பாடு பட்டாலுங்கூட, அரசியல் கட்சியிலுள்ள ஒருவர் சொன்னபடி கேட்கவில்லையானால், ஏதாவது ஒன்றையெடுத்து அதைக் குற்றம் என்று சொல்லி விட்டு, கோர்ட்டுகளுக்குக்கொண்டுபோய் சர்க்காரே தங்களுக்காக தங்கள் சொற்படியோ, தங்கள் சார் பாகவோ நடப்பதற்காக வைத்திருக்கும் டிரிபுனல் களுக்குக்கொண்டுபோய் அன்னாரை டிஸ்மிஸ் செய் வது வழக்கமாயிருந்துவருகிறது.

பேர்களைவிட்டு சங்கதிகளை மட்டும் கூறு கிறேன். எஞ்ஜினீயரிங் காலேஜில் மாணவர்கள் நம் தேசத்தில் சாதாரணமாக 60, 65 சதவீதம் தேர்ச்சி பெறுகிறார்கள். ஒரு பிரின்ஸ்பால் மிக உழைத்து 90 சதத்துக்குமேல் மாணவர்களைத் தேர்ச்சிபெறச் செய்தும், சிபார்சின்பேரில் மாணவர்களை காலேஜில் சேர்க்க எடுக்காததுபோன்ற உள் காரணத்தோடு வேறு சில சுயகாரியத்தையும்சேர்த்து டிரிபுனல் மூல

மாக, தண்டனையளிக்க லாயக்கில்லாத சில அற்ப விஷயங்களை குற்றமாக எடுத்துக்காட்டி டிஸ்மிஸ் செய்யப்பட்டார். அப்பீலிலும்கூட உறுதி செய்யப் பட்டுவிட்டது.

மோட்டார் போக்குவரத்து விஷயங்களில் 5 ரூபாய் முதல் 50,000 ரூபாய்வரை ஒவ்வொரு தடவை லஞ்சங்கள் கொடுத்ததை கண்டுபிடித்துக் குற்றவாளியைத் தண்டனைக்குள்ளாக்கியதற்காக, பொய்க்கேசுகளை ஜோடித்து, குற்றம்கண்டுபிடித் தவரை டிஸ்மிஸ்செய்யப்பட்டது.

குறைந்தது 10, 15 லட்சம் ரூபாய்வரை பிளாக் மார்க்கெட் நடந்த இடத்தில் ஒரு லட்ச ரூபாய்க்கு மேலுள்ள வியாபாரத்தை பிடித்தும் அத் தப்பிதத் திற்காக 20, 30 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெறாமல் மறுத்தும், நெல் மூட்டை பிளாக் மார்க்கெட் விற்பனையைக் கண்டுபிடித்தும் உள்ள ஒருவர்பேரில் பொய்க்கேசு ஜோடிக்கப்பட்டு டிஸ்மிஸ் செய்யப் பட்டார். பிளாக் மார்க்கெட் செய்தவர்கள் சுகமாக வாழ்கிறார்கள்.

நம்பிக்கை மோசடி கேசில் உண்மையைக்கண்டு பிடித்த அதிகாரியை டிரிபுனல்மூலமாகவே டிஸ்மிஸ் செய்யப்பட்டது. மிகவும் நேர்மையாகவும், தைரிய மாகவும், தாட்சணியம்பாராமலும், ஒழுங்கோடு தன் வேலையைப்பார்த்தவரை, லஞ்சக்காரர்களால் பொய்க் கேசு உண்டாக்கப்பட்டு நம் முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார் காலத்திலும்கூட இழுத்து விடப்பட்டிருக்கிறது. இவர் காலத்தில் இவைகள் நடைபெறாது என்று எண்ணினாலுங்கூட நடந்து தான் வருகின்றன. இவைகளெல்லாம் நடந்திருந்

தாலும் மற்ற ஸ்டேட்டில் நடப்பதைப்பார்க்கும் போது இங்கு நடந்திருப்பது மிகச்சிறியது. மிகவும் கொஞ்சமும்கூட. இன்றும் பலவாறான ரெட் டேபிஸம் (Red tapism) நடந்துவருகின்றன.

இதேமாதிரி வேலை நியமனங்களில் அநேக ஊழல்கள் நடந்துவருகின்றன. 'பிளிட்ஸ்', 'கரண்டு' பேப்பர்களில் இதேமாதிரி காட்சிகள் தினந்தோறும் வெளிவருவதைப் பார்க்கலாம். உண்மையாகவே, இம்மாதிரி பேப்பர்கள் 2-3 இல்லாவிடின் அநேக விஷயங்கள் ஒருவருக்கும் தெரியாமல்போய்விடலாம். இம்மாதிரி விஷயம் பேப்பர்களில் ஏதாவது 100-க்கு ஒன்றுதானிருக்கும். பேப்பர்களை வாசிக்கும்போது, அரசியலில் இருப்பவர்களில் சிலர், அக்குறைகளை களைவதற்கோ அல்லது திருத்தி அமைப்பதற்கோ உள்ள மார்க்கங்களை சிந்திப்பதற்கு பதிலாக அந்தப் பேப்பரின்மேல் எரிந்துவிழுகிறார்கள். ஒன்றிரண்டு விஷயங்களில் கைத்தவறுதலால் ஒரு சிறுபிழை ஏற்பட்டிருக்கலாம். அதற்காகக் கேசுகளையும் இழுத்துவிடுகிறார்கள். இம்மாதிரி மேடைகளில் பேசினாலுங்கூட, நேரிடையாக ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும் மறைமுகமாகவாவது அவர்களை நொறுக்கப்பார்க்கிறார்கள். நானும் அம்மாதிரி நொறுக்கப்பட்டவர்களில் ஒருவனானாலும் இன்னும் பூரணமாக நொறுக்கப்படவில்லை.

இப்பொழுது இந்தக் கூட்டம் முக்கியமாய் தொழிலாளர்களுடையது என்பதை மறந்து வேறு பொதுவிஷயங்களைச் சொல்லியிருந்தாலுங்கூட, ஒரு வகையில் தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியவேண்டிய விஷயமென்று நினைத்துதான் சொன்னேன். தொழிலாளர்கள் பல தொழிலில்

ஈடுபட்டிருக்கிறார்கள். சில தொழில்களில் தொழிலாளர்களுக்கு அதிக சம்பளமும், மற்ற ஊதியமும் கிடைப்பதும், கொஞ்சம் பேருக்குக் குறைவாகச் சம்பளம்கிடைப்பதும் அவரவர்கள் திறமையைப் பொறுத்ததாயிருந்தாலுங்கூட, தொழில்களுடைய தன்மையைப்பொறுத்து சில தொழில்களில் அதிக ஊதியமும், சிலவற்றில் குறைவாகக்கிடைப்பதும் இயற்கையே. ஆனால், இதை கவனத்தில் வைக்காமல் எல்லாத் தொழிலாளர்களும் தங்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாய் சம்பளம்வேண்டுமென்று கேட்பதும், அரசாங்கம் எல்லாருக்கும் ஒரேமாதிரி சம்பளம் தான் என்று சொல்லுவதும் எந்தக் காலத்துக்குமே உகந்ததல்ல.

உதாரணமாக, ஒருவர் களைப்பில்லாமல் 16மணி நேரம் வேலை செய்யலாம். ஆனால், மற்ற ஒருவர் 4 மணி நேரம்கூட களைப்பின்றி வேலை செய்ய முடியாது. இதேமாதிரி கல்லோ மண்ணோ எடுக்கத் தெரிந்தவனுக்கு, மிஷின்களிலோ, ரசாயன வேலைகளிலோ திறமைவாய்ந்தவர்கள் அடையும்சம்பளத்தைக் கேட்பது சரியல்ல. 4 மணி நேரம் வேலை செய்கிறவனுக்குக் கொடுக்கும் சம்பளம்தான் 16 மணி நேரம் வேலை செய்பவனுக்கும் கொடுக்கப்படும் என்று சொல்லுவதும் சரியல்ல. இம்மாதிரி கொள்கைகளால் என்ன பலன் விளையும் என்று ஆராய்ந்து சட்டங்கள் செய்தாய்விட்டது. நாமும் ஒப்புக்கொண்டாய்விட்டது.

மேல்நாடுகளில் அநேக நூற்றாண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக, அறியாமை என்பதை அகற்றி, தொழில்களிலும், சமூகத்தொண்டு வேலைகளிலும், வேண்டிய அளவு அறிவடைந்த

பின்பு, தொழில் சங்கங்களும், தொழில் சட்டங்களும் தோன்றின. இந்த விஷயங்களில் நீண்டதூரம் பின்னாலிருக்கும் நம் நாட்டில் நமது அரசாங்கம் வெளிநாடுகளிலுள்ள சங்கங்களையும், சட்டங்களையும் காப்பியடித்து புகுத்திவிட்டார்கள். இவ்விதம் காப்பியடித்ததின் பயனே நம் தொழிலாளர்களின் துன்பத்துக்கு ஒரு காரணம். நீங்கள் தொழில் சட்டங்களும், பாக்டரி ஆக்ட்களும், தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் சட்டங்களும், இண்டஸ்டிரியல் டிஸ்ப்யூட் சட்டங்களும், தொழிலாளர்களுக்கு மிக நன்மை பயக்குகிறது என்று சொல்லலாம். பாம்பின் விஷம் உண்மையாக இனிப்பாகத்தான் இருக்கும். ஆனால் இரத்தத்திற்குள் போனால் என்ன நேரிடுமோ, அதுபோல் உங்களுக்கு நேரிட்டிருக்கிறது.

இது தவிற வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கமும், வாழ்க்கைக்குவேண்டிய பொருள்களுக்கு விலையேற்றம் மற்றொரு பக்கமும் உங்கள்மேல் ஏறிக்கொண்டிருக்கிறது. விலையேற்றங்களுக்குக் காரணங்கள், விவசாயம், வியாபாரம் இவைகளில் அரசாங்கம் இழைத்த தவறுதல்தான் என்று ஒரு சிறிதளவு முன்பே சொல்லியிருக்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் என்கின்ற ஒரு பெரிய பேயையும்கூட அரசாங்கத்தாரேதான் அறிவின்மை என்கின்ற விதைகளைக்கொண்டு உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். அது என்னவென்றால், வரிகள் விஷயத்தில் அரசாங்கம் கையாண்ட முறைதான் முதலில் நிற்கிறது!

இறக்குமதி ஏற்றுமதிகளிலும், தொழில் ஸ்தாபனங்கள் விஷயங்களிலும், ஆர்மி டிஸ்போசல், கவர்ன்மெண்டு பர்ச்சேஸ் முதலியவைகளிலும்

அரசாங்கம் வைத்திருக்கும் கொள்கைகளையும் அதனால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும்பற்றி முழுதும் சொல்லவேண்டும். இவைகளை ரிகார்டு கள் மூலமாய் நிரூபித்துக் காட்டமுடியும். சில காரணங்களை முன்னிட்டு, இப்பொழுது சொல்ல இயலாது. இங்கு நேசமும் போதாது.

தொழிலாளர்கள் இருக்கும் நிலைமையைப் பற்றிச் சொல்லும்பொழுது, முழுவதும் அரசியல் சொற்பொழிவாகிவிடுமே என்று அஞ்சுகிறேன். இன்னும் நான் தொழிலிலேயே ஒட்டிக்கொண்டு இருப்பதா, அல்லது அதைவிட்டு அரசியலிலே குதிப்பதா, முற்றும் துறந்த முனிவனாய் போய் விடுவதா, என்று இன்னும் நான் தீர்மானம் செய்ய வில்லை. எப்பொழுதும் அரசியலையாவது அல்லது ஸ்வாமிகள் பதவியையாவது அடைய நான் விரும்ப வில்லை. தொழிலிலேயே நான் எப்பொழுதும் கண் ணுங் கருத்துமாய் இருந்திருக்கிறேன். இதுவரை இருந்ததைவிட இன்னும் அதிக ஆர்வத்தோடுதான் இருக்கிறேன். அந்த ஆர்வத்தினால் அதிக சக்தியும் இருக்கிறது. இருந்தாலும், சில சந்தர்ப்பங்கள், என்னை அதிலிருந்து வெளியே துரத்திக்கொண் டிருக்கின்றது. அவ்விதம் துரத்தும் வேலையி லிருந்து அதன்பின் நான் செய்யும் தீர்மானம் வரையி லும் உள்ளவைகளைப்பற்றி பேச விரும்பவில்லை.

நானாக அநேக வருஷங்கள் ஏர் பிடித்து உழுதும், தண்ணீர் இரைக்க கவலை ஓட்டியும், தானியத்தை விதைத்தும், அவற்றில் களை எடுத் துக் காவல் காத்தும், தட்டுப்புல் சுமைகள் சுமந்தும், பருத்திக்கொட்டை, கொள்ளு, பிண்ணாக்கு, முதலியவை ஆட்டியும், மூட்டைகள் சுமந்தும்,

உருட்டியும், மற்றவர்களோடு இருந்து விவசாய வேலைகள் செய்துவந்திருக்கிறேன். அந்த சமயத்தில்தான் — தமிழில் நன்னூல், தொல்காப்பியம், தண்டியலங்காரம், உபமான சங்கிரஹம், யாப்பருங்கலக்காரிகை முதலிய தமிழ் இலக்கண நூல்களையும், சிந்தாமணி, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களையும், இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களையும், நாலடியார் நான்மணிக்கடிகை, குறள்முதலிய நீதி நூல்களையும், தமிழில் அப்போது அச்சிலிருந்த வேதாந்த நூல்களையும், வைத்திய நூல்களையும், ஜோதிட நூல்களையும், மற்றும் சந்தையில் விற்ற காலணா, அரையணா புத்தகங்களையும்கூட நான் ஒரு இடைஞ்சலுமில்லாமல், சாவகாசமாய் படிப்பதற்கும், படித்து அரைப் பயித்தியக்காரனாகவோ அல்லது அதைவிட மோசமானவனாகவோ ஆவதற்கும் வாய்ப்புகிடைத்தது.

என்னுடைய 20-வது வயதில் முழுவதும் வெள்ளை நிறமுள்ள ஒரு இங்கிலீஷ்காரனையும் தானாகச் செல்லக்கூடிய ஒரு மோட்டார் சைக்கிளையும் பார்த்தபின், எனக்கு இருந்த பைத்தியம் நீங்கி, வெளியுலகுக்கு வந்து, மருந்து, கடியாரம், பருத்தி பஞ்சுமுதலிய வியாபாரங்களை நானே நேரில் செய்து, அதில் பெரும் லாபம் அடித்து, அதன் பின் பெரும் நஷ்டம் அடைந்து, பிறகு மோட்டார் துடைக்கும் தொழிலில் ஆரம்பித்து, பெரிய பஸ் சர்வீசை நடத்தி, எலக்டிரிக் மோட்டார், ரேடியோ, மோட்டார் பஸ்ஸுக்கு வேண்டிய சில்லரை சாமான்கள் முதலியவைகள் செய்யும் பாக்டரியையும் உண்டாக்கி, ஒவ்வொரு பாகத்திலும் என் கைப்பட வேலை செய்துவந்திருக்கிறேன்.

இவ்வாறு வேலை செய்த காலத்தில் நான் பல வகைப்பட்ட அனுபவங்கள் அடைந்திருக்கிறேன். அவற்றில் பல அனுபவங்கள் அநேகம் பேருக்கு புதியதாகவும் இருக்கலாம். அவற்றைத் தெரிவதால் உடனேயோ அல்லது எப்போதோ ஒரு காலத்தில் ஏதாவது பலன் அடைந்தாலும் அடையலாம். ஆகவே, இங்கு எதைச் சொல்வது, எதை விவரமாகச் சொல்வது என்று தயங்குகிறேன். இந்த 40 வருடங்களில் நடந்த எவ்வளவோ காரியங்களில் சுமார் 5,800 சந்தர்ப்பங்களை ஞாபகத்துக்குக் கொண்டு வரலாம். அதில் எவற்றை இப்போது உபயோகிப்பது என்பது விளங்காதிருக்கிறது. அவைகளுக்கு ஒரு அட்டவணை இருந்தால், வேண்டுமென்று கேட்கும் விஷயத்துக்கு மிக சவுகரியமாகவும், விளக்கமாகவும் தங்குதடையின்றி பதில் சொல்லலாம். அவ்வித அட்டவணை இல்லை. அதனால் கேள்விக்கும் வழியில்லை.

தொழிலாளர்கள், எவ்விதம் விருத்திக்குவந்தார்கள், தொழில்களும் எவ்விதம் நாளுக்குநாள் விருத்தி அடைந்துவந்தன, அவர்களுக்கு என்னென்ன கஷ்டங்கள், என்னென்ன சவுகரியங்கள்கிடைத்தன என்பவற்றின் அனுபவங்களைக்கொண்டு சில வருஷங்களுக்கு முன்பாக என்னென்ன வீண் முறைகளோடு கடைசியாக நடந்துவந்தன, நடந்துவருகின்றன என்பதைப்பற்றிய விபரங்களில் சிலவற்றை மட்டும் இங்கு கூற விரும்புகிறேன். இவற்றில் சில அரசாங்கத்திற்குப் பிடிக்காது. சில புதுத் தொழிலாளர்களுக்குப் பிடிக்காது. சில பொதுஜனங்களுக்குங்கூட பிடிக்காது. சில சட்டங்களுக்குங்கூட பொருந்தாது. அவ்விதம் இருந்தும், தொழிலாளர்கள்

மிகுந்த நல்லுறவோடு சுமார் 30 வருடங்களுக்கு மேலாக, இந்த 2, 3 வருடங்களுக்கு முன்வரை, 2,800 தொழிலாளர்களில் சுமார் 2,540 தொழிலாளர்கள் கடன் இல்லாமலும், ஒவ்வொருவரும் போஸ்டாபீஸில் அல்லது கோவாப்ரேடிவ் பாங்கில் டிபாசிட்டாகவோ அல்லது கையில் ரொக்கமாகவோ சொத்து வைத்துக் கொண்டும், சிலபேர் இந்தத் துகையோடு வீடு, தோட்டம், இடம் முதலியவை வைத்துக்கொண்டும், ஒரு நாளாவது ஸ்ட்ரைக் என்பதே இல்லாமலும் தொழில் நடந்து வந்தது என்று சொன்னால், அநேகம்பேர் ஆச்சரியப் படலாம். இந்தக் காலத்திலுங்கூட ஒவ்வொருவராலும் அப்படியே இருக்கமுடியும் என்றுதான் சொல்லுகிறேன். இது தொழிலாளர்களுக்கு கடினமானதல்ல. ஒரு சமயம் இளமையில் சோம்பேறிகளாயிருந்து, காலத்தை வீணாக்கி எதையும் கற்றுக் கொள்ளாதவர்களுக்கும், உடல் வளையாமல் உட்கார்ந்து யோகம், ஞானம், தத்துவம், அரசியல் முதலிய வாயடிக்கும் வேலைகளைக் கற்றவர்களுக்கும், அடாத பழக்க வழக்கங்களால் வியாதியை அடைந்த பலவீனர்களுக்கும் நான் சொல்வது புதிர் போல் இருக்கலாம். நம்பவும் மாட்டார்கள். தன் சக்திக்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப இளவயதிலேயே விடாமுயற்சியோடு காலத்தை வீணாக்காது ஒரு தொழிலை கஷ்டப்பட்டுச் செய்யக் கற்றுக் கொண்டவனுக்கு நான் சொல்வதில் ஒரு ஆச்சரியமும் இருக்காது, அதிசயமுமிருக்காது.

நான் ஆரம்பித்த தொழில்களின் வளர்ச்சிக்கும், தொழிலாளர்களின் வளர்ச்சிக்கும், இரண்டு விஷயங்கள் அடிப்படையாக எடுத்துக்கொள்ளப் பட்டன.

அதாவது நான் ஆரம்பித்த தொழில்களில் ஒவ்வொரு தொழிலாளியினுடைய தரத்துக்கும், அங்கு இருக்கின்ற பலதரப்பட்ட தொழிலுக்கும் தக்கபடி ஒரு சாதாரண சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. தொழில் செய்து வருடக் கடைசியில் வரும் லாபத்தை, ரிசர்விற்கும் தொழிலாளர்களுக்குமாக அரைப்பாகமும், எனக்கும் காபிடலுக்குமாக அரைப் பாகமும் பங்கவேண்டுமென்று 1933-ல் நிர்ணயிக்கப்பட்டது. 1920-ம் வருடம் முதல் இம் மாதிரி நடந்துவந்தாலும், சில சமயம் ஒன்றும் வரையறுக்கப்படாமல், ஒரு வருட முழு லாபத்தையும் தொழிலாளர்களுக்காக கொடுத்துவிடுவதும், தொழில் மந்தமுள்ள சில வருடங்களில், 1, 2, 3 வருடங்களுக்கு கொடுக்காமல் விடுவதும், தொழில் நன்றாகயிருக்கும்போது, 2, 3 வருடத்தில் வருவதை ஒரே வருடத்தில் சேர்த்துக் கொடுப்பதுமாக இருந்துவந்தது. 1933 க்குப்பின் ரிசர்விற்கும் தொழிலாளருக்கும் வரும் அரைப்பாகத்தில் பாதியை தொழிலாளர்களுக்கு பங்கிக் கொடுக்கப்பட்டபொழுது, சில கண்டிஷன்கள் ஏற்படுத்தப்பட்டன. மூன்று வருடங்களுக்கு லாபத் துகைகளை வீடு வாங்கவோ, நிலம் வாங்கவோ அல்லாமல் வேறு எதற்கும் செலவு செய்யக்கூடாது. ரிசர்விற்கும் துகைகளை தொழில் சாதனங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டது. மற்ற பாதியில் மூலதனத்திற்காகவந்த பாகத்தை மூலதனத்துக்காக வாங்கிய கடன்களின் வட்டிக்கே கொடுக்கப்பட்டது. என் பாகத்துக்கு வந்த தொகைகளையுங்கூட 3, 4 வருடங்கள் தவிர்த்து மற்ற வருடங்கள் பூராவும் தொழில் சாதனங்களுக்கும் மூலதன வட்டிக்கும் பற்றாக்குறை ஏற்பட்டபொழுது கொடுக்கப்பட்டு வந்தது.

1933-லிருந்து கம்பெனிகளுக்கு வருமானவரித் தொல்லை ஏற்பட்ட காலம் வரை, ஒரு வருடம் தவிர்த்து மற்ற வருடங்கள் முழுவதும் இந்தக் கண்டிஷன்கள் முறை பிரழாமல் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. எதிர்பாராத நஷ்டத்தால் ஒரு வருடத்தில் மட்டிலும் 5, 6 மாதம் ஒரு தொழிலாளியும் சம்பளம் வாங்காமல் வேலை செய்துவந்தார்கள். பாக்டரி ஆக்டும், பிரிட்டிஷ் ஆட்சியும் இருந்தும்கூட எங்குமே ஒரு தொந்தரவும் உண்டாகவில்லை.

ஒவ்வொரு தொழிலாளியும் சாதரணமாய் இவ்வளவு மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்று நிர்ணயித்திருந்தாலும்கூட, அவரவர்கள் அதிக மணி நேரமானாலும் அல்லது அதிசீக்கிரமே தன் வேலையைச் செய்துமுடித்தாலும், மணிக்கணக்கு என்பதைக் கவனிக்காமல் எடுத்த வேலையை முடிக்க வேண்டும் என்ற கொள்கைப்படி முடித்துவிடுவார்கள். வேலை நேரத்தைவிட, 2 முதல் 2½ மடங்கு அதிக நேரம் நானும் ஒரு தொழிலாளியாகக்கூடவே யிருந்து வேலை செய்துவந்திருக்கிறேன். என் சொந்த மூலதனம் இல்லாமல் பிறருடைய மூலதனத்தை எடுத்து உபயோகித்து வந்ததால், நான் அதிகப்பொறுப்பும், அதிகக் கவலையும் ஏற்கவேண்டியதாயிருந்தது. எந்தப் பாரம் ஏறியிருந்தபோதும் கூட, விதித்த வேலைகளை, வைத்த முறைகளைப் பிரழ்ந்து நடக்க எப்போதும், எந்தயிடத்திலும் இடம் கொடுத்ததேயில்லை.

காபிட்டலிஸ்ட் (Capitalist) அதாவது முதலாளி என்ற ஹோதாவில் இந்த முறைகளை வகுத்து, அதன்படி முதலாளியாகிய நானும் அந்த முறைகளுக்கு அடங்கி நடந்துவந்ததே மேலே சொல்லிய

தற்கு ஒரு அடிப்படையான காரணம். இரண்டாவது காரணம்: தொழிலாளர்கள் சம்பளத்துக்கு மாத்திரம் வேலைக்கு வரவில்லை, வேலை பழகவேண்டும் என்ற எண்ணத்தோடும், பழகிய தொழிலைக் கொண்டு சம்பாதிக்கவேண்டும் என்கிற எண்ணத்தோடும், பழகிய தொழிலைக் கொண்டும், சம்பாதித்ததைக்கொண்டும், ஒரு ஒழுங்கும், தைரியமும், யோக்கியமுமுள்ள ஒரு மனிதனாக இருக்கவேண்டுமென்கிற எண்ணங்களோடும், ஒவ்வொருவரும் ஒற்றுமையாகவும், உண்மையாகவும் பாடுபட்டுவந்ததே தொழில் வளர்ச்சிக்கும், லாபத்துக்கும், எல்லோருடைய முன்னேற்றத்துக்கும் அசைக்கமுடியாத அஸ்திவாரமாக இருந்தது.

தொழில் பழகுவதற்கும் வரும்படி சம்பாதிப்பதற்கும் ஆரம்பிப்பதற்கு முந்தியே, ஆறு மாதம் அல்லது ஒரு வருஷத்திற்குள்ளாக, ஒவ்வொருவருக்கும் இந்த எண்ணங்கள் தானாகவே கஷ்டமின்றி உண்டாகும்படியாக ஒவ்வொரு நிலையும் அமைந்திருந்தது. அதே மாதிரி என் மனத்திலும் தொழில் சாதனங்கள் ஒன்று, பிறருடைய பணம் மூலதனத்தில் இருப்பது ஒன்று, தொழிலாளர்கள் என்பது ஒன்று, மற்றவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமை ஒன்று, ஆகிய இந்த நான்கு பாரங்களும் ஒவ்வொரு நிமிஷத்திலும் என்மேல் அழுத்திக்கொண்டிருப்பதாகவே உணர்ந்து வந்தேன். இவ்வுணர்ச்சியால் மேற்சொன்ன முறைப்படி காப்பிடலுக்கும், எனக்குமாக வருகின்ற அரைப்பாகம் லாபத்தை 1939 வரை மாதத்திற்கு ரூ. 150/-யும் அதற்குப் பின் ரூ. 200/-யும் என் செலவுக்கு எடுத்துக்கொண்டபின், பாக்கியை தொழிலாளர்களுக்கும், தொழில் சாதனங்களுக்குமாக செலவு செய்து வந்திருக்கிறேன்.

ஆனால், மற்றவர் மூலதனம் என்னை ஆட்டிக் கொண்டிருப்பதைத் தவிர்க்க, ஏதோ மிஷின்களையும், மற்றவைகளையும், புதிது புதிதாக கண்டு பிடிப்பதை விட்டு, நம் தொழில்களில் என்னென்ன சாமான்கள் எந்தெந்த வகைகளில் அவைகளின் முழு உபயோகத்தை பெறாமல் சேதமாகிறதென்பதைக் கண்டுபிடிக்க ஆரம்பித்து, மிச்சப்படுத்தி அதில் ஒருவாறு வெற்றியும் அடைந்தேன். இதுவரை நான் செய்த தொழிலிலோ, வியாபாரத்திலோ, லாபம் என்று ஒன்று இருந்தால் அது சேதம் அல்லது வீண் விரயம் ஆவதைத் தடுத்ததால் ஏற்பட்ட மிச்சமே தவிர வேறு ஒன்றுமில்லையென்று இன்று வெளிப் படையாகச் சொல்லுகிறேன். பலர் சொல்லுகின்ற மாதிரி, மோட்டார் சார்ஜ்களிலும் இன்கம்டாக்ஸ் முதலிய வரிப் பணம் கொடுக்காமலும், ஒரு பைசாவாவது சம்பாதித்ததல்ல.

இது இன்றல்ல. 1935-ல் பல்லடத்தில் பெரிய ஜங்ஷன் ஒன்று திறக்கப்பட்டபொழுது கோயமுத்தூர் ஜில்லாவில் மட்டிலும் யாருக்கும் உபயோகமில்லாமல் நம் செல்வம் எவ்வளவு வீணாகிறதென் பதைப்பற்றி நான் சொன்னதாவது. “வீணாக அவசியமில்லாமல் மோட்டார் வாகனங்களில் தேய்கிற டயர் சாமான்கள், புகையாகப்போகிற பெட்ரோல் இவைகளின் மதிப்பு கோயமுத்தூர் ஜில்லாவில் மட்டும் ரூபாய் பத்து லட்சம்”. அந்த சமயம் இந்த ஒரு ஜில்லாவில் மட்டும் பத்து லக்ஷம் ரூபாய் புகையாகவும், புழுதியாகவும் போய்க்கொண்டிருந்தது. ஆனால், இன்றுள்ள நிலைமை என்ன? நம் ராஜதானியில் மட்டும் வருஷத்திற்கு அப்பொழுதிருந்த மதிப்பு ரூபாய் இரண்டரை கோடிக்குப் பதிலாக இப்பொழுது ரூபாய் ஆறு கோடி இம்மாதிரி வீணாக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த முறைகளைச் சொல்லும்போது இவைகள் சில பேருக்கு வெறுப்பாகவும், சிலருக்கு விருப்பாகவும் தோன்றலாம். இது எங்ஙனம் சாத்தியமாகுமென்றும் தோன்றலாம். உண்மையிலேயே முதன் முதலாக இந்தக் கொள்கைகளை புகுத்தி அமுல் நடத்துவது சிறிது கடினம்தான். கொஞ்சம் அக்கரை எடுத்து ஊக்கத்தோடு வேலை செய்து அதைப் பழக்கத்துக்குக் கொண்டுவந்து விட்டால் அவரவர்கள் முறை தவறாது ஒவ்வொருவரும் தாங்களாகவே அக்கரை எடுத்து ஒரு கஷ்டமுமில்லால் நடத்திக் கொள்வார்களென்பதை இன்றும் நேரில் பார்க்கலாம்.

இதே முறைகள் இன்றும் அரசாங்கத்திலுள்ள ஒவ்வொரு தொழில்களிலும், தனி நபர்களிடமுள்ள ஒவ்வொரு தொழில்களிலும் அமுலுக்கு கொண்டு வரப்படுமாயின், இப்பொதுதிருக்கிறமாதிரி தொழில் கோர்ட்டும், டிரிப்யூனலும் வேண்டியதில்லை. இவ்வளவு சட்டம் வேண்டியதில்லை. காப்பிடல் என்றும், கவர்ன்மெண்ட் என்றும், லேபர் என்றும் மனக்கசப்பு இல்லை. இவ்விதம் தொழில்கள் நடைபெறும்போது சேதத்தை மீதப்படுத்தி அதன்மூலம் கிடைக்கும் செல்வம் ஒன்றே இதற்குப்போதும். நம் அரசாங்கத்தை நடத்த, சர்சார்ஜு, மரண வரி, முதலிய வரிகள் போடவேண்டிய அவசியமேயில்லை. அரசாங்கம் வெளியில் கடன் வேண்டும் என்று கெஞ்சவேண்டிய அவசியமும் இருக்காது. தொழிலாளர்களுடைய கூழ் மருந்துக்கில்லை, செலவுக்கில்லையென்றும் கேட்காது, அட்வான்ஸ்களோ, கடன்களோ வாங்கவேண்டிய அவசியமும் இராது. இவற்றைநான் சொல்லும்போது பைத்தியம் பிடித்தவன் உளறுகிறான் என்றுகூட நீங்கள் நினைக்கலாம்.

எனது துரதிர்ஷ்ட வசமாகவோ, அல்லது மற்றவர் துரதிர்ஷ்டவசமாகவோ, ஏதாவது ஒன்றை நான் செய்து அதைப்பற்றிச் சொன்னால், அநேகர் நம்புவதே இல்லை. இல்லாத ஒன்றை தமாஷாக சொல்லும் பட்சத்தில், வெகு பேர் நம்பிக்கொள்ளுகிறார்கள். முன் சொன்ன அநேகம் பேர்கள் நான் சொல்வதை நம்பாவிட்டாலுங்கூட, செய்து வைத்திருப்பதையும், அதனால் ஏற்படும் நன்மைகளையும் நேரில் பார்த்தும், அறிந்தும், அனுபவித்தும், தெரிந்தாலுங்கூட நம்புவதில்லை என்கிற பிடிவாதமாக இருக்கிறார்கள். அம்மாதிரியான ஆயிரக்கணக்கான மக்களில் வெகு சிலரே இதைத் தெரிந்துகொள்ளுகிறார்கள் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் கூறுகிறேன். நம் நாட்டிற்கு அவசியமான சில முக்கியமான தொழில்கள் அதாவது, இந்துஸ்தான் ஏர் கிராப்ட் பாக்டரி, சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி, ப்ரீமியர் ஆட்டோமோபைல்ஸ் முதலிய தொழில் ஸ்தாபனங்களை, நம் இரத்த வெள்ளங்களுக்கு அணைக் கட்டியமாதிரி சொல்லும்படியாக, வால்சந்து ஹீராசந்து என்பவர் நிறுவினார். அவரே நம் நாட்டிற்கு ஜீவநாடி தொழில் என்கிற ஒரு தொழிற்சாலை அதாவது ஆயில் இன்ஜின்கள் செய்யும் கூப்பர் இன்ஜினீரிங் கம்பெனி என்று ஒன்று ஸ்தாபித்தார். அதற்கு (Mr. Lund) லண்ட் என்பவரை வைத்து ஆயில் இன்ஜின்களும், தொழிற்சாலைக்கு வேண்டிய மிஷின்களும் செய்துவந்தார். லண்டோடு யந்திரத்தொழில் கல்வியைப்பற்றி நான் விவாதித்துக் கொண்டிருக்கும்போது, "இப்போது தொழில் கல்வி ஸ்தாபனங்களில் 3 வருடம் அல்லது 4 வருடம் தொழில் கல்வியைக் கற்பித்துங்கூட உபயோகத்திற்கு வராத மாணவர்களைத்தான் உற்பத்தி செய்கிறோம். அதைவிட உபயோகமுள்ள ஏதாவது

ஒரு தொழில் கல்வியை 3 வாரத்திலும் அல்லது 6 வாரத்திலும் கற்பித்துவிடலாம்" என்று நான் சொன்னதை அவர் நம்பவில்லை. மற்றொரு சமயம் அவர் நேரில் வந்து பார்த்தபொழுது அவர் எழுதியதின் மொழிபெயர்ப்பை இங்கு தருகிறேன்:

"இங்கு செய்துவரும் முறைகள் மிக விசித்திரமானது. நான் பார்த்த தேசங்களில் இந்த முறை தெரியாது. இந்தியாவில் தொழில் விருத்தியாக வேண்டுமானால் இங்கு நடக்கும் படிப்பு முறைதான் மிகவும் முக்கியமானது. மற்ற இடங்களில் ஐந்து வருடம், மூன்று வருடம், இரண்டு வருடங்களில் படிப்பதை இங்கு ஒரு வருடம், ஆறு மாதங்கள் அல்லது மூன்று மாதங்கள் அல்லது சில வாரங்களில் முடித்துவிடலாமென்கிறார் திரு. ஜி. டி. நாயுடு. காதில் கேட்டால் விநோதமாயிருக்கும். ஆனால் இங்கு நடக்கும் விதம் ஒரு விசேஷமானது. விளக்குவதற்கு சித்திரங்கள், கருவிகள், மற்ற சாதனங்கள் ஒரு ஒழுங்காய் அமைக்கப் பெற்றிருக்கிறது. ஆதலால் மிகக் குறுகிய காலத்தில் விளக்கமாக எதையும் தெறிந்துகொள்ளலாம். அதே முறையில் திருப்திகரமான படிப்பு மாணவர்களுக்கு கிடைக்கிறது. இது மாதிரி ஸ்தாபனங்கள் இந்தியா முழுவதும் உண்டானால் நாடு அதி விரைவில் தொழில் அபிவிருத்தியில் தேர்ச்சி பெறும் என்பது உறுதி"

இந்த மாதிரி பாலிடெக்னிக்கில் நான்கு வருடம் படிப்பதற்காக வகுத்திருந்த திட்டத்தை ஒரு வருடத்தில் முடித்து பரீட்சை செய்தபொழுது

75 சதம் மாணவர்கள் தேர்ச்சி பெற்றதை பரீட்சை செய்யும் போர்டார் ஒத்துக்கொள்ளாததால் அந்த பாலி டெக்னிக்கில் பிரின்ஸ்பாலாயிருந்து நான் செய்த ராஜீனாமாவை அங்கீகரிக்க அனுமதி கேட்ட பொழுது, அப்பொழுதிருந்த தொழில் மந்திரி வி. வி. கிரி அவர்கள் நேரில் வந்து பார்த்து என் ராஜீனாமாவை ஒத்துக் கொள்ள முடியாதென்றும், மற்ற பாலிடெக்னிக்குகளிலும் இதே மாதிரி திட்டங்களை புகுத்த வேண்டும் என்றும் சொன்னார். இப்பொழுது மத்திய அரசாங்கத்தில் கல்வி ஆலோசகராக இருக்கும் உமாயூன் கபீர் இங்கு வந்து நேரில் பார்த்த பின்பு இதே அபிப்பிராயத்தைத் தான்சொன்னார். இந்த 4, 5 வருடங்களில், குறுகிய காலத்தில் கற்றுக்கொடுக்கும் வகைகளையும், அதைத் தொடர்ந்து நடக்கின்ற தொழில் அறிவுக் காட்சியையும், இதுவரை மூன்று லட்சம் பேருக்குக் குறையாமல் பார்த்திருந்துங்கூட இன்னும் இந்தக் கல்வி முறை பரவாதிருப்பதற்கு என்ன காரணம்? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

இதுபோலவேதான் இங்கு நான் ஏற்படுத்திய சில முறைகளால் தொழிலாளர்கள் கடனில்லாமல் இருக்கலாம், ஏதோ பணமோ, சொத்தோ வைத்திருக்கலாம், வியாதிகளின் தொந்தரவு இல்லாமலிருக்கலாம், ஸ்ட்ரைக், கதவடைப்பு முதலிய கஷ்டங்கள் தெரியாது வாழலாம், இந்த சுக நிலைமையில் இப்போதும் அவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் நம்புவது கடினம்தான். நான் ஏற்படுத்திய முறைகளை எவ்வாறு வளர்த்துவந்தேன் என்பதை சில சமயாசந்தர்ப்பங்களை எடுத்துச் சொல்லி விளக்கவிரும்புகிறேன்.

26 வருடங்களுக்குமுன் என்னிடமுள்ள எல்லா தொழிலாளர்களையும் கூப்பிட்டு யார்யாருக்குக் கடனிருக்கிறது என்று கேட்டபோது 100-க்கு 90 பேர் கடனிருப்பதாகவே எழுதிக்கொடுத்தார்கள். 1933-ம் வருஷத்தில் வரும் லாபத்தில் ஒரு பாகத்தை தொழிலாளர்களின் தொழில் திறன், காலம், சிக்கனம் முதலியவற்றை நானும் மற்றும் இரண்டு பேரும் ஆராய்ந்து பார்த்து, ஒவ்வொருவருக்கு இவ்வளவு என்று பங்கீடு செய்வது வழக்கம். 1933-க்குப்பின் கணக்கு செக்ஷனிலிருந்து ஒருவரும் மற்ற தொழிலாளர்களிலிருந்து லாட்டரி எடுத்து 17 பேர்களுமாக சேர்ந்த ஒரு குழு, ஒவ்வொருவருக்கும் இவ்வளவு பங்கு என்று நிர்ணயிக்கும். 1926-லிருந்து கடன் இருப்பவர்களுக்குச் சலுகை குறைக்கப்பட்டும், சம்பாத்தியத்தில் மீத்துவைப்பவர்களுக்கும், குடும்பத்தோடிருப்பவர்களுக்கும் அதிகச் சலுகைகொடுக்கப்பட்டும் வந்தது. 1931-க்குள்ளாக கடனிருப்பவர்கள் 10 சதத்துக்குள்ளாகவும், 1933-ல் கையில் பணமாகவோ, ஏதாவது பொருளாகவோ, சொத்தாகவோ வைத்திருப்பவர்கள் 91 சதமாகவும் மாறியது. 1933-லிருந்து கடைசிவரை 86 சதத்திலிருந்து 92 சதத்துக்குள்ளாக ஏதாவது கையில் வைத்திருப்பவர்களாகவே இருந்தார்கள். சரியாகச் சொன்னால் $8\frac{1}{2}$ சதத்திலிருந்து $11\frac{1}{2}$ சதத்துக்குமேல் தொழிலாளர்கள் எந்த வருடத்திலும் கடனாளிகளாக இருக்கவில்லை.

சாதாரணமாக, தொழிலாளர்களில் சிநேகிதர்களோடு சேர்ந்து சினிமாவுக்குப் போவதும், காபி-டீ கடைகளுக்குப்போவதும், ஒரு சிலர் லாகிரி வஸ்துக்களான சிகரெட் முதலியவைகள் குடிப்பதுமாகச் செலவு செய்கிறார்கள். தவிர, மிகக்கடுமை

யான வழக்கமாகப் பணம் கையில் வந்தபோது முழுவதையும் செலவழித்துவிட்டு, பின் ஏதாவது அவசர காலத்தில் அக்ரமமான வட்டிக்குக் கடன் வாங்கி எப்போதும் கடன்காரன் என்ற இழிவான நிலையிலேயே இருந்துவருவதைக் காண்கிறோம்.

தொழிலாளர்களுக்காகட்டும், மாணவர்களுக்காகட்டும், மற்றும் எவருக்குத்தானாகட்டும், அவர்களுடைய வாழ்நாளில் மேலோங்கி வளரும் சுகத்தை நிலையாக முடக்கி வைப்பது கடன் ஒன்று, சினிமாப் பார்ப்பதும் அதன் உணர்ச்சிகளுக்குள்ளாவதும் இரண்டு, சிகரெட்டு காபி முதலியவற்றைக் குடித்து தன்னுடையதும் தன் குடும்பத்துடையதும் சுகத்தை கெடுத்துக்கொண்டு வியாதியை அடைவது மூன்று. ஆகிய இவை மூன்றுதான் முதல்தரமான விரோதிகளேயன்றி, இப்பொழுது உங்களில் அநேகர் எண்ணப் பழக்கப்பட்டிருக்கிறபடி காபிடலிஸ்ட் என்கிற முதலாளியோ, அரசாங்கமோ உங்களுக்கு விரோதியல்ல.

அநேக ஆயிரக் கணக்கில் மூலதனம் படைத்த எங்கோ உள்ள சில கழுகுகளைத் தவிர மற்றெல்லோரும் தொழிலாளர்களை விரோதிக்கிறவர்களல்ல. அரசாங்கத்திலிருப்பவர்களும் பொதுவாக ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று இருப்பார்களே தவிர, ஏதோ சில விடங்களில் சிலரைத் தவிர்த்து அரசாங்கத்திலுள்ள எல்லோரும் விரோதிகளல்ல. துரதிருஷ்டவசமாக அநேக தொழிலாளர்கள் தாங்களாகவே, தங்களுக்குத் தெரியாமலேயே, இந்தப் பழக்கவழக்கங்களுக்கு உள்ளாகி விரோத மனப்பான்மையை வளர்த்திக்கொண்டு வந்துவிட்டார்கள்.

முதலாளிகளும், அரசாங்கமும் இந்த மூல காரணங்களை அறியாமல் ஏதேதோ தேவையில்லாத சட்டங்களையும் அதற்கு வேண்டிய கோர்ட்டுகளை யும் ஏற்படுத்தி இந்த விரோத மனப்பான்மை மேலும் வளரும்படி செய்துவிட்டார்கள்.

மாணவர்கள், அரசியலைத் தெரிந்துகொள்ள லாம், ஆனால், அதில் கலக்கக்கூடாது என்று தலை வர்கள் புத்திமதி சொல்லுகிறார்கள். ஒவ்வொரு காலேஜூக்கும் அதைச் சேர்ந்து ஒரு ஹாஸ்டலும், ஸ்டோரும் மற்ற காப்பி, சிகரெட்டு கடைகளும் வைத்து, காலேஜூக்கு பக்கத்தில் சினிமா கொட்ட கையும் இருந்து, காலேஜில் சினிமாவும் காண்பித்து பெற்றோர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் கீழ் அடங்கி நடக்க வேண்டும் என்று பாடங்களை சொல்லிவைத்து, அங்குள்ள மாணவர்களே சிகரெட் குடிக்கவேண்டாம், சினிமா பார்க்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டால் என்ன பலன்கள் கிடைக் குமோ, அந்தப் பலன்கள்தான் தொழிலாளர்கள் கையில் அரசியல் பத்திரிகைகளைக் கொடுத்து அரசியல் வாக்குவாதங்களில் ஈடுபடச் செய்து, ஸ்ட்ரைக் போன்ற ஆயுதங்களையும், யூனியன்களை யும் அவர்கள் கையில் கொடுத்து, அவர்களை அரசி யலில் கலக்கவேண்டாம் என்று சொல்லுவதாலும் ஏற்படும்.

விசால ஆந்திரம் வேண்டும் என்று உண்ணா விரதமும், மாணவர் ஸ்ட்ரைக்கும், கர்னாடக மாகா ணம் வேண்டுமென்றும், சிறையிலிருப்பவர்களை விடுவிக்கவேண்டுமென்றும் ஒரு உண்ணாவிரதமும், பரீட்சைகளைத் தள்ளிவைக்க வேண்டும் அல்லது பரீட்சைகளே வேண்டாம் என்று ஸ்ட்ரைக்கும்

அதற்கு உண்ணாவிரதமும், சட்டங்களே வேண்டா மென்று ஸ்ட்ரைக்கும், உண்ணாவிரதமும் உண்டாக் கலாம். இந்த வகையான மாணவர்களைத்தான் இன்று காலேஜ்கள் அதிக அளவில் உற்பத்தி செய் கின்றன. இந்த மாதிரி பாடங்களை மக்களுக்குக் கற்பித்துவிட்டு முதலாளிகளாலோ அல்லது தொழி லாளிகளாலோ மில் மூடு விழாக்கள் நடத்தப்படு வதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

தவிர, திட்டம் செய்து எடுத்துக்கொண்ட காரியங்கள் மிக மிகப் பெரியவைதான். ஆனால், முதலில் எடுத்துக்கொள்ளவேண்டியதை தவறவிட்டு, பின்னால் எடுக்கக்கூடியவற்றை நம் அரசாங்கம் முதலில் எடுத்துக்கொண்டுவிட்டது மிகவும் பிசகு.

உதாரணங்களாக சிலவற்றைக்கூற விரும்பு கிறேன். ஒவ்வொன்றிற்கும் உள்ள குணதோஷங் களை விபரமாய் இங்கு சொல்லமுடியாவிட்டாலும் இன்னவை என்று மட்டும் சொல்லுகிறேன்.

1. விமான சர்வீஸை அரசாங்கத்தின் உடைமையாக்கினது,

2. கல்வித் திட்டமும், அடிப்படையை கவனிப் பதை விட்டு நாம் எட்ட முடியாததும் அல்லது வெகு காலத்துக்குப் பின்தான் எட்டக்கூடியதுமான அநேக விஞ்ஞான கலாசாலைகளை மிகப் பெரும் செலவில் உற்பத்தி செய்தது,

3. நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து உணவுப் பொருள்களை பெருக்குவதை விட்டு அயல் நாட்டிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து உணவுப் பெருக்கம் செய்வது,

4. மோட்டார் உற்பத்திச் சாலைகள் ஒன்று அல்லது இரண்டுக்கு பதில், எதுவும் சரியான முறையில் இல்லாமல், அநேக பாக்டரிகள் நடப்பதற்கு அனுமதித்தது,

5. நம் நாட்டிற்கு வேண்டிய மூல சாதனங்களாகிய, யந்திர சாதனை நம் நாட்டிலேயே செய்யக் கூடியதாயிருந்தும், செய்துகொண்டிருக்கிற தொழிற் சாலைகளை புறக்கணித்துவிட்டு, நம் நாட்டிற்கு இப்பொழுது அவசியமில்லாத யந்திரசாலைகளை வளரும்படி செய்துவிட்டது,

6. ரேடியோக்களை நம் நாட்டிலே செய்ய வசதிகளிருந்தும், செய்துக்கொண்டிருந்தும், அவற்றை விருத்தி செய்யாமல், இன்றும் ரேடியோக்கள் அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருப்பது,

7. நம் நாட்டு பழக்க வழக்கங்களுக்கு அவசியமில்லாததும், அப்படி வேண்டுமானால் நம் நாட்டில் செய்யக்கூடியதுமான, பலவகைப்பட்ட பவுடர்கள், பலவகைப்பட்ட பான உணவுகள், மருந்துவகைகள், கண்ணாடிகள், சீப்புகள், பேனாக்கள், பென்சில்கள், புகையிலைச் சாமான்கள், மரச்சாமான்கள், பிளாஸ்டிக் சாமான்கள், வாசனைச் சாமான்கள் முதலியவைகளை சாமர்த்தியமான சாக்குகள் சொல்லி அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது.

எந்தத் தொழிலையும் தேசவுடமையாக்குவதற்கு அரசாங்கத்தார் தாங்கள் தகுதியுள்ளவர்களா என்பதை நினைத்து அதன்பின்புதான் அந்தத்

தொழிலை தேசவுடமையாக்க வேண்டும். தேச வுடமையாக்குவதற்குமுன், அந்தத் தொழிலில் அனு பவப்பட்டவர்கள், அக்கரையுள்ளவர்கள் தங்களி டம் சர்வீஸில் போதுமானவர்கள் இருக்கிறார்களா அல்லது அகப்படுவார்களா, இதற்குப்போதுமான மூலதனம் தங்களிடம் இருக்கின்றதா, பொதுஜனங் கள் இதற்குப் பிரியப்படுகிறார்களா, என்பதையெல் லாம் கவனித்து, அதன்பின்பு எவைகளைத் தேச வுடமையாக்க வேண்டுமென்பதைத் தீரயோசித்துச் செய்யவேண்டும். இப்போது கப்பல் கட்டும் தொழிலை அரசாங்கம் எற்றுக்கொண்டது போற்றத் தக்கது. ஆனால், விமான சர்வீஸை இப்போது எடுத்துக்கொண்டது அவ்வளவு அவசியமில்லை; அவ்வளவு சரியானதுமல்ல.

நம் நாட்டில் தொழில்களை தேசவுடமையாக்கு வதாயின், அரசாங்கத்தின் திட்டப்படி முதலில் மோட்டார் தொழில் தேசவுடமையாக்கப்படவேண் டும். இந்த மோட்டார் தொழிலுக்குவேண்டிய சாத னங்கள் என்ன? மோட்டார்கள், பஸ்கள், லாரிகள், அவற்றை சரியான முறையில் சிக்கனமாக நடத்தத் தெரிந்தவர்கள் இவைகள் வேண்டும். கூடுமானவரை கார்களும், வேண்டியஅளவு பஸ்களும், லாரிகளும் இங்கேயே உற்பத்தி செய்யப்படவும் வேண்டும். அடுத்தபடி, அதற்கு நாள்தோறும் உபயோகப் படுத்தப்படும் டயர்கள், பெட்ரோல், எண்ணெய் முதலியவற்றை இங்கேயே உற்பத்திசெய்யவேண்டும். இவற்றில் குறைவிருக்கும்பொழுது இந்த சாதனங் களின் உபயோகத்தை அதிகப்படுத்துவதோ அல்லது தேசவுடமையாக்குவதோ அரசாங்கத்தார் செய்யும் முதல் குற்றமாகும். இவற்றையெல்லாம் சரிசெய்து கொண்டு, அதன்பின்பு, விமான சர்வீஸை தேச

வுடமையாக்கி யிருக்கலாம். இது சாதாரணமல்ல. மோட்டார் தொழிலையும், கப்பல் கட்டும்தொழிலையும் தேசவுடமையாக்குவதுபோல் அவ்வளவு சுலபமானதல்ல.

விமான சர்வீஸை தனிநபர்கள் அக்கரை எடுத்து செய்கின்ற முயற்சியைப்போல் இளம்வயதுள்ள நம் அரசாங்கத்தால் செய்ய முடியவே முடியாது. இன்னும் மோட்டார் சர்வீஸை தேசவுடமையாக்குவதற்கே வேண்டியவற்றைச் செய்யவியலாது.

அநேக வருடங்களுக்குமுன், நம் தேசம் இப்போது இருக்கும் நிலையில் அமெரிக்கா இருந்தபோது, தம் விமான சர்வீஸை தேசவுடமையாக்கினார்கள். பிறகு சீக்கிரத்தில், பின்னும் தனி நபர்கள் வசம் அது விடப்பட்டது. விமானத்தை வார் சர்வீசிற்கோ, டிபன்ஸுக்கோ அரசாங்கம் வேண்டுவதாயிருந்ததாலும், அதைத் தனி நபர்கள் நடத்துவதானால் சிறப்புடன் மேலோங்கி வரும். அதுவன்றி, அரசாங்கம் ஏற்று நடத்துவது அதிகச் செலவுக்கும், நஷ்டத்திற்கும் இடம் உண்டாகப் போகிறது. அதேமாதிரி, தேசவுடமை செய்யத் தகுதியில்லாதிருக்கும்போது, மோட்டார் தொழிலை தேசவுடமை ஆக்கினாலும், முன்பே செய்திருந்தாலும், பாலன்ஸ் ஷீட்டில் கணக்கில் லாபமே காட்டினாலும், தகுதியான சமயத்தில் தேசவுடமை செய்தால், என்ன லாபம் கிடைக்கவேண்டுமோ அவ்வளவு லாபம் நிச்சயமாய்க் கிடைக்காது.

இவற்றிற்குப் பல உதாரணங்கள் காட்டலாம். இதில் முக்கியமான விஷயம் வேறு ஒன்றும் இருக்

கின்றது. தேசவுடமை ஆக்கினும் ஆக்காவிட்டாலும், நம் தேசத்தில் ஓடும் பஸ்களும், லாரிகளும் இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டு, பெட்ரோலுக்குப் பதில் டீஸல் ஆயில் உபயோகிக்கும் பக்ஷத்தில் கொஞ்ச காலத்திற்கு முன் சேகரித்தக் கணக்குப்படி பெட்ரோல், எண்ணெய் மற்ற தேய்மான சாமான் வகைகளால் நம் ராஜதானியிலிருந்து வருடம் ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் அயலாருக்குப் போவதை மிச்சப்படுத்தலாம்.

இந்த விஷயமாக, நம் ராஜ்ய டிரான்ஸ்போர்ட் மந்திரியோடும், பிரதம மந்திரி ராஜகோபாலாச்சாரியோடும் கடிதப் போக்குவரத்து செய்தேன். இந்த விஷயமாகப் போக்குவரத்து மந்திரி, கோயமுத்தூர் சேம்பர் ஆப் காமர்சுக்கு வந்த சமயத்தில், சொன்ன விபரத்தை இங்கு சொல்லுகின்றேன்.

"1945-ம் வருடத்தில் கோயமுத்தூரில் ஒரு பாலிடெக்னிக் ஆரம்பித்து அதில் மோட்டார் இன்ஜினீரிங்கும், ரேடியோ இன்ஜினீரிங்கும் கற்பிக்க ஏற்பாடு செய்தேன். அதே ஸ்தாபனத்தில் நான் தலைமை ஆசிரியனாக இருந்தேன். நான் நடத்திய பஸ் தொழிலில் மாணவர்கள் பழக நிரம்ப வசதி இருந்தது. மாணவர்களும் மிகுந்த அனுபவத்தோடு தேர்ச்சி அடைந்துவந்தார்கள். அநேகர் பார்வையிட்டு மெச்சவும் செய்தார்கள். சென்னை சர்க்கார் மோட்டார் தொழிலை தேச உடைமையாக்க உத்தேசமிருப்பதாகத் தெரிவித்த சமயம், இந்தப் பாலிடெக்னிக் ஸ்தாபனத்துக்கு சில டவுன் பஸ்களை நடத்த பர்மிஷன் கொடுக்கும்படி பிரின்ஸ்பால் என்ற ஹோதாவில் கேட்

டேன். அப்படிக் கொடுத்து, அதில் மாணவர்கள் தேர்ச்சிபெற்றால், மோட்டார் தொழில் தேச உடைமையாகும்போது பெரும் உதவி ஆகுமென்ற எண்ணத்துடன் கோரினேன். ஆனால் சில சுயநலமிகள் செய்த சூழ்ச்சிகளால், அந்தத் திட்டம் பயன்பெறவில்லை. பிறகு கனம் வி. வி. கிரி அவர்கள் தொழில் மந்திரியாய் இருந்தபோதும் செய்த பிரயத்தனமும் அதே காரணத்தால் உதவாமற்போய் விட்டது.

"அண்மையில் விதித்த வரியை தொடங்குவதற்கு முன், முதல் மந்திரிக்கு, அது கூடாதென்றும், அதனால் ஒழுங்குக்கு கேடுவரும் என்றும், எதிர்பார்க்கும் லாபம் கிடைக்காதென்றும், முதல்படியாக கோயமுத்தூரில் கொஞ்சம் சர்வீசை இந்த பாலிடெக்னிக் நடத்தலாமென்றும் அப்படிச் செய்தால் பிறகு நலம் தரும் என்றும் எழுதினேன். பதில் இல்லை.

"ஒரு டீசல் உற்பத்திசாலை துவக்கி, அதில் உற்பத்தியாகும் இன்ஜின்களை ஒவ்வொரு பஸ்ஸிற்கும், லாரிக்கும் பர்த்தி செய்துவிட்டால் பெட்ரோலுக்குப் பதில் டீசல் எண்ணெய் உபயோகிப்பதில் மட்டும் சென்னை ராஜ்யத்துக்கு மட்டும் வருடத்திற்கு சுமார் 6 கோடி ரூபாய் லாபம் கிடைக்கும்".

அதனோடு, நாகப்பூரில் சர் எம். விஸ்வேஸ்வரய்யா தலைமையில் நடந்த அகில இந்திய உற்பத்தியாளர் சம்மேளனத்தின்போது சொன்ன ஒரு பாகத்தையும் இங்கு சொல்கிறேன்.

"மோட்டார் போக்குவரத்து சம்பந்தமாய் ஒவ்வொரு நாளும் எவ்வளவு வீணாக்கப் படுகிறது என்பதை நீங்கள் கவனித்திருக்க மாட்டீர்கள். இந்த மாகாணத்தில் 6,000 பஸ் களும், 10,000 லாரிகளும் இருக்கின்றன. இந்த 16,000 வண்டிகள் மூலமாக நாளொன் றுக்கு ரூபாய் 3,20,000 வீணாய் அழிகின்றன. அதே கணக்குப்படி ஒரு வருடத்திற்குப் பார்த்தால், 11 கோடி ரூபாய் வீணாகிறது. இந்த வீண் நஷ்டத்தை சரிக்கட்ட கொஞ்சம் கவனிப்பு வேண்டும். முதலில் கடினமாக இருக்கும், பிறகு பிடிவாதமாக சர்க்கார் கவனித்து இத்தத் திட்டத்தை நுழைத்தால் பூரா நஷ்டத்தையும் நீக்கலாம்.

"சென்ற மாதத்துக்கு முன் பம்பாய் சர்க் கார் கொழும்புத் திட்டத்தின்படி 450 பஸ்கள், 70 டிராக்டர்கள், 60 டிரெயிலர்கள், 835 டிரக்குகள் எல்லாம் சேர்ந்து 1415 வண்டி கள் வாங்கினார்கள். இதற்கு கூடிய கிரயம் நாலரை மில்லியன் டாலர். அதாவது ரூபாய் இரண்டு கோடி பத்து லக்ஷம் ஆகிறது. சமீப காலத்தில் ஜப்பானுக்கு ஸ்கிராப் (Scrap) இரும்பு டன் ஒன்றுக்கு ரூபாய் 200 வீதம் அனுப்பிவருகிறோம். 5,000 டன் அனுப்பிய தற்கு கிரயம் 10 லட்சம் ரூபாய் ஆகிறது. ஆனால் 1415 வண்டிகளை நிறுத்தால், அவை களிலுள்ள இரும்பு மட்டும் 5,000 டன்தான் இருக்கும். அதன் கிரயம் ரூபாய் இரண்டு கோடி பத்து லக்ஷம். பாருங்கள் வித்தியாசத்தை!

"நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், கொடும் பஞ்சம், கூலிக் குறைவு, முதலிய

கொடுமைகள் கூத்தாடுகின்றன. இப்படியிருக்க அயல் நாட்டில் வேலை செய்கிறவர்களுக்கு அதாவது 5,000 டன் இரும்பை மோட்டா ராக்கித் தருவதற்கு எவ்வளவு தொகை நம் நாட்டிலிருந்து வெளியே போகிறது. இது மட்டுமா? வண்டிகளில் கெட்டுப் போனவை களை பர்த்தி செய்ய, அநேக வருஷங்களுக்குக் கோடிக்கணக்கில் நம் செல்வத்தை அவர் களுக்கு கொடுக்கவேண்டியவர்களாகவும் இருக் கிறோம்".

இதே விஷயமாக நம் ராஜகோபாலாச்சாரியா ருடன் பேசினபோது அவர் மிக அக்கரையோடு வேண்டியதைச்செய்யவந்தார். அதேமாதிரி டிரான்ஸ் போர்டு மந்திரியும், ஸர் எம். விஸ்வேஸ்வரய்யா அவர் களும், ஆர். வி. சாமிநாதன் அவர்களும், டாரிப் போர்டு மெம்பர் டாக்டர் நாராயணசாமி நாயுடு அவர் களும், சென்ட்ரல் மினிஸ்டர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களும், வி. வி. கிரி அவர்களும் மிகுந்த அக்கரை யெடுத்துக்கொண்டார்கள். ஒரு ஜெர்மன் கம்பெனி யார் 80 லட்சம் ரூபாய் மூலதனம் போடவந்தார்கள். ஏறக்குறைய 2, 3 வருஷங்களாக இதைப்பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கின்றனவே ஒழிய இன்னும் எந்த பாக்டரியாவது இந்தக் கருத் துடன் ஸ்தாபிக்கப்போவதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணமென்ன? யோசித்துப் பாருங்கள். நன்றாக விளங்கும். இங்கு இன்னும் ஒன்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன். இதே ஜெர்மன் கம்பெனி யோடும், மற்றும் ஒரு இங்கிலீஷ் கம்பெனியோடும் 1937-ல் நம் தேசத்தில் மோட்டார் என்ஜின்கள் செய்ய திட்டமிட ஏற்பாடு செய்தேன். யுத்தத் தாலும் வேறு இடைஞ்சல்களாலும் அதற்குத் தடை யேற்பட்டது.

1940-லிருந்தே எலக்டிரிக் மோட்டார்கள் செய்வதற்கு நான் ஏற்படுத்திய தொழிற்சாலையில் மோட்டார் என்ஜின்கள், கிராங் ஷாப்டு (Crank shaft), பேக் ஆக்சில் (Back axle), பிரண்டு ஆக்சில் (Front axle), தவிர்த்து அநேக சாமான்கள் இங்கு செய்யப்பட்டு, 1945-வது வருஷம்வரையில் மிகத்திருப்திகரமாக உபயோகிக்கப்பட்டுவந்தன. அதன்பின்பு நம் நாட்டுக்குத் தகுதியானதும், தேவைக்கு முழுதும் அகப்படக்கூடியதுமான மோட்டார் பஸ்களும், லாரிகளும் அதற்கு வேண்டிய பாகங்களும் செய்வதற்காக 1½ கோடி ரூபாய் மூலதனத்துக்குப் அனுமதி கேட்டபோது அதுகிடைக்கவிடாது சில நொண்டிச் சமாதானங்கள் சொல்லிவிட்டு அனுமதிகொடுக்கவில்லை. ஆனால், அதன்பின்பு இதர 11 கம்பெனிகளுக்கு மோட்டார் கார்கள் அஸெம்பிள் செய்ய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்த 11 கம்பெனிகளும் வேறு கம்பெனிகளும் முழு மோட்டாரை உற்பத்திசெய்யவியலாத பாகங்களை இறக்குமதிசெய்து அவைகளைப் பூட்டிச்செய்யும் கார்தொழில்தான் செய்துவருகிறது. இந்த 5, 6 வருஷங்களுக்குப்பின்புதான் அரசாங்கம் தங்கள் தவறுதலை உணர்ந்து 11 கம்பெனிகள் தேவைக்கு அதிகமானது, அவற்றில் எவற்றைக் குறைப்பது என்னும் சாக்குவைத்து எந்த கம்பெனிகளை மூடுவது என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். நம் தென்னிந்தியாவிலுள்ள 3 கம்பெனிகள்தான் முதலில் மூடப்படும் என்று நினைக்கிறேன். இந்த நிலைமையில் தேச ரத்தம் மிகப்பெருங்குழாய்களில் வடித்துப் போய்க்கொண்டிருக்கும்போது, மோட்டார் போக்குவரத்தை இன்னும் விருத்திசெய்து

கொண்டு நம்முடைய தேச ரத்தம் பெரிய குழாய் களில் போகப் பெரிய குழாய்கள்வைத்துக்கொண் டிருக்கிறார்கள்.

சர் எம். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் 1937 வரு ஷத்தில் வெளியிட்ட புத்தகத்தில் மோட்டார்களை இந்தியாவில் உற்பத்திசெய்வது என்பதில் கண்டிருக் கும் குறிப்புகளை அரசாங்கத்திலிருக்கும் ஒருவரா வது படித்திருக்கமாட்டார்கள். ஆனால், அதிலுள்ள வற்றை அறிந்துகொள்ள முடியாததினாலோ அல்லது சொந்த நலன்களை உத்தேசித்தோ, அந்தக் குறிப்பில் கண்டிருப்பதற்கு மாறுபாடாகத்தான் மோட்டார் போக்குவரத்து சம்பந்தமான காரியங்கள் நடந்திருக் கின்றன. இந்தியாவில் மோட்டார் உற்பத்தி சம்பந் தமான குறிப்பு விபரங்களை வெளியிட்டு இன்று 16 ஆண்டுகள் ஆயிருந்தாலும் இன்னும் 2 பதினாறு ஆண்டுகளுக்கும் சர் எம். விஷ்வேஸ்வரய்யாவின் ஸ்கீம் பொருத்தமாகத்தான் இருக்கிறது.

வெளிநாடுகளைப்போலன்றி நம் நாட்டில் தலை வர்களாக இருப்பவர்கள் எவ்விதமான தவறுகள் செய்தாலும் அவர்களுக்குத் தண்டனை இல்லை யென்பதே இதற்குக் காரணம்.

அநேக நண்பர்கள் அரசியல் கட்சிகளில்சேர்ந்து ஏதாவது செய்யவேண்டுமென்று அநேக தடவை களில் நேரிலும், கடிதம் மூலமாகவும் கட்டாயப் படுத்திக் கேட்டார்கள். இப்போது நம்நாடு இருக்கும் நிலைமையும், அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கும் நிலைமையும் ஆகிய இவ்விரண்டையும் சேர்த்துப் பார்த்தால், அரசியல் கட்சிகளில் சேர்ந்து வேலை செய்வதால், இந்தக் கட்சிகளால் எதையும் சாதிக்க

முடியாது என்று சொன்னேன். அதன்பின், சில முக்கியமான நண்பர்கள் தகுந்ததொரு புதுக்கட்சி யாவது ஸ்தாபிதம் செய்து பார்க்கலாம் என்று வற்புறுத்தினார்கள். அரசியல் சட்டம் இப்பொழுது இருக்கும் நிலையில், எந்தவிதமான புதுக்கட்சிகள் ஆரம்பித்தாலும் யாராலும் எதுவும் செய்யமுடியாது என்று சொன்னேன்.

இப்போது அரசாங்கத்தில் தொத்திக் கொண்டிருப்பவர்களைவிட உயர்ந்த சக்தியோ, நாணயமோ, சாமர்த்தியமோ உள்ளவர்களை பதவியில் வைத்திருக்கமுடியவில்லை. அதை விரும்பவுமில்லை. உண்மையாக, தைரியமாக, ஒருவர் ஒரு காரியத்தை நேரிடையாகச் செய்யக் கூடியவராக இருந்தால், அவரை அரசாங்கத்திலிருந்து துரத்திவிடுகிறார்கள். உதாரணத்திற்கு வேறு எங்கும் போகவேண்டியதில்லை. நாணயத்திலும், பொருளாதார துறையிலும், நிர்வாகத் துறையிலும், உலகத்திலேயே கீர்த்திபெற்றவரான சர் சண்முகம் செட்டியாரை ஏன் டில்லியிலிருந்து துரத்தினார்கள்? டாக்டர் அம்பேத்காரையும், டாக்டர் ஜான் மத்தாயையும், ராஜகோபாலாச்சாரியாரையும் ஏன் வெளியேற்றினார்கள்? எவராவது டில்லி செக்ரட்டேரியட்டில் லஞ்சத்திற்கோ, உபசாரத்திற்கோ அல்லது வேறுவகை ஏமாற்றுதலுக்கோ அல்லது டில்லி செக்ரடேரியட்டுக்கும் அதை ஆண்டுகொண்டிருக்கும் சிலருக்கும் அடங்காமற்போனால், அப்படி அடங்காதிருப்பவர்கள் அங்கு நீண்ட நாள் காலம் தள்ளமுடியாது. அங்கிருந்து டிஸ்மிஸ் செய்யப்படுவார்கள். அல்லது தாங்களாகவே ஓடும்படி செய்யப்படுவார்கள். இவைகளெல்லாம் நாம் கண்கூடாகக்கண்ட காட்சிகளே.

சர் சண்முகம் செட்டியார் ராஜிநாமா கொடுத்து வந்த முழுவிபரங்களையும் உள்ளபடி அறியும் பட்சத்தில் உங்கள் மனம் எப்படியிருக்கும் என்பதை யூகிக்க முடியாது. இது சமயத்தில் சர் சண்முகம் செட்டியார் மனசாட்சிப்படி ஒழுங்கான முறையில் நடந்திருந்தாலும்கூட நான் அவர்பேரில் ஒரு குற்றம் சுமத்த வேண்டியவனாயிருக்கிறேன். ஷண்முகம் செட்டியார் டில்லியிலிருந்தபொழுது தனிநபர்கள் பொதுச் செல்வத்தை கொள்ளையடித்ததை தடுத்தது ஒரு காரணம். செக்ரடிரியேட்டை தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொள்ள சில தனி நபர்கள் சுயநலங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்காமை இரண்டாவது காரணம். இந்தக் காரணங்களை விளக்காமல் வெளிப்படையாக அரசாங்கத்துக்கும், பொதுமக்களுக்கும் தெரிவிக்காமல் ராஜினாமா செய்துவிட்டு திரும்பிவந்தது ஒருபெரும் தவறு என்று நான் சொல்லுகிறேன். இதனால், அங்கு ஏற்பட்ட நிலை என்னவென்றால், யார் அங்கு சென்றாலும் அவர்கள் சொன்னபடி ஆடிக்கொண்டு இருக்கவேண்டும். அப்படி ஆடக் கூடியவர்கள்தான் போகவேண்டும் என்கிற நிலைமை ஏற்பட்டுவிட்டது. சண்முகம் செட்டியாரோ, ராஜகோபாலாச்சாரியாரோ இன்னும் மற்ற வெளியேற்றப் பட்டவர்களோ மற்றவர்களைப்போல ஏதாவது இழிவான காரியங்களில் இறங்குபவர்கள் அல்ல. நேராக எதையும் செய்யவல்லவர்கள். அப்படியிருந்தும் அங்கு நடக்கும் சூழல்களைத் தெரிந்துகொண்டிருந்தும், அவற்றை வெளிப்படுத்தாமல் வெளியில் வந்துவிட்ட காரணத்தால், இவர்கள் எல்லோரும் குற்றவாளிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

இன்னும் இம்மாதிரி செய்கைகளுக்கு இடம் கொடுக்காமலிருக்கின்ற மந்திரிகள் டி. டி. கிருஷ்ண

மாச்சாரி, வி. வி. கிரி முதலியவர்களை எப்போது அனுப்புவார்களோ தெரியாது. கூடியசீக்கிரம் பண்டித நேருவையும் கூட அனுப்பிவிடுவார்கள். இன்னும் கொஞ்சநாளில் இவர்களும், இவர்களைப் போன்ற இன்னும் சிலரும் வெளியேறாவிட்டால், இவர்கள் செக்ரட்டிரியேட் ஆட்சிக்கு அடங்கிப் போய்விட்டார்கள் என்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும்.

நமது ராஜ்ய சர்க்காருக்கு சம்பளச் செலவுக்கோ, பஞ்சச் செலவுகளுக்கோ, வெள்ளச் செலவுகளுக்கோ அல்லது பொதுச் செலவுகளுக்கோ ஏதாவது வேண்டுமாயின், நமது ஆச்சாரியார்தான் டில்லிக்கு காவடி தூக்கவேண்டும். காவிரி ஆற்றில் தண்ணீர் குடிக்கலாமென்றால் டில்லிக்குப்போய் தான் கேட்கவேண்டும். உணவுப் பொருள்கள் விநியோகம் செய்ய அல்லது வாங்க இஷ்டமிருந்தால் டில்லிக்குப் போய்தான் வாயைப் பிளக்கவேண்டும். ஒரு விஞ்ஞானசாலை வேண்டும், ஒரு போஸ்டாபீஸ் வேண்டும், ஒரு டெலிபோன் வேண்டும், காருக்கு ஒரு சாமான் வேண்டும், ஒரு ரேடியோ வேண்டும், அமெரிக்கா புகையிலை மரம் வேண்டும் என்று எதற்கெடுத்தாலும் ஓடு டில்லிக்கு, ஓடு டெல்லிக்கு!

இங்கு விளைகின்ற, செய்கின்ற தொழில்களின் வரிகளை இங்குள்ள அதிகாரிகளேகொள்ளையடித்து, அவர்கள் ஸ்வாதீனத்திலிருக்கின்ற, ரயிலில் ஏற்றி மதியோ, அல்லது அவர்கள் சொந்த பாங்கியாகிய ரிசர்வ் பாங்கில் செலுத்தியபின்தான், நாம் அங்கு போய் வாயைப் பிளந்து, பல்லைக் காட்டி, கைகட்டி நின்று, கெஞ்சி இன்னும் பல கூத்துகள் ஆடி, செய்யத் தகாதவைகளை யெல்லாம் செய்து, அடிபணிந்து,

பிச்சை வாங்கிக்கொண்டு வந்து, இங்கு இராப்பகல் உழைப்பவர்களுக்கு கஞ்சி கொடுக்கவேண்டியிருக்கிறது. நம் ஊரில் விளைவதும், செய்யப்பட்டதுமான பொருள்களிலிருந்து நாம் எதையும் நேருக்கு நேராக உபயோகிக்கமுடியாது.

பழையகாலத்தில் இங்கிலாந்தும், அமெரிக்காவும், எப்படி காலனிகள்வைத்து நடத்தினார்களோ, எப்படி நரி புலித்தோல் போர்த்துப் புலியாகிறதோ அம்மாதிரி டில்லி அரசாங்கம் காலனிகள் வைத்து நடத்தப்பார்க்கிறது. அந்த நாடுகள் மாதிரி ஒற்றுமையாயும், பாரபட்சமில்லாமலும், நடு நிலைமையோடும் மிகுந்த சாமர்த்தியத்தோடும் நம் நாட்டை ஆளும் பட்சத்தில் நாம் எவ்விதக் குறையும் கூற முடியாது. உண்மையான சுதந்திரத்தை அடைந்ததாகச்சொல்லலாம். ஆனால் இன்று ஆளும் அரசாங்கத்திற்கு அந்த பலம் இருக்கின்றதா? அந்த சக்தி இருக்கின்றதா? அந்த நேர்மை இருக்கின்றதா? அந்த சுதந்திரம் இருக்கின்றதா? என்ற கேள்விகளுக்கு பதில் "ஒருக்காலுமில்லை"யென்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

நமது தலைவர்களும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நாட்டியக்கச்சேரியோ, ஒவ்வொரு சினிமாப் படமோ, ஒவ்வொரு பள்ளிக்கூட யூனியன்களோ அல்லது ஏதாவது நிகழ்ச்சிகளோ இவைகளில் கலந்துகொண்டு, நாட்களைப் போக்கிக்கொண்டு தானிருக்கிறார்கள். முதிர்ந்த அனுபவமில்லாத செகரட்டரிகளும், தலைமை பீடங்களுக்கு அருகிலுள்ள மிக முதிர்ந்த சுயநல அனுபோகமுள்ள வியாபாரிகளும் நம் நாட்டை ஆண்டுகொண்டுதானிருக்கிறார்கள்.

இன்று அரசியல் கட்சித் தலைவர்களும், அரசாங் கத்திலுள்ள தலைவர்களும், தாய் தகப்பன்மார் களும், தொழில் அதிபர்களும், தொழிற்சாலை நிர்வாகஸ்தர்களும், "தொழிலாளர்கள் கெட்டுப் போனார்கள், மாணவர்கள் கெட்டுப்போனார்கள், ஜனங்களும் கெட்டுப்போனார்கள்" என்று தினந் தோறும், பல இடங்களிலும், அரசியலைப்பற்றிப் பேசும் ஒவ்வொரு இடங்களிலும், பேசுகிறார்கள். மற்றும் ஒவ்வொரு பொருட்காட்சிசாலையை திறக் கும் போதும், நடக்கும் போதும், மூடும் போதும் பல சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி அந்த சந்தர்ப்பங் களிலும், பெரிய விஞ்ஞானசாலையை திறக்கும் போதும், அதில் கொடி ஏற்றும் போதும், அதற்கு ஆசி கூறும் போதும், குட்டிச்சுவற்றை இடிக்கும் போதும், அதன்பேரில் அஸ்திவாரக்கல் நாட்டும் போதும், காலேஜ்களிலும், கல்வி நிலையங்களிலும், அநேக யூனியன்களும், அஷோஸியேஷன்களும், ஒவ் வொரு வருடமும் புதிது புதிதாக ஏற்படுத்தி அதை இனாகுரேஷன் (Inauguration) செய்யும் போதும், அதன்பின்பு வெலடக்டரி (Veledictory) அட்ரஸ் கொடுக்கும் போதும், சிறு பெண் குழந்தைகள் நாட்டியம் என்ற பெயரால் குதிப்பதை அரங்கேற்றம் செய்யும் போதும், மற்றும் சினிமாக்களில் திரை தள்ளுவதற்கு ஒரு விழா, காமிரா ஸ்விட்சு முடுக்க ஒரு விழா, எடுத்த படத்தை வெளியிடுமுன்பு அதைத் திரையிட்டுப் பார்க்க ஒரு விழா, வெளியிடும்போது பல இடங்களிலும் ஒரு ஆரம்ப விழா, பெட்ரோல் கடை, கத்திரிக்காய் கடைகள் திறப்பு விழா, இந்த மாதிரி விழாக்களிலும், முனிசிபாலிட்டிகள், தமிழ் வளர்ச்சிக் கழகங்கள், ரெட்கிராஸ் கிளப்புகள், ஷோஷியல் கிளப்புகள், சமூகத்தொண்டு நிலை யங்கள் இவைகளிலும், உலகு விஞ்ஞானப்

பெரியார்கள் கூடும் கூட்டத்திலும், கல்வி நிபுணர்கள் கூட்டத்திலும், மனோதத்துவ சாஸ்திரி, சமய நூல் வல்லுநர், வேதாந்திகள் இவர்கள் கூட்டத்திலும், எலும்புக் கூடாக விளங்கும் உபாத்தியாயர்கள் கூட்டத்திலும், சாப்பாட்டிற்கலையும் நெசவாளிகள் அல்லது பிச்சைக்காரர்கள் கூட்டத்திலும், தவிர தொழிலாளர்கள் இடையில் பல அரசியல் நிபுணர்கள் தங்களுக்கு சாதகமாக சில சங்கங்கள் ஏற்படுத்தி அதில் பல தலைவர்களோடு, கூட்டங்கள் கூட்டி ஆற்றும் சொற்பொழிவுகளில் இதை கதைகளை வெவ்வேறு விதமாகச சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

சில நாட்களுக்குமுன் மேன்மைதங்கிய பண்டித நேரு அவர்கள் வடக்கே ராஜஸ்தானில் பிர்லா இன்ஜினீரிங் காலேஜ் இருக்கும் பிலானி என்கிற இடத்தில் நம் நாட்டிற்கு மிக அவசரமும், மிக அவசியமானதுமான 'எலெக்ட்ரானிக்' என்கிற விஞ்ஞானத் தொழில் ஆராய்ச்சி செய்யும் ஸ்தாபனம் ஒன்றை திறந்துவைத்தார். இதற்காக பிர்லா ரூ. 21 லட்சம் நன்கொடையாக உதவியிருக்கிறார். அதனால் அரசாங்கத்திற்கு வருடத்திற்கு, இப்போது ஏற்படுத்திய மதிப்புப்படி, ரூ. 5 லட்சமும் அதற்கு மேலும் செலவாகும். இதில் கல்வியமைச்சர் அபுல்கலாம் அசாத்தும், இந்த ஸ்தாபனத்தை நிர்மாணிக்க முதற்காரணமாயிருந்த பேராசிரியர் பட்நாகரும் (Bhatnagar) இந்த விழாவிற்கு வந்து இருந்து, முன்னொருவர் பின்னொருவர் பலவாறாக பேசியிருப்பதாக செய்தித்தாள்களில் படித்தோம்.

லட்சக் கணக்கில், கோடிக் கணக்கில் குழந்தைகள் எழுதப்படிக்கத் தெரியாமலும், போதிப்பதற்கு உபாத்தியாயர்களும், பள்ளிகளுக்கு இடங்களும்

இல்லாதிருக்கும்போதும், உபாத்தியார் கிடைத்தாலும், அவர்கள் தோலால் போர்த்த எலும்புக்கூடுகளாக இருப்பதாலும், இனி ஆயிரம், பத்தாயிரம் லட்சக்கணக்கில் வயிற்றைக் கழுவ ஏதாவது ஒரு தொழிலைக் கற்க வசதியுள்ள பள்ளிக்கூடங்களோ இல்லாதிருக்கும்போதும், இருக்கின்றவற்றில் படித்தும், வேலை பழகியும் இருக்கின்ற மாணவர்களும், தொழிலாளர்களும் தொழிற்சாலைகளின்றி தவிக்கும்போதும், நம் நாட்டிலிருந்து அயல்நாடுகளுக்குக் கொண்டு போகப்படுகிற மூலப் பொருள்களைத் தடுத்து நம் நாட்டிலேயே நமக்கு அவசியமான சாமான்களை நாமாகவே செய்யக்கூடிய வசதியிருந்தும், அயல் நாட்டிலிருந்து அவைகளை இறக்குமதி செய்து, அதனால் நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் போதும், இம்மாதிரி விஞ்ஞானசாலைகள் திறப்பதும், அதற்கு வருஷத்திற்குப் பணம் ஒதுக்குவதும் நியாயமா என்பது எனக்குத் தோன்றவில்லை.

சர் எம். விஸ்வேஸ்வரய்யாவையோ, சர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியாரையோ, அல்லது சர் சி. பி. ராமசாமி அய்யரையோ உண்மையாகக் கேட்போமானால் இவ்வளவு அவசரக் காரியங்கள் இருக்கும் போது 10 அல்லது 100 பேர் வேலை பழகுவதற்காக, 10 அல்லது 100 பேர் ஆராய்ச்சி செய்வதற்காக, என்று பேர் வைத்து வேலை கொடுப்பதற்கு இவ்வளவு தொகை செலவழிக்க ஒருக்காலும் சம்மதியார்கள். ஒரு சமயம் சர் சி. வி. ராமன் போன்றவர்கள், சர் கே. எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் விடாப்பிடியாக ஆராய்ச்சிசெய்து, ராமன் எபெக்ட் (Raman effect), கிருஷ்ணன் எபெக்ட் (Krishnan effect)

என்பவற்றைக் கண்டுபிடிக்கலாம். ஆனால், அவர்களையும், அவர்கள் கண்டுபிடித்தவற்றையும் நம் நாட்டில் உபயோகிக்கமுடியாத நிலையில் நாம் இருக்கிறோம். அவர்களையே கேட்டாலுங்கூட, இப்பொழுதிருக்கின்ற மாதிரி ஜனங்களைக் கசக்கிப் பிழிந்து எடுத்த பணத்தை இப்படிப்பட்ட விஷயங்களுக்கு இவ்வளவு அதிக செலவு செய்ய வேண்டியதில்லை என்றே கூறுவார்கள். விஞ்ஞான சாலைகளில், விஞ்ஞான வேலைகளில் நம் நாடு மற்ற நாடுகளைவிட பிற்பட்டதல்லவென்று வேண்டுமானால் பெருமை அடித்துக்கொள்ளலாம்.

அதே சமயம் உண்மை வேறுவிதம். மிகச் சாதாரண விஞ்ஞானிகளையும், விஞ்ஞான ஆராய்ச்சிகளையும்கூட உபயோகத்திற்குக்கொண்டு வருவதில், வளைந்த கத்தரிக்காய் அல்லது வெள்ளரிக்காய் போன்ற சிறிய தேசமாகிய ஜப்பான் போன்ற ஒரு சிறிய நாடு மட்டும் அல்ல - மற்றும் எந்த நாட்டுக்கும் நாம் முற்பட்டவர்கள் அல்ல. இந்த உண்மையை நம் பிரதமர் சிறிது யோசித்திருந்தாரேயானால் இதில் இறங்கியிருக்கமாட்டார். ஆனால், அரசாங்க நிர்வாகிகளும், நம் மக்களில் சிலரும் எவ்வேலையிலும் நிபுணர்களாயிருக்கிறார்கள். நம் நாட்டை பாதாளத்திற்கு கொண்டுபோகும் சினிமாவை மனப்பூர்வமாக வெறுத்த ராஜகோபாலாச்சாரியாரைக்கூட சினிமாவை வணங்கச் செய்துவிட்டார்கள் என்றால், பண்டித நேருவை இந்த விஞ்ஞானசாலைக்கு வர ஒப்புக்கொள்ள செய்ததிலும் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அங்கு வந்திருந்தபொழுது புது இந்தியாவை நிர்மாணிக்க மாணவர்கள் தயாராய் முன் வரவேண்டுமென்று அவர் அழுத்தந்திருத்தமாய் கெஞ்சிச்

சொன்னார். முன் காலத்திலிருந்து இதுவரையில் நம் மக்கள் சமூகம் நடந்து வந்திருக்கிற பாதைகளில் தவறுகள் பல உண்டு என்பதை இப்பொழுது பண்டித நேருவும், ராஜகோபாலாச்சாரியாரும் அறிந்தே இருக்கிறார்கள்.

தேச மாணவர்களும், பெண்களும், தொழிலாளர்களும் கெட்டுவிடுகிறார்கள் என்று எல்லா அரசாங்கத்துத் தலைவர்களும் பாடம் படிப்பதே வேலையாயிருக்கிறது. குழந்தைகளுக்கு கல்கண்டு, மிட்டாய்களை தின்னப் பழக்கியபின்பு, தித்திப்பு தின்பதால் பல் கெட்டுவிடும் என்று சொன்னால் அவை கேட்குமா? அதுமாதிரிதான் இவர்கள் கூறும் புத்திமதிகளும் இருக்கிறது. ஆனால் அவர்கள் தைரியமாக இப்போதுள்ள மாணவர்களும், பெண்களும் தொழில்களும் சீரழிந்துவருகிற நிலையை இப்பொழுதாவது அறிந்து எடுத்துச் சொல்லும் கைங்கரியத்தைப் பாராட்டத்தான் வேண்டும்.

அதே மாதிரி நம் ராஜாஜி, சினிமாவால் மக்கள் கெட்டுப்போகிறார்கள் என்று சொல்லும் அளவுக்கு வந்திருக்கிறார். ஆனால் இவர்களில் ஒருவருக்காவது ஆண்மை என்பது ஒன்று மட்டிலும் இல்லையென்று சொல்லலாம். அவ்விதம் இருக்கும் பட்சத்தில் மக்களைக் கெடுக்கின்ற தற்போதைய சினிமா தியேட்டர்களை, மக்களுக்கு அறிவைப் புகட்டும், கல்வி அறிவுக் காட்சிகள் நடத்தும் தியேட்டராக மாற்ற, ஒன்று இரண்டு பக்கத்தில் சட்டம் இயற்றி ஒரே நாளில் அமுலுக்கு கொண்டுவந்திருக்கலாம்.

புகையிலை கூடாது, சிகரெட்டு கூடாது என்று எப்பொழுது தெரிந்ததோ, அப்பொழுதே புகையிலைக்குப் பதில் உணவுப் பொருள்களைத்தான் உற்பத்தி செய்யவேண்டும் என்று, பிரிட்டிஷ் ஆட்சியின்போது யுத்த காலத்தில் இன்னவைதான் விளைவிக்கவேண்டும் என்ற சட்டம் செய்ததைப் போல் செய்திருக்கலாம். ஆனால், வேண்டாத மற்றவற்றை மேல்நாடுகளிலுள்ள மாதிரி காப்பி அடிக்கின்றோம்.

எப்பொழுது கலைக்கல்லூரி மாணவர்கள் அறிவில் கீழ்நோக்கி வந்தார்கள் என்று தெரிந்ததோ, அப்பொழுதே அக் கல்லூரிகளை தொழில் கல்லூரிகளாக மாற்றி அமைத்திருக்கலாம். எப்பொழுது தொழிலாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் குடியிருக்க வீடு இல்லையென்று தெரிந்ததோ, அப்பொழுதே ஒவ்வொருவரும் 1000 சதுர அடிக்குள் அல்லது 2000 சதுர அடிக்குள்தான் வீடு கட்டிக் கொள்ளலாம் என்று சட்டம் செய்திருக்கலாம்.

எப்பொழுது தொழிலாளர்களுக்கு தொழிலோ, தொழில் சாதனையோ இல்லையென்று தெரிந்ததோ, அப்பொழுதே நமக்கு வேண்டிய தேவைப் பொருள்களை வெளியே போகாதபடி செய்திருக்கலாம். இங்கு செய்யக்கூடியதை அயல் நாட்டிலிருந்து வரவொட்டாமலும் செய்திருக்கலாம். நான் முன்பே சொன்னதைப்போல் எதாவதொரு காரியத்தை முதலில் செய்வதற்குப் பதில், அதை இடையிலோ, அல்லது கடைசியிலோ செய்துவிடுகிறார்கள். இவை போன்ற ஊழல்களைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் நேரந்தானில்லை.

பொதுவாகத் தொழிலாளர்களுக்கு ஏதோ ஒரு சாதாரண தொழிலும், அதற்குப் பிரதிபலனாக உண்ண உணவும், இருக்க வசதியும் வேண்டும் என்கிறார்கள். இவற்றைச் செய்கிறோம் என்று சொல்லுகின்ற உயர்ந்த அனுபவமுள்ளவர்களும், விஞ்ஞானிகளும், அரசியல் தலைவர்களும் ஒன்று சேர்ந்து இப் பிரச்னையை சுலபமாகத் தீர்க்க வழி வகைகள் வகுத்தால், முடியாதது ஒன்றுமில்லை. ஒவ்வொருவருக்கும் இரண்டடுக்கு மாளிகை அவசியமில்லை. குடும்பத்துக்கு ஒரு சமயலறை, மற்ற உபயோகத்துக்கு 2, 3 அறைகள் இருந்தால் போதுமானது. தேசத்தின் ரத்தத்தை உறிஞ்சும் கார்களோ, பஸ்களோ கேட்கவில்லை. வேண்டுமென்றால் செல்வத்தைக் காப்பாற்றும் சைக்கிள்களோ, அல்லது ரயிலில் நாலாவது கிளாஸ் அல்லது ஆறாவது கிளாசிலோ டிக்கெட்டுகள் கிடைத்தால் போதும். நம் குழந்தைகள் ஒவ்வொருவரும் சர் சி. வி. ராமன் போன்ற விஞ்ஞானி ஆகவேண்டியதில்லை. சாதாரணமாக வாழ்க்கையில் நன்றாய் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதுமானது. ஹென்றி போர்டு, ஹெர்பர்ட் ஆஸ்டீன், லார்டு நப்பீல்டு போன்ற தொழில் மன்னர்களாக வேண்டும் என்று கோரவில்லை. அன்றாட வாழ்வுக்கு ஒரு தொழில் தெரிந்திருந்தால் போதும். இப்படி நமக்கு வேண்டியது நம் நாட்டில் அகப்படாததல்ல, அல்லது செய்ய முடியாததல்ல. ஆனால், நாட்டில் இப்பொழுது எப்படிப்பட்ட நிலை இருக்கின்றது? இதற்கு அரசாங்கத்தில் ஏற்பட்ட பிளவுகளும், ஊழல்களுமே தான் முக்கியமான காரணம். அதிலும் ஒரு சிலருடைய ஊழலும், அறியாமையும் தான் முதல் காரணம். அதே ஊழல்கள் தொழிலாளர்களிடமும் இல்லாமலில்லை. அரசாங்கத்தில் யாராவதொருவர்

தன் அறிவால் தன் வேலையில் மேம்பாடடைந்து, தனக்கு மேலிருப்பவருக்கு சமமாகவோ அல்லது அவருக்கும் மேலாகவோ வருவதாக இருந்தால், உடனே அவரை மட்டம் தட்டி அடியோடு வீழ்த்தி, அதனால் ஏற்படும் அதிர்ச்சியில் மோட்சலோகத்திற்குக்கூட அனுப்பிவிடுகிறார்கள்.

இனி ஒருவர் நேர்மையாக இருக்கும் பட்சத்தில் அவரை, மேலுள்ளவர்களேயன்றி கீழுள்ளவர்களும் கூட, இருப்பதை இல்லையென்றும், இல்லாததை இருப்பதென்றும் பொய்களை சுமத்தி, வெளியேற்றி விடுகிறார்கள். இந்த சம்பவங்கள் கல்வி இலாகா, போலீஸ் இலாகா, விவசாய இலாகாக்களில் அடிக்கடி நடக்கும் ஒரு சாதாரண சம்பவமாய்விட்டன. நேர்மை உள்ளவர்கள் என்று கருதும் நமது பண்டிட் ஜவஹர்லால் நேரு காலத்திலும், நம் முதலமைச்சர் ராஜாஜி காலத்திலும்கூட இம்மாதிரியான சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. இதற்குக் காரணம் அவர்கள் வயதோ, பலவீனமோ, அல்லது மற்றவர்களுடைய சாமர்த்தியமோ, தெரியவில்லை.

பிராமணன், தமிழன், தெலுங்கன் என்ற வேற்றுமைத் தீயை வளர்த்திக்கொண்டிருக்கிறவர்களும் இருக்கிறார்கள். பிராமணன் என்கின்ற ஒரு காரணத்தாலேயே அந்த இனத்தைச்சேராத அதிகாரிகளால் சில பேர்கள் நசுக்குண்டிருப்பதும் எனக்குத் தெரியும். அதே மாதிரி சில பிராமண அதிகாரிகளால் அந்த இனமல்லாதவர்கள் நசுக்கி பொசுக்கப்பட்டிருப்பதும் எனக்குத் தெரியும். இதுவன்றி, வெறுப்பாலோ, பலவீனத்தாலோ, பிராமணன், சூத்திரன் என்கிற பதங்களை உபயோகித்து, வெறுப்பு,

கொதிப்பு என்கிற மனத்தீயை எரியவிட்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாயிருந்த ராஜகோபாலாச்சாரியாருங்கூட வழுக்கி விழுந்திருப்பது ஆச்சரியந்தான்! இதே மாதிரி தீ அநேக தொழில் ஸ்தாபனங்களில் எரிந்துகொண்டிருக்கிறது.

பிராமணன், பிராமணனல்லாதவன் என்பதைப் பற்றி பிராமணர்களுக்கு ஒரு சொற்பொழிவு செய்தேன். அந்த சொற்பொழிவின் தலைப்பு "பிராமணருக்கு ஒரு வார்த்தை" என்பதாகும். இந்தத் தலைப்பைப் பார்த்து கூட்டத்திற்கு எனக்கு நெருங்கிய நண்பர்களில் அநேகர் வரவில்லை. ஆனால் அக்கூட்டத்திற்கு பிராமணரல்லாதவர்களில் சிலரும் என்னோடு மிக நெருங்கிப் பழகிய பிராமணர்களில் சிலரும் வந்திருந்தார்கள். சொற்பொழிவை கேட்டு விட்டுப்போன ஒரு வாரத்திற்குப் பின்பு, என்னிடம் வந்து, பிராமணர் அக்கிரகாரத்தில் அதே சொற்பொழிவை ஆற்றும்படி கேட்டார்கள். ஆனால், சில அசந்தர்ப்பங்களால் என்னால் அப்போது எங்கும் போகமுடியவில்லை. அந்த சொற்பொழிவின் சாராம்சத்தைக் கீழே கொடுக்கிறேன்.

சாதாரணமாக, 100-க்கு 3 பேருள்ள பிராமணர்களின் ஜனத்தொகையில் 100-க்கு 95 பேர் கடவுள், மதம், தர்மம், நீதி, மோக்ஷம், நரகம், மறு பிறப்பு என்றுள்ள பிராமண நீதிகளை முழுவதும் கற்றும், மற்றவர்களும் அந்த வாசனையாவது பட்டிருப்பவர்களாகத்தானிருப்பார்கள். பொதுவாக, பிராமணர்கள் தாங்கள் கொண்டிருக்கும் பூர்வீக நம்பிக்கையின் பயனாக எந்தவிதமான கொடும் செயலுக்கும் போகமாட்டார்கள். போக சக்தியும் கிடையாது. ஆனால், அவர்களில் 95 சதம் நீங்கலாக மற்ற 5 பேர்தான் ஜாதிக்கு ஏதோ பெரிய உதவிகள்

செய்துவிடுவதாகச் சொல்லிக்கொண்டு, தன் ஜாதிக்குப் புறம்பானவர்களை நசுக்கிவிட்டு, இரண்டொரு பிராமணனுக்கு அக்கிரமமாகவும் உதவி செய்துவிடுகிறார்கள். இந்த 5 சதமுள்ள வித்துக்கள் அப்பாவிகளான பிராமணர் என்ற பயிர்களையே அழிக்கவந்திருக்கும் விஷப் பூண்டுகள் என்பதைப் பற்றி அப்பொழுது அங்கு நடந்த சொற்பொழிவில் சில உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்கினேன்.

எந்த இடத்திலும் ஜனத்தொகையில் குறைந்திருப்பவர்கள் ஒழுங்காகவேதான் நடந்து வருகிறார்கள். அவ்விதம் ஒழுங்கு தவறிய இடங்களில் நிலைத்து வாழமுடியவில்லை. இந்தக் காலத்துக்கு ஒத்துக்கொள்ளக்கூடாத சில பழக்க வழக்கங்களை இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு குற்றம் தவிர்த்து, பெரும்பாலோரிடம் வேறு பிரமாதமான தவறொன்றுமில்லை. அவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாக மூளையிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இடத்திற்கு இடம், சீதோஷ்ணஸ்திதி முதலியவைகளைப் பொருத்து, எந்த ஜாதிக்காரரும், மிக அறிவுள்ளவர்களாக இருப்பது இயற்கைதான். ஆனால், யாரையும் வேண்டியவைக்கு உபயோகப் படுத்திக்கொள்வது நலம். அரசாங்கத்தில் எல்லாம் ஒழுங்காக நடத்த சக்தியிருக்கும்போது, பழைய வழக்கங்களை விடுங்கள் என்று சொன்னால், பிராமணர்களும், அல்லாதவர்களும் உடனே ஒரு நொடியில் விட்டுவிடுவார்கள். இதைப்பற்றிக் கூறிக்கொண்டு இப்பொழுது நம் காலத்தையும், அறிவையும், சக்தியையும் செலவழித்துவிடுவது வீண். அந்த சக்தியை அரசாங்கத்திற்கு நாம் அறிவுறுத்தவும், அவர்களைத் திருத்தவும் உபயோகிக்கவேண்டும்.

ஒருவன் அதிக நேரம் வேலையோ, அல்லது மிக பளுவான வேலையோ, அல்லது மிக நுணுக்கமான வேலையோ செய்து கொஞ்சம் அதிகமாக சம்பளம் அல்லது கூலி வாங்குவான். சாதாரண தொழிலாளி அதன்தாரதம்மியத்தைப் பார்த்து அறியாமல், அவனுக்கு மட்டும் இவ்வளவு பணம் ஏன் கொடுக்கப்படுகிறது என்ற வெறுப்பு ஏற்பட்டு, கொடுக்கிறவன்பேரிலும், வாங்குபவன்பேரிலும் பழிவாங்க எண்ணம் வைத்துக்கொள்ளுகிறான். பின்பு மற்ற தன் சகாக்களை சரிப்படுத்திக்கொண்டு, பணம் கொடுத்தவனுக்கு துன்பத்தைச்செய்தோ அல்லது ஒரு ஸ்ட்ரைக்கையோ உண்டாக்கியும் விடுகிறான். தவிற, பணம் வாங்கியவன்பேரில் ஒரு பொய் கேஸையும் ஜோடித்து வேறு வகையில் கஷ்டத்தை விளைவிக்கிறான். ஒழுங்கான கல்வியறிவு இல்லாததாலேயே, தொழிலாளர்களிடம் இது மிக சகஜமாக நடைபெற்றுவருகிறது. இந்தக் கஷ்டங்களை நிவர்த்திக்க நான் சில முறைகளை ஆரம்பித்தது மிக வெற்றிகரமாக நடந்து வந்தது. இன்னும் நடந்துவருகிறது.

சென்ற வருடம் தொழில் மந்திரி கனம் வி. வி. கிரி அவர்கள் கோயமுத்தூருக்கு வந்திருந்தபொழுது மோட்டார் சர்வீஸிலிருந்து நீக்கப்பட்ட சில தொழிலாளர்கள் அவரிடம் வந்து முறையிட்டார்கள். அப்பொழுது அவர் என்னையும் சில கேள்விகள் கேட்டார். அதற்கு அங்குள்ள முறைகளையும், மற்ற விஷயங்களைப்பற்றி அந்த ஸ்தாபனத்தைக் கேட்கச் சொன்னேன். அவர் முழுவதையும் அலசிப் பார்த்த பின்பு, அம்முறைகளில் சிலவற்றையாவது நம் நாட்டில் பரவலாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று பிரயத்தனம் எடுத்தார். இன்னும் எடுத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். இன்னும்

இவை அமலுக்கு வாராதிருப்பதற்கு எது முட்டுக் கட்டையாக இருக்கிறதோ தெரியவில்லை. இவற்றைப்பற்றி விவாதித்துக்கொண்டு உங்கள் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

மத்திய அரசாங்கத்தின் இறக்குமதி வியாபார விநியோகத்தைப்பற்றி ஒன்றுகூற விரும்புகிறேன். இறக்குமதி லைசென்சுகள் 1950-க்கு முன்பும், 1945-க்கு முன்பும், 1940-க்கு முன்பும் இறக்குமதி செய்தவர்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்று விதி வகுத்தார்கள். அப்படி இறக்குமதி செய்பவர்கள், கப்பல் சார்ஜ், வரி, லாபம் என்ற பெயர்களில் 100-க்கு 50 வீதமும் அதற்கு மேலும் விலையை ஏற்றி விற்கலாம். ஏதாவதொரு சாமானுக்கு விலையில் கட்டுப்பாடு இருக்கும்பட்சத்தில், அந்த சாமான்களை ப்ளாக் மார்க்கெட்டில் நூற்றுக்கு நூறு லாபம் வைத்தும் விற்கலாம். இதற்கு புதிதாக ஒருவன் வந்து போட்டிப் போடவும் முடியாது. நூற்றுக்கு ஐம்பது அல்லது நூறு வைத்து கொள்ளையடிப்பதற்கு இந்த விதி எவ்வளவு அனுகூலம் பாருங்கள். புதிதாக ஒருவருக்கும் இறக்குமதி லைசென்சு கொடுப்பதில்லை. யாருக்கு வேண்டுமாயினும் கொடுப்பதாயிருந்தால், 100-க்கு ஐந்து அல்லது பத்து வீதம் லாபம் வைத்து முறையாக வியாபாரம் செய்ய வல்லுனர்கள் அநேகர் உண்டு. அரசாங்கத்திற்கு தேவைப்படும் சாமான்களுக்கு டெண்டர் கேட்கும்போது, மிக மலிவாகவும் டெண்டர் வரும்.

ஏன் இம்முறை என்று கேட்கும்போது புதியதாய் வருபவர்களுக்கு இறக்குமதி வியாபாரம் தெரியாது. எல்லாருக்கும் லைசென்சு கொடுத்தால்

நாணயமாற்றில் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும், பலத்த போட்டியினால் அநேகர் சீரழிந்துபோக நேரிடும், வியாபாரம் கெட்டுப்போய்விடும் என்று இன்னும் ஏதேதோ சில சுயநலமிகள் சொல்லிக் கொடுத்த சாக்குகளை அரசாங்கம் கூறிக்கொண்டிருக்கிறது.

இப்பொழுதுகூட கவர்ன்மெண்டு அதிகாரி, கல்வி சம்பந்தமான புரொஜக்டர்களையும், பிலிம்களையும் வெளிநாட்டிலிருந்து கொண்டுவந்ததற்காக வரி விதித்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கை, நம் தேசத்தின் தொழில்களுக்கும், கல்விக்கு வேண்டிய எந்த சாதனத்திற்கும், எல்லாவித உதவியும், சலுகையும் செய்யத் தயாராய் இருக்கிறார்கள் என்பது தன் சொந்த உபயோகத்திற்காக இந்த புரொஜக்டர்களையும், பிலிம்களையும் வாங்கி வரவில்லை. ஆனால், தானிருக்கும் கல்விக் கழகத்திற்காகவே வாங்கி வந்தவை என்று தெரிந்திருந்தும் இந்த ஆபீசர் வரி விதித்தார். இது போன்றவைகள் வெகு உள. பின்னால் சொல்லுகிறேன்.

நம் தேசத்திற்கு வாங்க வேண்டிய சாமான்களை வெளிநாட்டிலிருந்து வாங்குவதை ஒழுங்கு செய்தால் அந்த ஒரு இனத்தில் சுமார் நூற்றி பத்து கோடி ரூபாய் மீதப்படுத்தலாம். இன்னும் தேவைக்கு மேல் வீண் செலவு செய்யும் வகைகளைத் தடுக்க முற்பட்டால், அந்த ஒரு இனத்தில் மட்டும் சுமார் அறுபது கோடி ரூபாய்க்குமேல் மிச்சப்படுத்தலாம். இன்னும் இரண்டொரு இனங்களை தேச உடைமையாக்கினால், அரசாங்கத்தை நிர்வகிக்க வரி போடாமலே வேண்டிய அளவு நிதி கிடைக்கும். ஆனால்

இன்றிருக்கும் அரசாங்கம் இவைகளைச் செய்வதற்கு தகுந்த அஸ்திவாரமும், அனுபவமும் உள்ளதாக இல்லை.

அரசாங்கத்திற்கு வேண்டிய சாமான்களை, தங்களிடம் இருப்பவற்றையே 100-க்கு 10 வீதம் விலைக்கு விற்றுவிட்டு, அதே சமயத்தில் அதே சாமான்களை அயல் நாட்டிலிருந்து வரவழைப்பதும் அல்லது இங்கேயே டெண்டர் கேட்பதும் வழக்கமாக இருக்கின்றது. பின்னும் டிஸ்போசல்களிலும், ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்டிலும் நடக்கும் ஊழல்களை சொல்லத்தரமன்று. சண்டையின்போது 5 வருட மதிப்பு இருக்கும்படியாக கட்டிய கட்டிடங்களும், அவைகளில் பதித்திருக்கும் மிஷின்களும் 10 வருடங்களுக்கு மேல் ஆகியும் இன்னும் 10 வருடத்துக்கு இருக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறது. அபூர்வமான சில கட்டிடங்களில் மரப் பாகங்கள் மாத்திரம் கெட்டிருக்கின்றன. இவைகளை கொஞ்ச செலவில் மாற்றலாம். மற்றபடி சிமெண்ட் நிலம், சுவர், ஓடுகள், இரும்பு ஆணிகள், சிமென்ட் ஷீட்டுகள், இரும்புத் தகடுகள் இவை ஒன்றும் கெட்டுப் போகவில்லை. நம் நாட்டிற்கு அநேக வருஷங்களுக்குத் தேவையுள்ள ஆஸ்பத்திரி, குடியிருக்கும் வீடு, குடோன் (Godown) ஓர்க்ஷாப், தண்ணீர் வசதி, ரயில் வசதி, ரோடு வசதி இவைகளோடு இருந்தன. பள்ளிக்கூடங்களுக்கு இடமும் சிறு தொழில், பெரும் தொழில் வைத்து நடத்த வசதியுள்ள கட்டிடங்களும் சௌகரியமாகக் குடியிருக்க லாயக்குள்ளதாயும் இருந்தன. இன்னும் ஆஸ்பத்திரி சாமான்கள், மோட்டார் வாகனங்கள், பலதரப்பட்ட

மிஷின்கள் குறைந்தது நம் நாட்டிற்கு 20, 25 வருடங்களுக்கு வேண்டிய அளவு, நிரம்பியிருந்தன. இவற்றை எல்லாம் அரசாங்கத்திலுள்ள சிலர், வேண்டியவர்களுக்கு மிகக் குறைந்த விலைக்குக் கொடுத்தோ, ஏலத்தில் விற்றோ தீர்த்துவிட்டார்கள். இவற்றை வாங்கியவர்களும் ஒழுங்காக உபயோகிக்க வில்லை. எல்லாவற்றையும் இடித்துத் தள்ளி தூள் செய்துவிட்டார்கள். சீனாவிற்கோ, ஜப்பானுக்கோ சிலவற்றை ஏற்றுமதியும் செய்துவிட்டார்கள். இருந்ததை கைவிட்டு, வேண்டிய சாமான்களுக்கு ஒன்றுக்கு நூறு வரை கொடுத்து வாங்கி வருகிறதை நினைக்க நினைக்க வருத்தமாய் இருக்கிறது. இடித் துத்தள்ளிய கட்டிடம் 100 பேர்களுக்கு தொழிலுக் கும் கல்விக்கும் உபயோகிக்கக்கூடியதாய் இருக்கும். இக் கட்டிடங்களை ஐயாயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்றுவிட்டு, பிறகு இடித்துவிட்டு அதே அளவுள்ள கட்டிடங்களை ரூபாய் ஐந்து லக்ஷமோ ஐம்பது லக்ஷமோ சிலவு செய்து பளிங்குக்கல்லோ அல்லது சலவைக்கல்லோ வைத்து நூற்றுக்குக் குறைவுள்ள வர்கள் உபயோகத்துக்கு கட்டப்படுகிறது. இதே மாதிரி ஆஸ்பத்திரி, மற்ற கட்டிடங்களை ஏலத்தில் விட்டு, ஆயிரக்கணக்கில் விற்றுக்கொண்டு, லக்ஷக் கணக்கில் $\frac{1}{4}$ கோடி, $\frac{1}{2}$ கோடி விலையில் அக்கிரம மாகக் கட்டிடம் கட்டி வருவதைப்பற்றி அதிகம் நான் சொல்லவேண்டியதில்லை.

நான்குபேர் வசிக்கும் வீட்டில் 40 பேர் வசிப்பது கடினம். ஆனால் மேற்கு நாடுகளில் 4 பேருக்குள்ள அளவில் வீடு இருந்தாலும் அதை 40 மாடிகளைக் கொண்டதாகக் கட்டியிருக்கிறார்கள். 100 பங்கு அதிகம் பேர் இருந்தாலும் அசௌகரியம் தோன்றாது. ஆனால், நம் நாட்டு நிலைமை வேறு,

தொழில் நிலைமை வேறு. இந்நிலையில் அறியாமையினால் இதுவரை பெருகிவந்த நகரங்களில், அளவிற்கதிகமாக மக்களை குடியேற விட்டது, யாரும் எதிர்பார்த்த தவறு. இந்தத்தவறை அரசாங்கம் இன்னும் உணரவில்லை. ஆனால், சில தலைவர்கள் யாரும் நகருக்குப் போகவேண்டாம், நகரவாசம் கெடுதல் உள்ளது, நகரத்திலுள்ளவர்கள் கிராமத்திற்கு செல்லட்டும் என்று மற்றவர்களுக்கு உபதேசம் செய்து, அதேநேரத்தில் தாங்கள் மட்டும் நகரத்திலேயே குடியிருக்கிறார்கள். கிராமங்கள் எந்த வகையில் இவர்களைக் கவர்ச்சி செய்தது? அங்குள்ளவர்களே குடிக்கத்தண்ணீர் கிடைக்காது ஓடுகின்றார்கள். இதுவரை நம்நாட்டிலுண்டான நகரங்கள் பெரிய நகரமாயிருக்க திட்டமிட்டுக் கட்டப்பட்டவையல்ல. கல்விக்கூடங்கள், தொழிற்சாலைகள், மருத்துவ சாலைகள், துறைமுகங்கள், ரயில் நிலையங்கள், வியாபார ஸ்தலங்கள் இவைகள் அகஸ்மாத்தாக ஏற்பட்டு பெரிய நகரங்கள் ஆயின. நகரத்திலுள்ள நெருக்கடியும், அதனால் ஏற்படும் வியாதிகளும், சுகக்குறைவுகளும் மற்றும் அநேக கேடுகளையும் தெரிந்தும் கூட அவ்வைகளை ஒழிக்க என்ன செய்யப்பட்டிருக்கிறது? பின்னும் அதிக நெருக்கடிகளை உண்டாக்கத்தக்க தொழிற்சாலைகளும், சினிமாக் கொட்டகைகளும், கிளப்புகளும் மற்றும் அநேகரை கவர்ந்து இழுக்கக் கூடிய காரியங்களைத்தான் நகரங்களில் அமைக்கிறார்கள். இதனால், மேலும் மேலும் கிராமங்களில் உள்ளவர்கள் தங்கள் ஜாகைகளை காலிசெய்துவிட்டு நகரத்துக்கு இழுக்கப்படுகிறார்கள். விவசாயத்திற்காக இருக்கும் சில தொழிலாளர்களும் வெளியேறிவிடுகிறார்கள்.

எந்தப் புதுத்தொழில்களையும், புது கல்வி சாலைகளையும் அநேக கிராமங்களுக்கு இடையிடையே ஏற்படுத்தும் பக்ஷத்தில், இந்த நிலைமை இருக்காது என்கிற ரகசியம் ஒருவருக்கும் தெரியாததா? தெரிந்த பின்னும் ஒரே இடத்தில் தொழில்கள் குவிவதன் காரணம் என்ன? இது, இங்கு மங்குமாக விருக்கும் சில சுயநலமிகள் ஏற்பாடல்லவா? பொதுவாகப் பாருங்கள்-முக்கியமான தொழில்களெல்லாம் தென்னிந்தியாவில் வளரவில்லை. இங்குள்ளவர்களுக்கு மூளையோ, சக்தியோ இல்லாமலில்லை. முன் சொன்னபடி தலை நகரம் தூரமாயிருப்பது முக்கிய காரணம். இப்பொழுதும் நீங்கள் தொழில் செய்யும் நிலையங்களுக்கு ஏதாவது ஒன்று வேண்டுமானால், டில்லிக்குத்தான் போக வேண்டும். ஒரு பெரும் தீ பிடித்து, அதை அணைக்க இங்கிருக்கும் இரண்டு தீயணைக்கும் யந்திரங்களும் போதாவிட்டால், அடுத்த ஊரிலிருந்து கொண்டுவருவதைக் கேட்க டில்லிக்குத்தான் போக வேண்டும்.

மத்திய பிரதேச கவர்னர், எல்லோரும் கதர் உபயோகித்தால் 12 கோடி மக்களுக்கு வேலை கிடைக்கும் என்று சமீபத்தில் பேசியிருக்கிறார். வேலையில்லாத்திண்டாட்டத்தை தவிர்ப்பது எப்படி என்பதை நினைத்தும், சொல்லியும், பார்த்தும் தலைவர்கள் எல்லாம் கலங்கிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கமும் பசிப்பிணிகளை அழைக்கும் இப்பெரும் விரோதியை ஒழிக்க வேண்டும் என்றுதான் அல்லும் பகலும் பாடு படுகிறது. இந்த சமயத்தில் மத்திய பிரதேச கவர்னர் சொல்லியிருக்கும் வழி மிகவும் உகந்ததுதான். இதை நடைமுறையில் செய்வது, நரம்புத் தளர்ச்சியடையாத அரசாங்கத்

துக்கு மிக சுலபம்தான். அப்படி இருந்தாலும், ஏன் ஒரு ஆர்டரை பிறப்பித்து இப்பொழுது இருக்கும் மில்களை மூடக்கூடாது? அப்படி மூடுவதால், சில லக்ஷம் பேருக்குத்தானே வேலையில்லாது போகும்! அவர்களுக்கு இந்த 12 கோடி மக்கள் சாப்பாடு போட்டுவிடுவார்கள். காங்கிரஸ் கட்சியில் உள்ள நமது முதல் மந்திரி ராஜகோபாலாச்சாரியாரும் கூட கைத்தறியாளர்களுக்காக, சில ரகத் துணி நெய்யும் தொழிலை ஏகபோகமாக ஒதுக்கவேண்டும் என்று சொன்னார். ஆகையால், மத்திய அரசாங்கம் மத்திய பிரதேச கவர்னர் சொன்னதை சாதிக்க முடியுமா?

இம்மாதிரி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும், வெள்ளச் சேதங்களை சமாளிப்பதற்கும், பஞ்சக் கஞ்சித் தொட்டிகளை திறப்பதற்கும், பிச்சைக்காரர்கள் வீதிகளில் பாட்டுப்பாடி ஜால வித்தை காட்டி, நாட்டியமாடி சில்லரை காசுக்களும், மற்ற சாமான்களும் வாங்குவதைப்போல, சினிமாக்களைக் காட்டியும், நாடகங்கள் ஆடியும், மற்றும் பல காட்சிகள் வைத்தும், பிச்சை வாங்குவது போன்ற வழிகளில் பணம் சேகரித்து, மற்றவர்களுக்கு பிச்சை வழங்குவதுபோல் கொடுக்கிறார்கள். நேரடியாக அரசாங்கத்திற்கு இவைகளை பரிபாலிக்க வேண்டிய சக்தியும், வசதியும் இருந்தும் அதை உபயோகிக்கத் தெரியவில்லை.

நம் நாட்டில் தொழிலாளருக்காக ஏற்பட்ட கல்வி ஸ்தாபனங்களைப்பற்றி இதற்கு முன்பே என் அபிப்பிராயங்களைச் சொல்லியிருந்தாலும், இங்கும் ஒரு சிறிது சொல்லுகிறேன். ராஜகோபாலாச்சாரியார் ஒரு அவசர எண்ணத்தில் கொஞ்சம் பிசகி முன்

னுக்குப் போவதற்கு பதில் பின்னுக்குப் போய் விட்டார். பின் வைத்த காலை எப்படி முன் வைப்பது என்று யோசித்துக்கொண்டிருக்கிறார். எவ்விதமோ இப்பொழுதிருக்கும் கல்வி முறைகளில் கெடுதலிருக்கின்றது என்பதை மட்டிலும் எல்லாத் தலைவர்களும் அறிந்தும் சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கும்போது, இவரோ கல்வியின் சீர்கேட்டை அறிந்ததோடல்லாமல் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்து நடக்கவும் வந்துவிட்டார் என்பதைச் சொல்ல மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், திசை தப்பி எதிர் திசையில் கால் வைத்துவிட்டார். 11 வயதிற்குள் என்பதற்கு பதில் 12 வயதிற்குமேல் என்று வைத்து எந்தத் தொழிலையும் கற்க அனுகூலமில்லாத கிராமங்களை விட்டு, சில தொழில்களும் வியாபாரமுமுள்ள நகரங்களில், கட்டாய முறையில் இளைஞர்களுக்கு தொழில் பழக்கம் கொடுக்க வேண்டுமென்று விதி வகுத்து, அதற்கு வேண்டிய மற்ற சாதனங்களையும் ஏற்படுத்தி, பரீட்சை பார்த்திருந்தால், ராமசாமிப் பெரியாரும், அண்ணாத்துரையும் ஆச்சாரியாரை அடிவணங்கி யிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

மத்திய அரசாங்கமும், மற்றும் தலைவர்கள் எல்லோரும் இந்தியை கட்டாயப்படுத்தி புகுத்த வேண்டாம், கட்டாயப்படுத்தினால் எடுத்துக்கொண்ட வேலை அடியோடு கெட்டுப்போகும், தாய்ப்பாஷை முதலிடம் பெறவேண்டும், இவற்றோடு இங்கிலீஷும் இருக்கவேண்டும் என்றெல்லாம் தினந்தோறும் பேசி, மேல்பூச்சு பூசிக்கொண்டு இங்கிலீஷ்காரனுக்கு சேவை செய்யும் சவுகரியத்துக்காக அவன் இங்கிலீஷை எப்படிப் பரப்பினானோ, அதைவிட மோசமான இழிநிலையில் இந்தியைத்

திணிக்க எல்லா இடங்களிலும் முயற்சிகள் நடந்து, நம் பணத்தையும் வீணாக்கி, நமக்கு வரவிருக்கும் சிறிது அறிவையும் பாழ்படுத்தி முட்டாள்களாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

இந்தியே தெரியாத அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், ஜப்பானிலுமுள்ள ஜனத்தொகை முழுவதையுங்கூட சாமர்த்தியமாக இந்தியின் பெருமையைப்பற்றி எழுதி அவர்களை ஏமாற்றி இந்தியை அனுசரிக்கவைத்துவிடலாம். ஆனால், இந்தியாவில் இது ஒரு கனவாகுமே அன்றி, காரியத்தில் நடவாது. இப்போது, என்னவோ கையில் அதிகாரம் இருக்கின்றது, சேனா பலம் இருக்கின்றது, போலீஸ் பலமும் இருக்கின்றது, தார்சட்டிகளும், கதர் சட்டைகளும் இருக்கின்றன, அதனால் கொஞ்ச நாளைக்கு இந்த நாடகம் நடத்தமுடியும். ஆனால், பெரியார் வெடி மருந்துக்கு வைத்த தீ வெடிக்காமல்விடாது. மதிப்பிற்கு உகந்த பிரதம மந்திரி பண்டித நேரு அவர்களும், இந்திய யூனியன் தலைவர் ராஜேந்திர பிரசாத் அவர்களும், இந்தியைப்பற்றிக் கொடுத்த புத்திமதிகளைக் கூர்ந்து கவனித்து நடக்கவில்லையானால், பாஷைப்பூசல் ஒன்றே போதும் நம் தேசத்தை அழிக்க. தலைவர் பிரதமர் என்ன புத்தி சொன்னாலும் நம் குட்டிச் சாத்தான்கள் அனுசரிப்பதில்லை. உதாரணமாக, டில்லியிலிருந்து ஒரு போஸ்டு கார்டு வந்தால் இந்திப் பதமாகிய "நவா டில்லி" என்கின்ற உச்சரிப்பை தேவநாகரி லிபியில் முத்திரை வைத்து, இந்தி தெரியாத எவனும் எந்த இடத்திலிருந்து வந்தது என்று விளங்காது விழிக்கும்படியான நிலையில் இருக்கிறது. தாங்கள் ஒரு பாஷையே கற்க வழியில்லாதிருக்கும்போது, தாய் தகப்பனாருடன் பேச தாய் பாஷையும், தன்னுடைய

காலம் தள்ளுவதற்கும், அறிவுக்கும் இங்கிலீஷ் பாஷையும், மற்றவர்களுக்கு சேவைசெய்ய இந்தியோ லத்தீன் அல்லது சமஸ்கிருதமோ கற்றுக் கொள்ள வேண்டியவர்களாகச் செய்யப்பட்டிருக்கிறது.

பழைய தேசிய மகான்கள் உருவத்தை தாங்கி வரும் ஸ்டாம்புகளில் அவர்களின் பெயரை பெரும்பாலோர் அறியாவண்ணம் இந்தியில் பொறிக்கப் பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது ஒரு தமிழருக்கோ, தெலுங்கருக்கோ, மலையாளத்தாருக்கோ, கன்னடத்தாருக்கோ, வங்காளியருக்கோ, மார்வாரி, குஜராத்திக்காரருக்கோ என்ன எரிச்சல் இருக்கும் என்பதை இந்த குட்டிச் சாத்தான்கள் நினைக்கவில்லை.

நம் தலைவர்கள் சொன்னதைப்போல், ஒவ்வொரு தலை நகரங்களிலும், ஒவ்வொரு தலைவரின் தலைமை இடங்களிலும், ஒரு இந்தி ஆரம்பப் பள்ளிக்கூடம் முதல் காலேஜ் வரை வைத்து தேவையுள்ளவர்களும், இஷ்டமுள்ளவர்களும், ஒரு செலவு மின்றிப் படித்து டிகிரி வாங்கிக்கொள்ளலாம் என்று முழு செலவையும் அரசாங்கத்தாரே ஏற்று நடத்தியிருக்கும் பட்சத்தில், ஒருவரும் சொல்லாமலும், கட்டாயப் படுத்தாமலும், இப்போது இருக்கும் அருவருப்புக்குப் பதில் பிரியத்தோடும், உற்சாகத்தோடும் அதிகம்பேர் இந்தியைக் கற்று அதை உபயோகத்துக்கும் கொண்டுவந்திருப்பார்கள். நாள் ஆக ஆக ஆங்கிலத்தைப் போலவே இந்தியும், தரம் உயரும்போது தானாக பொதுப் பாஷையாக மாறிவிடும். அதுவரை பொது அறிவை வளர்க்கக் கூடிய ஆங்கிலப் பாஷை தாய்மொழியோடு தெரிந்த

இரண்டாவது பாஷையாக இருந்துதான் தீர வேண்டும், தாய்மொழியே எல்லாவற்றிலும் சிறந்தது என்பதைச் சொல்ல முன்வரவில்லை. அநேக தாய்மொழிகளில் நம் தமிழ் மொழியைப் போல் சிறந்தது வேறு ஒன்றும் இல்லை. ஆனால் இதைப்பற்றி ஒரு சமயத்தில் மிக மோசமாக என் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறேன் :

"சங்கீதம் நோயைக் கொடுக்கிறது, சோதிடம் வியாதிகளையும் உடனடிச் சாவையும் கொடுக்கிறது. கடவுளும், மாயா ஆவிவாதங்களும் நம்மைப் பைத்தியமாக ஆக்குகிறது" என்ற தலைப்பின் கீழ் தொடர்ச்சியாக சொற்பொழிவு ஆற்றினேன். அதில் தமிழையும் கூட மிகவும் கண்டித்துப் பேசியிருக்கிறேன். அவ்விதம் பேசியது எனக்குத் தமிழ் பேரில் உள்ள வெறுப்பல்ல! இக்காலத்தில் தமிழ் என்னும் தேன் மொழியைக் கொண்டு எவ்வளவு ஆபாசமான கதைகளில் போதையிலிருப்பவர்கள் நினைப்பது போன்றுள்ள மனோராஜ்ய கனவுகளை புகுத்தி, நம் இளைஞர்களை கவைக்குதவாதவர்களாகச் செய்துக் கொண்டு வருகிறார்கள். தமிழில் ஒவ்வொருவருக்கும் நன்மை பயக்கக்கூடிய அறிவுரைகள் எவ்வளவு இருந்தனவோ அதைவிட இன்று நூறு மடங்கோ ஆயிரம் மடங்கோ அசுத்தமான நூல்கள் தமிழில் புகுந்துவிட்டது. தமிழ் படிக்கப்புகும் எவருக்கும் இவ்வளவு குப்பைகளில் கலந்திருக்கும் மாணிக்கங்களை பொறுக்கி எடுக்க முடியாதலால் கெட்ட நூல்களின் குணம் வளர்ந்துவருகிறது.

மற்ற இயந்திர சாதனங்களுக்காக பெருவாரியாக நம் மூலதனம் அன்னிய நாடுகளுக்குச் செல்லுவதுபோல், மருந்து வகைகளையும் நாம் வருடா

வருடம் எவ்வளவு கோடி ரூபாய்க்கு அயல் நாடுகளி லிருந்து வாங்குகிறோம். நம் நாட்டிலேயே இம் மருந்து வகைகளை தயாரித்து நம் செல்வம் வெளி யில் போவதைத் தடுக்க முடியும். நாட்டு வைத்தியம் பலரால் அலட்சியம் செய்யப்பட்ட போதிலும், ஆயுர்வேதம், சித்தவைத்தியம், யுனானி முறை இவைகளால் சரியானபடி தயாரிக்கப் பட்ட மருந்துகளுக்கு ஈடாகவும், சரியான பலனைக் கொடுக்கக்கூடியதுமான மருந்து வேறொன்றும் உலகத்திலேயே இல்லை. பலவித ஆராய்ச்சிகளை நடத்தி கண்டுபிடிக்கப்பட்ட மேலை நாட்டு மருந்துகள் மிகவும் உபயோகமுள்ளது என்பது என்னவோ உண்மைதான். நம் நாட்டிலும் அம்மாதிரியான ஆராய்ச்சிகளை நடத்துவதற்குப் போதிய சாதனங்களோ அல்லது ஸ்தாபனங்களோ, சிரத்தையோ இல்லை. மேலை நாட்டிலுள்ளவர்கள் சிரத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்துகிற மாதிரி நாமும் நம் நாட்டு மருந்துவகை களில் தீவிரமாக ஆராய்ச்சி செய்யப் புகுந்தால் நாம் காணும் முடிவு அதியர்புதமாகவும், ஈடு இணையற்ற தாகவும் விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த எண்ணம்தான் ஒரு ஆராய்ச்சி சாலையை நிறுவ என்னைத் தூண்டியது. இந்த ஆராய்ச்சி சாலையில், வெளிநாடுகளிலுள்ள பல ஆராய்ச்சி நிலையங்களில் பலகாலம் சேவை செய்த டாக்டர் B. P. B. நாயுடு என்பவர் நாட்டு மருந்துகளில் ஆராய்ச்சி நடத்துகிறார். இங்கு நடத்தப்படும் ஒவ்வொரு ஆராய்ச்சியின் முடிவும், வேறு இடங் களில் நூறு வருடங்கள் தொடர்ந்தாற்போல் செய்து கண்ட முடிவைவிட சிறந்ததாக இருக்கிறது.

உதாரணமாக, டாக்டர் நாயுடு அவர்கள் இரண்டு வருஷ காலம் கடுமையாக முயன்று உழைத்ததின் பயனாக 100-க்கு 75 பெண்களுக்கு வந்து கஷ்டப் படக்கூடிய லுகோரியா (Leucorrhoea) என்னும் வியாதிக்கும், மிகச் சாதாரணமாகக் கஷ்டப்படுத்திக் கொண்டும், மூத்திரத்தில் அதிக சக்கரையையும் அதனால் நீரிழிவு, ராஜ பிளவை முதலிய வியாதி களை உண்டாக்கும் டையாபடீஸ் (Diabetes) என்னும் வியாதிக்கும், வெவ்வேறு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வியாதிகள் பூரணமாகக் குணமாவதற்கு இதற்குமுன்பு எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. அப்படி ஏதா கண்டுபிடிக்கப்பட்டிருப்பினும், அது தற்காலிக நிவாரணம் கொடுக்குமே தவிற, வியாதியை பூரண மாகக் குணப்படுத்துவதில்லை. ஆனால், நம் டாக் டர் நாட்டு மருந்துகளில் நடத்திய ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கூறிய இரண்டு மருந்து களும் வியாதியைப் பூரணமாகக் குணப்படுத்தி யிருக்கின்றன.

நீரிழிவு வியாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டி ருந்த ஒரு சிலருக்கு இங்கு புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்ட நாட்டு மருந்தை பரீட்சார்த்தமாகக் கொடுத் துப் பார்த்ததில் நூற்றுக்கு நூறு பலனளித்து வியாதியைப் பூரணமாகக் குணப்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். பெண் களுக்கு ஏற்படும் லுகோரியா என்னும் வியாதியைக் குணப்படுத்த கண்டுபிடிக்கப்பட்ட மருந்தையும், பரீட்சார்த்தமாக அந்த வியாதியால் பீடிக்கப்பட்ட 300 பெண்களுக்குக் கொடுத்துப் பார்த்ததில், பெரும்பாலானவர்களுக்கு ஆறே நாட்களில் பூரண

மாக குணமேற்பட்டது. மற்ற சிலருக்கு வேறு வியாதிகளும் இருந்ததால் குணமேற்படவில்லை.

உங்களுடைய சங்கத்துக்கு 'சதர்ன் ரயில்வே மென் யூனியன்' என்று பெயர்வைக்க எண்ணம் வந்ததைப்பற்றிச் சந்தோஷப்படுகிறேன். ஆனால், இந்த யூனியனுக்கும், தென்னிந்தியாவுக்கும் சுதந்தரம் வரும்போதுதான் நாம் எல்லோரும் சந்தோஷப்படவேண்டும். அதுவரையில் எந்தக் கஷ்டம் வந்தாலும் அதைப் பொறுத்துக்கொள்ளத்தான்வேண்டும். இதற்கு மார்க்கம் ராமசாமி பெரியாரும், அண்ணாத்துரையும் காட்டும் வழியை ஆராய்ந்து அவற்றில் பொருத்தமானவற்றை நடைமுறையில் கொண்டுவருவதுதான் சிறந்தது என்று நான் நினைக்கிறேன். இந்தக் கட்சிகளில் அனுசரிக்கப்படும் சில கொள்கைகள் எனக்குப் பிடிக்காவிட்டாலும், இப்போதிருக்கும் காலநிலையைப் பார்த்து, அவர்களைப் பின்பற்றுவதுதான் சரி என்று எனக்குத் தோன்றுகிறது.

இப்பொழுதிருக்கும் காங்கிரஸ் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும், கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும், திராவிடக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், திராவிட முன்னேற்ற கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளையும், சோஷலிஸ்ட் கட்சியின் அடிப்படைக் கொள்கைகளையும் கூர்ந்து பார்த்தால், எல்லாம் அநேகமாக ஒரே மாதிரி கொள்கைகளைத் தான் கொண்டிருக்கின்றன என்பது தெரியவரும். ஆனால், இப்பொழுதிருக்கும் சண்டை இந்தக் கொள்கைகளை பாரபட்சமின்றி, நேர்மையாகவும்,

நீதியாகவும், தேவைக்குத்தக்க அளவு விரைவிலும் நடத்தப்படவில்லை என்பதைப் பற்றித்தான், ஒவ்வொரு கட்சியும் வாதம் புரிகின்றன.

இப்பொழுது பதவியிலிருக்கும் அரசியல் கட்சி, நிறைந்த அங்கத்தினர்களைக்கொண்ட பரந்த பெரிய கட்சிதான். இதைவிட்டு வேறு எந்தக் கட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் இதைவிட மோசமாகவும் இருக்கலாம், அல்லது இதைப்போலிருந்தாலும் இருக்கலாம். நாம் செய்யவேண்டியது இன்று அரசியலில் இருக்கும் ஊழல்களை நீக்குவது ஒன்றுதான். எந்த இடத்திலும் ஊழல் நீங்கினால் மீதமிருப்பது நன்மைதான் என்பது இயற்கை.

நம்முடைய தொழில்கள் எல்லாம் ஜீரணம் அடைந்துவரும்போது நம் ராஜதானியில் 5 கோடி ரூபாய் கடன் வசூலித்ததைப்பற்றி அரசியல் தலைவர்களும், அதிகாரத்திலுள்ள அரசியல் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகளும் அடைந்த குதூகலத்திற்கு அளவில்லை. இது தவிர, ஆங்காங்குள்ள ஆபீசர்கள் ஏதோ கொஞ்சம் வைத்திருப்பவர்களிடமிருந்து கசக்கிப்பிழிந்த தொகையும் சேர்ந்திருக்கிறது. இதை ஆங்காங்கு விசாரித்தால் தெரியும். அரசியலின் பேரில் அளவு கடந்த மதிப்பும் நம்பிக்கையும் இருந்தாலும், தவப்பயனாய் மழைபெய்து நாட்டில் செல்வம் கொழித்ததனாலும், எதிர்பார்த்ததைவிட மிகக் குறுகிய காலத்தில் ஒன்றுக்கு இரண்டு மடங்கு கடன் தொகை வசூலாய்விட்டது, என்று பலவாறு சொல்லி ஆனந்த சாகரத்தில் குதித்தார்கள். அநேகத் தொழில் நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள், இந்தக் கூத்துக்களை ஆமோதித்தும்,

பல காரணங்களைச் சொல்லி எதிர்த்தும் எழுதி வந்திருக்கிறார்கள். ஆனால், எனது அபிப்பிராயம் மட்டிலும் அன்று முதல் இன்று வரை யோசித்தும், எவ்வளவோ நடுநிலைமையில் மனதை நிறுத்தி யோசித்துங்கூட, கடன் சேர்ந்ததற்குக் காரணம் வருமானவரி விதிக்கும் முறையில் அரசாங்கம் அனுசரித்த கொள்கைதான் என்று தோன்றுகிறது.

எனக்கும் வருமானவரி இலாகாவிற்கும் ஒத்து வராததால் இப்படிச் சொல்லுகிறேன் என்று அரசியல் கட்சியிலுள்ளவர்களும், அந்த இலாகாவில் உள்ளவர்களும், ஏன், இங்குள்ளவர்களில் சிலருங் கூட சொல்லலாம். நான் அந்தக் கண்ணை மறைத்து விட்டு, தொழில் கண்ணினால் பார்த்துச் சுருக்கமாக சொல்லுகிறேன். இப்போதுள்ள வருமான வரி விகிதம் 10, 20 ஆயிரம் தொகைகளுக்கு மிக குறைந்ததாகவும், லட்சக் கணக்கில் வரும்போது மிக உயர்ந்ததாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எவ்வளவு உண்மையான கணக்குகளை காட்டினா லும், "நீங்கள் அற்பர்கள். உங்கள் கணக்கை நம்ப மாட்டோம். எங்கள் இஷ்டப்படிதான் வரி விதிப்போம்" — என்று சொல்லுகிறார்கள். தாங்கள் எவ்வளவு சின்ன பையன்கள் என்பதை எண்ணாதபடிக்கு, அதிகார மமதையும், மேல் பதவிக்கு போகவேண்டும் என்ற பேராசையும் கொண்டு, பார்க்கக் கண்ணிருந்தும், எண்ணிப் பார்க்க மூளை இருந்தும், உண்மை தெரிய சாதனங் கள் இருந்தும், குருட்டுக் குதிரை பாய்கின்ற மாதிரி ஆயிரத்திற்கு 10 ஆயிரமும், 10 ஆயிரத்திற்கு லட்சமுமாக வரி விதிப்பது ஒன்று, இந்த வரி விதிப்புகளின்பேரில் ஒரு மடங்கு, இரு மடங்கு அபராதம் விதித்தாலும், அதை வசூலிக்க

எடுத்துக்கொள்ளும் ராக்ஷச வழிகள் இரண்டு, ஆகிய இவைகள் தான் இன்றைக்கு அரசாங்கம் கடன் கேட்டால் உடனே கிடைக்கவும், தினமும் வேலை இல்லாத் திண்டாட்டம் என்கின்ற பேய்கள் புதிது புதிதாக உண்டாகவும் காரணம் என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

சில லட்சம் ரூபாய் லாபம் சம்பாதிக்கும்போது, ஒரு ரூபாய்க்கு 12 அல்லது 14 அல்லது 15½ அணாக்கள் கூட வரிக்காக தொலைக்கவேண்டும் என்று இருப்பதால், தொழில்செய்யும் எண்ணமும், சம்பாதிக்கும் எண்ணமும் தானாகவே குறைந்துவிடுகிறது. 5 லட்சம் லாபம் சம்பாதிக்க, அநேக லட்சத்துக்கு பொறுப்பு ஏற்று, வியாபாரம் செய்து, சம்பாதித்து, 5 லட்சத்தில் சுமார் 4½ லட்சம் வரி கொடுத்துவிட்டு, 50 ஆயிரம் ரூபாயோடு வருவதைப்பார்க்கிலும், ஒரு லட்சத்துக்குப் பொறுப்பெடுத்து, அந்த அளவில் பிளாக் மார்க்கெட் செய்து, லட்சம் ரூபாய் சம்பாதித்தால், 100-க்கு 100-ம் தானாகவே லாபமாகின்றது என்றும், வரியும் கொடுக்கவேண்டியதில்லை என்றும் இத்தகைய காரியம் செய்கின்றார்கள். யோக்கியமாகவும் நாணயமாகவும் கணக்குவைத்து 'ரிட்டர்ன்' கொடுக்கிறவருக்கு அதை எவ்விதத்திலோ தங்கள் போக்காக இரு மடங்கு, மும்மடங்கு செய்து, வரிபோட்டு பிச்சைக்காரர்களும்கூட வெட்கும்படியான கேள்விகளைக்கேட்டு அனுப்புவதால், யோக்கியமானவர்களும்கூட பொய்க் கணக்கு எழுதத் துணிந்துவிடுகிறார்கள்.

இந்த நிலையில் இருக்கும்போது யாருமே அநேகவித பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு வியாபாரம் செய்யத்துணிவதில்லை. அநேகரிடம், பணம்

முடங்கி, கையிலோ, பாங்கிலோ கிடப்பு விழுந்துவிடு கிறது. தவிற, பாங்குகளிலும் வட்டி அதிகம் கிடைப்பதில்லை. இப்போது நாணயமின்மையும், நம்பிக்கைமோசமும் பெருகிவிட்டதால், வெளியில் கடன் கொடுத்தால் சாதாரணமாக திரும்பிவருவதும் இல்லை. தொழிலில் போடவோ, தொழில் மந்தத் தாலும், தொழிலாளிகள் கொடுக்கும் துன்பத்தாலும், மற்றும் அரசாங்கம் இழைக்கும் பலவித துன்பங்க ளாலும், பணத்தை மேற்கொண்டு தொழிலில் போடு வதில்லை. இந்தக் காரணங்களால் கோயமுத்தூரில் மாத்திரம் சுமார் 2 கோடி ரூபாய் உபயோகமின்றிக் கிடக்கிறது என்றால் யாரும் நம்பமாட்டார்கள். ஏன்! 100-க்கு 4 ரூபாய் வட்டி தவறாமல் கிடைக் கிறது என்று தெரிந்தவுடன், தூங்கிக்கொண்டிருந்த பணம் மள மளவென்று அரசாங்க கடன் பத்திரங் களுக்கு வந்து குவிந்தது.

•

சாதாரணமாக, பாங்கில் டிபாசிட்டில் போட்டு வைத்திருப்பது என்கிற முறை, நியாயமாகத் தொழி லில் சம்பாதிப்பவர்கள் சவுகரியமாகப் பணத்தை வைத்திருப்பதற்கு என்று சொல்லாம். ஆனால், பிளாக் மார்க்கெட்டில் சம்பாதித்த பணத்தை வைத் திருப்பதற்கு எந்தவிதமான வழிகளும் அமைய வில்லை. இந்த சர்க்கார் கடன் பத்திரங்கள் அதற்கு வெகு சாதகமாயுள்ளது. கவர்ன்மெண்டாரே, இந்த பிளாக் மார்க்கெட்காரர் பேரிலுள்ள கருணையாலோ, அல்லது அவர்கள் சூழ்ச்சியை அறியாது ஏமாந்த தாலோ அத்தகைய கடன்பத்திரங்களில் ஈடுசெய்யும் முறையை வகுத்திருக்கிறார்கள். இதனாலும் பிளாக் மார்க்கெட் பணம் பெருவாரியாக இந்தக் கடனுக்கு வந்து குவிந்தது. இதனால்தான் தொழில்களில்

ணக்கம் குறைந்து, அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துவருவதற்கும் காரணம் என்பது ஆழ்ந்து யோசித்துப்பார்த்தால் விளங்கும் என்று நம்புகிறேன். இன்னும் இதைப்பற்றி எங்காவது சந்தர்ப்பம் கிடைக்கும்போது மிக விரிவாகவும், விளக்கமாகவும் சொல்ல விரும்புகிறேன்.

இந்தச் சொற்பொழிவுக்குப்பின் எனக்கு அரசாங்கம் தொந்தரவு கொடுக்கக்கூடும். ஒரு சமயம் வெளிப்படையாகத் தொந்தரவு கொடுக்காமற் போனாலும், மறைமுகமாக இருந்து என்ன வேலை செய்யவேண்டுமென்றாலும் அதற்கு அரசாங்கத்தில் ஆட்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்குப் பயம் இல்லை. வீடு-வாசல் வேண்டுமென்று, அல்லது சொத்து வேண்டுமென்று பேராசையிருப்பின் அவர்களைத் தொங்கிகொண்டும், அவர்களுக்குக் கூட்டிக் கூட்டிக் கொடுத்துக்கொண்டும் • இருக்கவேண்டும், அல்லது இதுவரை ஏதாவது சம்பாதித்துவைத்திருந்தால் அதையாவது காப்பாற்றி வைக்கவேண்டுமே என்ற எண்ணம் ஏதாவது இருந்தாலும், பிளாக் மார்க்கெட் செய்திருந்தாலும், பொய்க் கணக்கு வைத்திருந்தாலும் அவர்களைக் கெஞ்சிக்கொண்டு இருக்கவேண்டும். ஏறக்குறைய 60 வயதுவரை தொழில் செய்தும், கற்றும், அதன் பலன்களை பயன்படக்கூடிய வகைகளில் உபயோகித்துவந்தும் ஆகிவிட்டது. இன்னும் ஏதாவது உபயோகமுள்ளவற்றை செய்யலாமென்றுதான் இருந்தேன். ஒரு இன்கம் டாக்ஸ் ஆபீசருக்கு பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் கொடுக்காத குற்றத்திற்காக, நமது மேன்மை தங்கிய சர்க்காருக்கு உடல், பொருள், ஆவி என்ப மூன்றில், இங்கு நிற்கின்ற உடல் தவிர்த்து பாக்கியை அர்ப்பணம் செய்தாகிவிட்டது. ஆகையால், எந்த

பயமுமின்றி இன்றைக்கு அரசியல் விஷயங்களையும் கலந்து பேச வந்திருக்கிறேன்.

இன்கம் டாக்ஸில் லஞ்சம் கொடுக்காத குற்றத்துக்காக என்பேரிலும், என்னுடைய கம்பெனிகள் பேரிலும் 69 லட்சம் ரூபாய் வருமானத்தை ஏமாற்றி விட்டதாக ஹைகோர்ட்டுவரை சொன்னார்கள். இதன் நடுவில் ஒருவர் நான் கொடுக்கவேண்டியது $2\frac{1}{2}$ லட்சம் என்றும், இன்னும் ஒருவர் $3\frac{1}{2}$ லட்சம் என்றும், பின்னொருவர் 7 லட்சம் என்றும், அதன்பின் ஒருவர் இந்த வரியே முழுவதும் தப்பு, கெட்ட எண்ணத்தோடு விதித்தது என்றும் சொன்னார்கள். "ஏதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். பத்து லட்சம் கொடுத்து ஒழித்துவிடு" என்று ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜு சொன்னார். மற்றொரு உத்தியோகஸ்தர் வருமான வரி விதித்ததே தப்பு என்றார். இன்னொருவர் 17 லட்சம் என்றார். அதன்பின் ஒருவர் 50 லட்சத்துக்கு ஒப்புக்கொள்ள முன்வந்தார். அதன்பின் ஒருவர் $7\frac{1}{2}$ லட்சத்துக்கு ஒப்புக்கொள்ள முன்வந்தார். அதன்பின்பு 10 அல்லது 12 லட்சம் இருக்கும் என்று நினைத்தபோது, 14 லட்சமாய் விட்டது. இவ்வளவும் ஆனபின்பாவது நான் முதலில் வைத்திருந்த கணக்கு சரிதான் என்று ஒப்புக் கொண்டது எனக்கு ஒரு விதத்தில் திருப்தி. அந்த திருப்தியில் நண்பர் ஆர். வி. சாமிநாதன்போன்ற பல நண்பர்களுடைய வலுக்கட்டாயத்தின்பேரில் நான் இதுவரை ஏதாவது சம்பாதித்திருப்பின் அவை முழுவதுக்குமுள்ள தஸ்தாவேஜுகளை வருமான வரி இலாகாவில் ஒப்புவித்துவிட்டேன். ஆனால் அந்த வரி மட்டிலும் வெள்ளம் பெருகுகின்ற மாதிரி இன்னும் பெருகிக்கொண்டேதான் இருக்கிறது. இந்த வெள்ளப்பெருக்கை ஈடு செய்வதற்காக நான் இனிமேல்

ஏதாவது சம்பாதித்தாலும்கூட அவை அதற்கே சேருமென்று எழுதிக்கொடுத்துவிட்டேன். ஆனால் இந்த வரி வளர்ச்சி நின்ற பாடில்லை. 20 அல்லது 22 லட்சம்வரை இருக்கிறது. நன்கொடையாக காலேஜ்களுக்கும், பாலிடெக்னிக்குகளுக்கும் இன்னும் சில ஸ்தாபனங்களுக்கும், என் குடும்பத்திற்கும் கொடுத்திருப்பதையும்கூட அவர்கள் திருப்பி வாங்கிக்கொள்ள ஏற்பாடுசெய்து கொடுத்திருக்கிறேன். அதில் என் மனைவிக்குக் கொடுத்ததை திருப்பி எடுத்துக்கொள்வதற்குச் சாதகமாக எங்களுக்குள் விவாகரத்தும் செய்தாகிவிட்டது. இந்த நிலைமையிலிருக்கும்போது, வருமான வரியை ஏமாற்றுவதற்காக என் மனைவிக்குச் சொத்துக்களைக்கொடுத்து தள்ளி வைத்துவிட்டதாகவும், "சப்ரெசர்" (Suppressor), "பிளாக்மார்க்கட்டீர்" (Black-marketeer) என்ற 'டைட்டில்'களைக்கொடுத்து விளம்பரம் செய்திருக்கிறார்கள்.

இதுவும் தவிர, நான் இங்கிலாந்துக்கு சென்று வந்த பொழுது, நம் நாட்டிற்கு உபயோகமானதும், நம் நாட்டுச் செல்வத்தை நம் நாட்டிலேயே நிறுத்துவதற்கு ஏதுவானதும், லட்சக் கணக்கில் மதிப்புள்ளதுமான நூதன தொழில் சாதனங்களை கொண்டுவந்ததற்காக, லட்சம் ரூபாய்வரை அபராதம் போட்டதையும், ரிசர்வ் பாங்கில் எவ்வாறு, யாருக்கு, எதற்கு, டாலர்களும், ஸ்டர்லிங்குகளும் கொடுக்கிறார்கள் என்பதைப்பற்றியும், டில்லியில் ஒரு வாரத்தில் 3 கோடிக்கு டாலர் லைசென்சு கொடுத்திருக்கும்போது, நம் சென்னை ராஜ்யத்திற்கு எதற்காக அதே வாரத்தில் ரூபாய் அறுபத்தொன்பதாயிரத்துக்கு மட்டும் லைசென்சுகள் கொடுத்தார்கள் என்பதைப்பற்றியும், டில்லியி

லும், அதைச் சார்ந்த இடங்களிலும் என்னென்ன ஊழல்கள் நடக்கின்றன என்பதைப்பற்றியும், சென்னையில் அல்லது கோவையில், கூட்ட இருக்கும் கூட்டத்திலோ, திவாலி கான்பரென்ஸ் அல்லது (Income-tax sufferers Conference) அதாவது வருமானவரித் தொல்லைகளால் கஷ்டப்படுகிறவர்கள் மகாநாடு என்று நடக்கும் கூட்டத்திலோ முழு விவரங்களையும் நான் சொல்ல இருக்கிறேன்.

மற்றும் ரெட்டேபிசம், (Red-tapism) பூதான இயக்கம், அரசாங்க ஆதிக்கத்திலிருக்கும் தற்போதைய கல்வி முறை, கைத்தொழில், விஞ்ஞானிகளையும் தொழில் வல்லுனர்களையும் தேசவுடமையாக்குவது, தொழிலமைப்பும் நிர்வாகமும், மருத்துவம், வியாபார ஸ்தாபனங்கள், கல்விப் படங்கள், குற்றம் கண்டுபிடிப்பவர்கள், போக்குவரத்து, துணி மில்கள், இன்ஷூரன்ஸ், மோட்டார் கார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, இரும்புத் தொழிற்சாலை, ரோடு ட்ராபிக் போர்டு, சைக்கிள் தொழிற்சாலை, ஆரோக்கிய உணவு இவைகளைப் பற்றி ஒரு சிறிதாவது கூறவேண்டும் என்பது என் எண்ணம். ஆனால் நேரமில்லாததால் அவைகளை பிறகு வேறு சந்தர்ப்பங்களில் கூறுகிறேன்.

கடைசியாக இதோடு தென்னிந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் முழுச் சுதந்திரம் அடைய எந்தத் தியாகமும் எப்பொழுதும் செய்யத் தயாராக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இது வரை நீங்கள் பொறுமையோடு இருந்ததற்கு சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டு என் சொற்பொழிவை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

வணக்கம்.

U—93—93